ஸ வா வஸ்ஷ ஶஹா நஜ சூத்ரா (பிரு. சூ. ச. உ)

"இந்த ஆன்மா பெரியதும் பிறவாததும்" என்னுஞ் சுருதி ஆன்மாவை வியாபகன் என்று கூறுதலானும்,

சுஹ0 விஶ்வ0 ஹ்வந ஶ்ருஹவ்ழ (தைத். நா. க0. சு)

"நான் பிரபஞ்சம் அனைத்தையுங் கடந்துள்ளேன்" என்னுஞ் சுருதி அவன் வியாபகத்தினைற் சமஸ்த புவனத்தையுங் கடந்துள்ளான் என்று கூறுதலானும், எப்பிரகாரத்தானும் இந்த ஆன்மா வியாபகன் என்று பெறப்பட்டதாம் எனின்,

(சித்தாந்தம்) இந்த ஆன்மா அணுவினனே; உற்கிராந்தி கதி, ஆகதிகள் கேட்கப்படலான்.

தெந வ்ரஜ்யாதெ நைஷ சூத்ர நிஷ்க்ரமதி।
(பிரு. சூ. ச. உ)

"அந்த மினு மினுப்போடு ஆன்மா புறப்படுகின்றது" என்னுஞ் சுருதியில் உற்கிராந்தியும்,

யெ வைகெ சாஸ்மால்லோகா ப்ரயந்தி சந்த்ரமஸமெவ தெ முஹ்யந்தி।
(கௌஷீ. க. உ)

"இவ்வுலகத்தைவிட்டுப் போகின்றவர் சந்திரனை அடைகின்றனர்" என்னுஞ் சுருதியினால் அவனது போதலும்,

தஸ்மால்லோகாத் புநரெத்யாஸ்மை லோகாய கர்மணெ।
(பிரு. சூ. ச. சு)

"அந்த உலகத்திலிருந்து கன்மத்தின்பொருட்டு இவ்வுலகத்துக்குப் பின்னர் மீண்டு" என்னுஞ் சுருதியினால் அவனது மீளுதலும் கூறப்படுகின்றன. ஆன்மா வியாபியாயிருப்பின் அவன் வெளியேறலும் போதலும் மீளுதலும் பொருந்துமாறில்லை. (உ0)

ஆன்மா வியாபியாயிருப்பினும் சரீரத்தை விடுவதே உற்கிராந்தியாகலாம். அங்ஙனமாயினும் போதலும் மீளுதலும் இங்ஙனம் ஆகா என்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

ஸ்வாத்மநா சொத்தரயோஃ (உ. சூ. உக)

(உகூ) பின்னுள்ள இரண்டும் தன்னால் (முடிக்கப்படுதலினாலும்)

பின் உரைக்கப்பட்ட போதல் மீளுதல் இரண்டும் அன்றித் தெளிவு முடிக்கற்பாலனவாதலின், இந்த ஆன்மா அணு.

ஶ்ருதேஶ்ச சூத்ரம் (பிரு. சூ. சா. உஉ)

"ஆன்மா பிறவாதவன் பெரியவன்" என்னுஞ் சுருதி ஈசுரப் பிரகரணத்தில் வருதலான் அது ஆன்மாக்களைக் குறிக்காதென்று கூறுவர். உலகமுவனைத்தான் வியாபித்தலினால் அவன் கடந்துள்ளான் என்றமை மல மறைப்பு நீங்கியகாலத்து வெளிப்பட்ட சத்தி ஒளியானது வியாபித்தது என்னும் சீவன்முத்தனது விஷயமாம். ஆகலின், ஆன்மா அணுவே. (உசு)

ஆசங்கித்துப் பரிகரிக்கின்றனர்.

நாணுரபஹ்ரேதெ ரிதி செஞெகராயிகாராசு।

(உ. கூ. உஉ)

(உகஅ) சுருதி வேறுபடக் கூறுதலான், அவன் அணுவினன் அல்லன் எனின், அன்று; அது வேறு அதிகரணத்ததாதலின்.

(ஆக்ஷேபம்)

ஸ வா வாஷி ஶஹா நஜ சூத்ரா (பிரு. சூ. சா. உஉ)

"ஆன்மாவோ மகானும் அஜனும்" என்னுஞ் சுருதி ஆன்மா அணுவினனல்லன் என்று கூறுகின்றதெனின்,

(உத்தரம்) அன்று;

யஷ்யாநுவித்தஃ பரிவேதஸ சூத்ரா (பிரு. சூ. சா. கஉ)

"ஆன்மாவை அறிந்து தியானிப்பவன்" என்று தொடங்கிச் சிவபெருமானையுற்றுப் பேசும் அதிகரணத்தில் அச்சுருதி காணப்படலான். (உஉ)

வ்யதிரேகாநவஸ்திதேஶ்ச நாநபேக்ஷத்வாத் (உ. கூ. உகூ)

(உகக) சுவசப்தத்தினாலும் உன்மானத்தினாலும்.

வாலாzணுரேஷ ஆத்மா சேதஸா வேதிதவ்யோ யஸ்மிந்ப்ராணஃ பஞ்சதா விவேஶ (முண். கூ. க. கூ)

"எவனிடத்தில் ஐந்து பிரகாரமாய்ப் பிரவேசித்ததோ, அவ்வணுவாகிய ஆன்மா மனத்தால் அறியற்பாலன்" என்னுஞ் சுருதியில் அணு என்னும் பதம் கூறப்படலானும்,

ஶ்ராத்ர ஶப்தேப்ரஹ்மவ ரோஹிதேஷ் (சுவே. உ. அ)

"பிரமனும் மூப்போனின் நரி அனைனையும் காணப்படுவோமாக" என்னுஞ் சுருதியில் உள்ளதும் உபயமடலானும், அதில் அணு

வுக்கொப்பாகிய வஸ்துவை உதகரித்து அதன் அளவை எடுத்துக் காட்டு வதே உன்மானம். (உசூ)

ஆன்மா சிறிதாயிருந்தாற் சரீரமுழுதும் வியாபிக்கும் அனுபவவுணர் ச்சி எங்ஙனமாம் எனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஈவிரோயாஸ்ஷு நவஸு (உ. சூ. உச)

(உசo) சந்தனம் போல விரோதமின்று.

சந்தனமிந்து ஒரிடத்திருப்பினும் தேகம் முழுதும் வியாபித்துச் சுகம் பிறப்பிக்கின்றது; அது போல, விரோதம் இன்று. (உச)

பின்னருஞ் சூத்திரகாரர் ஆசங்கித்து உத்தரம் இறுக்கின்றனர்.

ஈவஸ்லிதி வெலொஷ்யாதிதிசெஹாஜ்ஞாவஹரோஜ்ஞாதி ஹி (உ. சூ. உஞ)

(உசக) குறிப்பிட்ட ஓரிடமிருப்பதினாற் பொருந்தா தெனின், அங்ஙனமன்று; இதயத்திலேதான் ஆன்மாவுக் கிடம் ஒப்புக்கொள்ளப்படலான்.

(ஆக்ஷேபம்) குறிப்பிட்ட ஒரிடத்திருப்பதினாற் சந்தனம் போல எனல் பொருந்தாதெனின்,

(உத்தரம்)

ஹ்ருதிஹ்யயோ தா (பிர. சூ. சு)

"இதயத்திலே இந்த ஆன்மா உளது"

யொzயo விஜ்ஞாநமயஃ ப்ராணேஷ்வஹ்ருதயேஜ்யாஃதிஃ வ்யோஷ்ஃ (பிரு. சூ. சூ. எ)

"இவன் விஞ்ஞானமயனுய்ப் பிராணன்களுள்ளே இருதயத்து அந்தர்சோதி யாயுள்ள புருஷன்" என்று சுருதி கூறுமாறு ஆன்மாவுக்கு ஓர் ஸ்தானம் அங்கீகரிக்கப்படுதலின், அது பொருந்தாதென்பர் சிலர். (உஞ)

சூத்திரகாரர் தம்மதத்தைக் கூறுகின்றனர்.

குணாத்வா லோகவத் (உ. சூ. உசு)

(உசஉ) அல்லது ஒளியைப் போற் குணத்தினால்.

ஆன்மா சுவகுணமாகிய ஞானத்தினால் தேகம் எங்கும் வியாபித்து அநுபவிக்கின்றது; இரத்தினமானது தன் ஒளியினால் தனக்குச் சமீபித் துள்ளதையும் வியாபித்து விளக்குமாறு போலாம். ஆகலின் விரோதம் இன்று. (உசு)

ஞானத்துக்கும் ஆன்மாவுக்கும் பேதமில்லையெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

வ்ருதிரெகோ ம0யவத்தயாஹி ஶ்ரு-ய்தி (உ. சூ. உள)

(உசூசு) கந்தத்திலே போலப் பேதமுளது; அங்ஙனஞ் சுருதி கூறுகின்றதன்றே.

பிருதிவி கந்தமுடையது என்பது போல, நான் அறிகின்றேன் என்றவிடத்து, ஞானம் ஆன்மாவுக்குக் குணமாகக் கொள்ளப்படுகின்றது. அங்ஙனம் ஞானத்துக்கும் ஆன்மாவுக்கும் பேதம் உண்டு.

ஜாநாதீ்வாய0 வ்ரூ்ஷி0।

"இந்த மனிதன் அறிகின்றனன்" என்னுஞ் சுருதியும் பேதத்தைக் காட்டுகின்றது. (உள)

வ்யதி்ரேகெஶாத் (உ. சூ. உஅ)

(உசூச) வேறுகக் கூறப்படலான்.

நஹிவிஜ்ஞாது் விஜ்ஞாதெ விபரிலொவொ வித்யதெ।

(பிரு. சு. சூ. சூ0)

"அறிஞனுக்கு அறிவு உலோபமில்லை" என்னுஞ் சுருதியினல் ஆன்மாவுக்கு வேறுக ஞானம் உபதேசிக்கப்படுகின்றது. இங்ஙனம் நித்திய ஞானகுணமுடையன் ஆன்மா என்பது சித்தம். (உஅ)

ஆன்மாவுக்கு ஞானம் குணமாக உளதாமிடத்து, அவன் ஞானமாகவே கூறப்படுதல் எங்ஙனமெனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

குணாத்து் துகா்யவத்து் துயுவதெஶ் வ்ருத்திலாபவத் (உ. சூ. உசூ)

(உசூரு) இது அவனது விசேஷகுணமாயிருத்தலின் பிராஞ்ஞன் போல அந்தப் பெயர் (கொடுக்கப்பட்டது).

ஞானகுணசாரமாயிருத்தலான் ஆன்மாவை ஞானமென்று குறிப்பதன்றி, ஞானமாத்திரமாகவே யிருப்பதினலன்று. அஃதெங்ஙனமெனின், ஞானமுடையதேனும் பிராஞ்ஞனைப் (பிரமத்தைச்) "சத்தியம் ஞானம்" என்று கூறுதல் போலாம். ஆகலின், ஆன்மாவை ஞானமென்று கூறுவதாற் குற்றமில்லை. (உசூ)

பின்னரும் பொருத்தமாதல் கூறுகின்றனர்.

யாவதா்த்மபாவித்வா்ச் ச நதொஷஸ்தத்வ்-பாஸ (உ. சூ. சூ0)

(உசூசு) அது எஞ்ஞான்றும் ஆன்மாவோடு கூட உடனி

னிருத்தலின், அங்ஙனம் காணப்படலானும்; அதில் யாதும் தோஷம் இன்று.

ஞானம் ஆன்மாவோடு கூட உடனிருத்தலின், அதனை ஞானமென்று கூறுவதிறேஷமில்லை. பசு முதலியன பசுத்துவ முதலிய சொரூப சம்பந்தமாகிய குணத்தையுடைமையின், பசுமுதலாய பெயர் இடப்பட்டதாகக் காணப்படுகின்றது. ஆகலின், ஆன்மாவுக்குச் சொரூபத்தோடியைந்த ஞானகுண முண்மையின் ஞானம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. (கூ0)

சுழுப்தி முதலிய அவஸ்தைகளில் இல்லாத ஞானம் ஆன்மாவோடு உடனிருப்பதாக எங்ஙனம் கூறலாம் எனச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

வ॒ஹ்ஸ்ருதேஷ்ச (உ. கூ. கூக)

(உசஎ) பும்ஸ்துவ முதலியபோல் அதன் சத்து வெளிப்படலான்.

சுழுப்திமுதலியவைகளிலே சத்தாகிய ஞானம் வெளிப்படாதுளதாயினும், அது சாக்கிர முதலியவற்றில் வெளிப்படுதலுண்மையின், ஞானம் ஆன்மசொரூபத்தோடிசைந்துளதே. மனிதனுக்கு முக்கியமாகிய ஏழாவது தாது பால்ய தசையிற் சத்தாயுளதேனும், யௌவனத்தில் வெளிப்படுகின்றது. ஆகலின், ஞானம் ஆன்மசொரூபமாயிருத்தலாற் போதரும் தோஷம் யாதும் இன்று. (கூக)

ஆன்மா ஞாதாவாயும் அணுவாயுமிருப்பதாகப் பிரதிபாதிப்பதின் பயனைச் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

நித்யோபலப்தி நுபலப்தி ப்ரஸங்கோ(அ)ந்யதரநியமோவா(அ)ன்யதா। (உ. கூ. கூஉ)

(உசஅ) இன்றேல் எப்போதும் அறிதலேனும், அறியாதிருத்தலேனும், அவற்றில் ஒன்று நீங்கலாக மற்றொன்றேனும் இருக்கும்.

அஃதின்றேல் ஆன்மா அறிவாயும் வியாபகமாயும் இருக்கின்றதென்னக் கொள்ளின், சங்கோசமின்மையால் நித்தியத்துவம் போல எப்போதும் அறிவுத்தோற்றம் (உபலப்தி) இருத்தல்வேண்டும். அறிவுத்தோற்றமில்லையேல் அந்தக் காரணத்தினாலே இதுவும் எப்போதும் இருத்தல்வேண்டும். ஞானம் இடையில் வந்ததென்றும் ஆன்மா சர்வவியாபகனென்றும் கொண்டால், அதிலும் அந்தத் தோஷம் எய்தும்; சர்வான்மாக்களும் சர்வவியாபகமாயிருத்தலின் ஞானத்துக்குக் காரணமாகிய மனத்தின் சம்யோக

முதலியன எங்கும் எப்போதும் சாதாரணமாயிருத்தலின். அதிர்ஷ்ட ஹேதுக்களுக்கும் அவ்வாறேயிருத்தலின், அதனலும் நியமம் இல்லை. அறிவுத்தோற்றத்துக்கும் தோற்றுமைக்கும் விரோதம் இருத்தலின், உபலப்திக் கேனும் அநுபலப்திக்கேனும் காரணங்களிருக்கும். அங்ஙனமாயின் இரண்டில் ஒன்றே உளதாகும். ஆகலின், முற் கூறியதே சமீசீனம். (சூஉ)

(கo) கர்த்திரதிகரணம்.

சுத்தூ ஸா ஜ்ஞாஷ்டூவகூஸ (உ. சூ. சுசூ)

(உசகூ) (ஆன்மா) கர்த்தா; சாஸ்திரத்துக்கு அர்த்தமுண்மையான்.

ஆன்மாவுக்கு ஞாதிருத்துவமும் அணுத்துவமும் நிரூபிக்கப்பட்டன. அவனுக்குக் கர்த்திருத்துவம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) கூடஸ்தனகிய ஆன்மாவுக்குக் கர்த்திருத்துவம் எய்தாது. புத்தியேனும் பிரகிருதியேனும் கர்த்தாவாதல் உசிதம். அத்தியாசத்தினலே (ஆன்மா) தன்மாட்டு ஆரோபித்துக் கர்த்தாவாகவே தோன்றுகின்றன். ஆதலிற் கர்த்திருத்துவம் ஆன்மாவுக்குப் பொருந்தாதெனின்,

(சித்தாந்தம்) ஆன்மாவே கர்த்தா, சாஸ்திரத்துக்கு அர்த்தமுண்மையின். இன்றேல் இது செய்க, இது செய்யற்க என்று விதிக்கும் சாஸ்திரம் வியர்த்தமாகும். (சூசூ)

உவாஷ நாஷ்டிஹாஸ்ரோவஷ்டோஷ்ட (உ. சூ. சுச)

(உஙo) அவனுக்கு எடுத்தலும் அலைதலும் கூறப்படலானும்.

வனவஷ்டிவெஷ வனகாஸ்ரூணாஸ்ரூயஹீக்ஷ்வாஷ்வஸ்ரீரே யயாகூஷo வரிவத்தூக்ஷத (பிரு. ச. க. கஅ)

"இங்ஙனம் இவன் இந்தப் பிராணன்களை எடுத்துக்கொண்டு சுவசரீரத்தில் இஷ்டம்போல் அலைகின்றன்" எனச் சுருதியானது ஆன்மா எடுத்தலும் அலைதலும் செய்வதாகக் கூறுதலான், இவன் கர்த்தாவே. (சூச)

புத்தியும் பிரகிருதியுமே கர்த்தாவாகுமென்றவிடத்துப் புத்திகர்த்தாவாதலைத் தூஷிக்கின்றார்.

வ்யவஷ்டோஷ்ட ஸ்தியாயாஷ்டவஷ்டிஷ்டக்ஷ்டாவிவயஷ்டக்ஷ்டயஃ|

(உ. சூ. சுஙி).

(உடுக) கிரியையைப்பற்றிக் கூறப்படுதலான்; இன்றேல் வேறுவிதமாய்க் கூறப்பட்டிருக்கும்.

விஜா நo யஜo கநுதெ (தைத். உ. டு. க)

"விஞ்ஞானம் யாகத்தைச் செய்கின்றது" என்றற்றொடக்கத்தவற்றினுல் ஆன்மாவே யாகாதியிற் கர்த்தாவாகக் கூறப்படுகின்றுனதலின், ஆன்மாவே கர்த்தா.

(ஆக்ஷேபம்) விஞ்ஞானம் (ஆன்மா) என்றது புத்தியையேயன்றி ஆன்மாவைக் குறித்ததன்று எனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று. அவ்வாறுயின் விஞ்ஞானத்தினுல் என வேறுபிரகாரமாய்க் குறிக்கப்பட்டிருக்கும்;

கஷோ வாணா நாo விஜாநேந விஜா நாதீய|
(பிரு. சு. க. கள)

"இந்தப் பிராணன்களுடைய விஞ்ஞானத்தை விஞ்ஞானத்தினுல் எடுத்து" என மற்றோர் சுருதியில் இந்த விஞ்ஞானசப்தம் புத்தியைக் குறிக்குமிடத்து (மூன்றும் வேற்றுமை) கருவிப்பொருளிற் குறிக்கப்பட்டதாய்க் காணப்படலான். ஆகலின், புத்தி கருவிப்பொருளாயிருத்தலாற் கர்த்தாவன்று. (சுடு)

பிரகிருதி கர்த்தா என்பதைச் சூத்திரகாரர் தூஷிக்கின்றுர்.

உவலப்திவதியதீ (உ. சூ. சுசு)

(உடுஉ) அறிவுத்தோற்றம் போல நியமமின்று.

மேலே வாதிக்கப்பட்ட உபலப்தியிற் போல, பிரகிருதியைக் கர்த்தாவாகக் கொள்ளின், அது சர்வசாதாரணமாதலால் முற் கூறிய அறிவுத் தோற்றத்தின் அநியமம் போற் பயனிலும் அநியமம் நேரும். (சுசு)

ஸாத்விவயு-யாத் (உ. சூ. சுஎ)

(உடுசு) (போக்திருத்துவ) சத்தி வேறுபடலான்.

பிரகிருதி கர்த்தாவாயின், கர்த்தாவே போக்தாவாகவேண்டுதலின் அந்தப் பிரகிருதியே போக்தாவாகுக; பின் ஆன்மாவின் போக்திருத்துவ சத்தி வேறுபாடுபற்றி ஹானி அடையும். (சுஎ)

வசோ யுஹாவாத் (உ. சூ. சுஅ)

(உடுச) தியானவின்மை நேருமாதலானும்.

இன்னும் பிரகிருதி கர்த்தாவாயின், நான் பிரகிருதிக்கு வேருயிருக்கின்றேன் என்னும் தியானத்துக்கு அபாவம் நேருமாதலினுலும், ஆன்மாவே கர்த்தா. (சுஅ)

யஶா வ தக்ஷோஶயா (உ. கூ. கூசு)

(உருடு) தச்சன் போல அவன் இருவகையாயும்.

ஆன்மா கர்த்தாவாயின், தச்சன் சுவகாரியத்தில் எவ்வாறே அவ்வாறே, விரும்பும்போது செய்தும் விரும்பாதபோது செய்யாதொழிந்தும் போதலாகிய வியவஸ்தை நேரும்.

(ஆக்ஷேபம்) விருப்பமும் புத்திக்குரியதாதலான் அவ்வியவஸ்தை வராதெனின்,

(சமாதானம்) அன்று; இச்சை சேதனத்தின் தருமம். அதுபற்றி ஆன்மாவுக்கே கர்த்திருத்துவமன்றிப் புத்திக்கேனும் பிரகிருதிக்கேனும் இல்லை என்பது நிர்ணயம். (கூசு)

(கக) பராயத்தாதிகரணம்.

வராத்து கஶ்ருதேஃ (உ. கூ. சஅ)

(உருசு) ஆயின் பரத்திலிருந்தே; அதனைச் சுருதி கூறுதலான்.

அறிதலும் செய்தலும் ஆன்மாவுக்கே பிரதிபாதிக்கப்பட்டன. அந்தக் கர்த்திருத்துவம் தன்னிடத்துளதா? சிவபெருமானிடத்துளதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது ஆன்மாவிலே எய்துகின்றது. இன்றேல் நன்மை தீமைகளில் ஆன்மாவைச் செலுத்திச் சிவபெருமான் பாரபக்ஷமுடையர் என்னும் தோஷத்துக்காளாவர். அதுவன்றி ஆன்மாவுடைய பிரவிருத்தி சிவபெருமான் வசத்ததாயின் ஆன்மா யாதும் செய்யாமையின், விதிநிஷேதங்கள் வியர்த்தமாகும். ஆகலின், ஆன்மாவுடைய பிரவிருத்தி ஆன்மாவைப் பற்றியதேயாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்.

ய ஸாதா நயதீஶ்வரோ யமேதி (மத்தியந்தினசாகை)

"உள்ளிருந்து ஆன்மாவைச் செலுத்துகின்றனர்" என்னுஞ் சுருதியுண்மையால் ஆன்மாவுடைய கர்த்திருத்துவம் சிவபெருமான் வசத்ததன்றித் தன்னைப் பற்றியதன்று. (சஅ)

ஆன்மாவைச் சிவபெருமான் பிரவிருத்திப்பதால் அவர் பாரபக்ஷமுடையராவார் என்றமைக்கும் விதி நிஷேதங்கள் வியர்த்தமாகும் என்றமைக்குமாகச் சூத்திரக்காரர் கூறுவாராயினர்.

கூதவ்யதாவெகூஷ்டி விஹிதவ்ரதிஷேதாவெயர்த்யாத்.

(உ. கூ. சக)

(உருஎ) விதிநிஷேதங்களுக்கு வியர்த்தம் வாராதிருக்க (ஆன்மாச் செய்யும்) பிரயத்தனத்தை (ஈசுவரர்) அபேக்ஷிக்கின்றனர்.

ஆன்மா தன் கர்மபாகவசமாய்ச் சுவேச்சையினுலே பிரவிருத்தி நிவிர்த்திக்கு ஏதுவாகிய முயற்சி செய்கின்றன். பிரவிருத்தி நிவிர்த்திகளின் ஏதுவாகிய ஆன்மாவின் பிரயத்தனத்தை நோக்கி அவனுக்கு அனுமதி கொடுப்பது காரணமாகப் பரம்பொருளானது அவனைச் செலுத்தி நிக்கிரகானுக்கிரகங்களைச் செய்வதால், விதி நிஷேதத்தின் வியர்த்தமின்மை புலப்படுகின்றது. பாலனொருவன் மிக்க பலமுடையவனது சகாயத்தினுல் ஓர் பெரிய உத்தரத்தைத் தூக்க இயன்றவனேயாயினும், தான் பிரயத்தனஞ் செய்தவரையில் விதி நிஷேதங்களுக்கு யோக்கியனுகின்றன். இங்ஙனம் ஆன்மா சிவபெருமானுடைய சகாயங்கொண்டு பிரவிருத்தித்தாலும் தானே விதி நிஷேதங்களுக்கு யோக்கியனுகின்றன். ஆகலின் ஆன்மா தான் செய்த பிரயத்தனத்தையுற்று அபேக்ஷையுடைமையாற் கன்மங்களிலே ஆன்மாவைச் செலுத்துபவராகிய சிவபெருமான் பாரபக்ஷமுடையராகார். ஆன்மாவுக்கும் சுவாதீனப் பிரவிருத்தியுண்மையான் விதிநிஷேத முதலிய வியர்த்தமாகப் போகா என்பது சித்தம். (சக)

(கஉ) அம்சாதிகரணம்.

கரொ நா நா வ்யவதெஶாஉ நயாவாவிஶாஶாதிவாதிக்யேய ஸகே|

(உ. கூ. சஉ)

(உருஅ) ஆன்மா (பிரமத்தின்) அம்சம், வேருய்க் கூறப்படலான்; சில சாகையினர் வேறு பிரகாரமாயும் வலஞர் துஷ்டர் முதலாயினோர் தன்மையை அத்தியயனஞ் செய்கின்றனர்.

ஆன்மா நித்தியன், அறிஞன், அணு, கர்த்தா, சிவனுர் சகாயத்தை அபேக்ஷிக்கும் பிரவிருத்தியுடையன் என்று மேலே நிரூபிக்கப்பட்டது.

ஈண்டு ஆன்மா சிவபெருமானு? இன்றேல் அவர் அம்சமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா சிவபெருமானே; ஒரு ஆகாயம் கடமுதலிய வற்றின் உபாதியினுல் நாநாப்பிரகாரமாய்ப் பிரிந்திருப்பதைக் காணப்

MAHAMAHOPADHYAYA

பட்டாற் போல, சிவபெருமானே அநேக உபாதிவசத்தினுற் சீவபாவம் அடைந்தாராகக் காணப்படுகின்றது. அங்ஙனம்,

சுயோ ஹ்ரஹ (பிரு. ச. டி. கசு)

"இந்த ஆன்மா பிரமம்" என்று சுருதியும் கூறுகின்றது. ஆகலின், பிரமமே அஞ்ஞானத்தினுற் சீவபாவத்தை அடைந்ததெனப் பெறப்படுகின்றதே எனின்,

(சித்தாந்தம்) சீவான்மா (பரப்பிரம) சிவபெருமானுடைய அம்சமாகிய மூர்த்தியின் ஏகதேசந்தான்.

சுநந ஜீவநாத்மநா வரவிஸ்ய நாமரூபே வ்யாகரவாணி।
(சாந். சு. கூ. உ)

"இந்தச் சீவான்மாவின் உருவமாய்ப் பிரவேசித்து நான் நாமரூபத்தை வகுப்பேன்"

ய ஸ்தமீ திஷ்டந் (மத்தியந்தினசாகை)

"எவர் ஆன்மாவில் இருக்கின்றனரோ"

வ்யஹரத்தாநo வைஸிதாரஹ ஸேவா (சுவே. க. சு)

"ஆன்மாவையும் சேலுத்துபவரையும் வேறுக அறிந்து"

சாயாஜ்ஞ வ்ருக்ஷ்திo விஶ்வாந்யாயிநஜ்ஞ ஜெஹ்வரஷி।
(சுவே. ச. கo)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக"

தஸ்யாவயவஹ்யெத நவ்யாவ்ருo ஸவ்யதிஷ்டo ஜுமஸ் (சுவே. ச. கo)

"இவ்வுலக முழுதும் அவர் அவயவத்தினுல் வியாபிக்கப்பட்டது" என்றற் றொடக்கத்த சுருதிகளில் அவ்விரண்டுக்கும் பேதம் கூறப்படுகின்றது.

சுயோ ஹ்ரஹ (பிரு. ச. டி. கசு)

"இந்த ஆன்மா பிரமம்" என்றற்றொடக்கத்த சுருதியிற் பிரமமே ஜீவான்மா எனின்,

(உத்தரம்) கூறுவாராயினர்.

தகவேலி (சாந். சு. அ. எ)

"அது நீயாகின்றனை"

சுயோ ஹ்ரஹ (பிரு. ச. டி. கசு)

"இந்த ஆன்மா பிரமம்" என்னுஞ் சுருதிகள் வியாபக வியாப்பியபாவமாபிருத்தலின், அவ்விரண்டுக்கும் அநன்னியத்துவம் கூறின. பின்னும்,

ஸ்வஸ்தாஸ்மா ஸ்வஸ்தாஸ்மா ஸ்ருஷ்டை கிதவாஃ (அதர்வணம்)

"வக்ஷஸ்ப் பிரமம், தாசர்கள் பிரமம், துஷ்டர் பிரமம்" என்றற்றொடக்கத் தவற்றுற் பிரம்மத்தினின்று (அகன்னியத்துவத்தை) வேறுறுமையை அத்தி யுனஞ் செய்கின்றனர். தீயினல் வியாபிக்கப்பட்ட காட்ட முதலியவற் றைத் தீயென்று கூறுவது போல, பிரமத்தின் அம்சமாயினும் ஆன்மா அதனல் (பிரமத்தினல்) வியாபிக்கப்பட்டமையான் அப்பிரம சப்தத்தினற் கூறப்படுவது யுக்தமாம். அங்ஙனமாயினும் அக்கினி காட்டம் இரண்டுக் கும் பேதமுண்டே. ஆகலின் ஆன்மா பிரமத்தின் அம்சமாய் அந்தச் சொரூபமுடையனுகப் பிரதிபாதிக்கப்படுகின்றன். பிரமந்தானே அஞ்ஞா னத்தினற் சீவான்மாவாகின்றதெனக் கொளின், அது அநேக சுருதிகளுக்கு விரோதமாதன் முதலிய தோஷங்களுக்குட்படுதலை நீக்கக்கூடாமையாயிருக் கின்றது. (சஉ)

ஜ்ஞோவணாச்ச (உ. சூ. சஙு)

(உநிகூ) மந்திரமுண்மையாலும்.

வாஜொஸனேயி ஸ்வா ஹ்யேதாஹி (தைத். ஆரணி. சூ. கஉ. சூச)

"அவருடைய பாதம் எல்லா உயிர்களுமாம்" என்னும் இம்மந்திரத்தினு லும் ஆன்மா பிரமத்தின் அம்சமே.

சாயாஹ்ய ப்ரக்ருதிர் விஜ்ஞாயிநஹ்ய ஜெஹ்வரோ தஸ்யாவயவ ஹ்யேதெந வ்யாப்தம் ஸவ-ஜ்ஜிஃ ஜகது (சுவே. ச. கo)

"மாயையைப் பிரகிருதி என்றும், மாயையுடையாரை மகேசுவரர் என்றும் அறிக; இந்த உலகமெல்லாம் அவரது அவயவத்தினுல் வியாபிக்கப்பட் டது" என்னுஞ் சுருதியானது மாயையைக் காரணம் என்றும், அந்த விசிட்டமுடையார் சிவபெருமான் என்றும், உலகமுழுமையும் அவரது அவயவம் என்றும் புலப்படுத்துகின்றது. ஆகலின், மாயையுடைய சிவ பெருமானது அவயவ லேசமே (ஆன்மா). (சஙு)

கூவி ஹ்யய-ஜ்ஜெத (உ. சூ. சஜ)

(உசுo) மேலும் ஸ்மிருதியிற் கூறப்படுகின்றது.

ஸ்ருதா தஸ்யாஷ்டமீ மூர்த்தி-ஃ ஸிவஸ்ய வரமாத்மநஃ|
வ்யாப்யைகைகரமூர்த்தீ-நாo விஶ்வo தஸ்தாஜ்ஜிவாத்மகம்||

"(பிருதிவி முதலிய ஏழு) இதர மூர்த்திகளையும் வியாபித்த ஆன்மாவானது சிவபிரானுடைய எட்டாவது மூர்த்தியாகும்; ஆகலின் உலகம் சிவபிரானே" என்று ஸ்மிருதியிற் காணப்படும்இந்த வாக்கியத்தினலும் ஆன்மா சிவனு டைய ஏகதேசமூர்த்தியுமாம். (சச)

ஜ்யோதிரபஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே (உ. சூ. சஅ)

(உசுக) ஒளி முதலிய போல, பிரமம் இங்ஙனமன்று.

ஆன்மா பிரமத்தின் அம்சமாயினும், சிவபெருமான் அதன் ரூபத்தையேனும் அதன் சுபாவத்தையேனுமுடையரல்லர். அவர் சர்வஜ்ஞத்துவாதி குணமுடையரே. எங்ஙனம்? ஒளி முதலிய போல. எவ்வாறு ஒளியுடைய மணிமுதலியவற்றுக்கு ஒளியானது விசேஷகுணமாயும் அம்சமாயுமிருக்கின்றதோ, அவ்வாறே ஆன்மாவைச் சரீரமாகக்கொண்டமையான் ஆன்ம விசிட்டமாகிய பிரமத்துக்கு அம்சமாயுள்ளது ஆன்மா. ஆதி சப்தத்தினால் விசேஷணத்துவத்தின் முக்கியவியற்கையாகிய சாதி குண முதலியன கிரகிக்கப்படுகின்றன. விசேஷணங்கள் விசேடியத்தின் ஏகதேசமாயிருத்தல் பற்றி அம்சமாயிருப்பினும்,

ய ஆத்மநி திஷ்டந் (மத்தியந்தினசாகை)

"எவர் ஆன்மாவில் இருக்கின்றாரோ" என்றற்றொடக்கத்த சுருதி கூறிய வாறு, சொரூப பேதத்திற்கு விரோதம் எய்தாது. (சஇ)

வாயுஸ்ச அ (உ. சூ. சசு)

(உசுஉ) (அங்ஙனம்) வ்யஷ்டிருதிகளும் கூறுகின்றன.

விஜ்ஞாந தெவதெவஸ்ய விஜ்ஞேதஜ்ஞாயாயே। வாதேஷ்டம் ந ஜாநஸீ வாவம் வாயதெளஷ்வாஸ (வாயு. உத். சு: க)

"இந்தச் சரம் அசரமாகிய உலகமெல்லாம் தேவாதி தேவருடைய சரீரம்; இவ்வுண்மையைப் பசுக்கள் பாசமிருதியினால் அறியமாட்டா" என்னும் ஸ்மிருதியினால் ஆன்மா பிரமத்தின் அம்சமே. பிரமம் அதை அம்சமாயுடைமையின் சொரூபபேதமும் சித்திக்கின்றது. (சசு)

ஸ்நாஜ்ஞா வரிஹாரெள தெஹலஸ்தாயாஜ்ஜ்ஞாதிராதிவத। (உ. சூ. சன)

(உசுஊ) சோதி முதலியவற்றிற் போலச் சரீரசம்பந்த முடைமைபற்றியே விதியும் விலக்கும் (போந்தன).

சமஸ்த ஆன்மாக்களும் பிரமாம்சமாயிருப்பினும் வேதாதிகளிலே சிலர் வேதங்களைப் படிக்கலாம் என்றும், சிலர் படிக்கப்படாதென்றும் கூறப்பட்டதே எனின்,

(உத்தரம்) வைதிகருடைய ரெகத்தினும் மயானத்தினும் சம்பந்தமுடைமைபற்றி அக்கினி முதலியவற்றுக்குப் பேதங் கூறப்பட்டாற் போல, பிராமணர் முதலாமினருடைய சரீரசம்பந்தம்பற்றி (அப்பேதம்) யோர்ந்தென்று கோடலே பொருத்தம்; அது பற்றி விரோதம் இல்லை. (சன)

கூலஹதே ஸ்ஹாவ்ருதிரேகஃ (உ. சூ. சஅ)

(உசுச) (ஆன்மாக்களுக்குச்) சம்பந்தமின்மையின் வித்தியாசமில்லை.

(சூத்திரத்தில்) அசந்ததி என்றது அவ்வியாப்தி. சரீரந்தோறும் வெவ்வேறாயிருத்தலின் ஆங்காங்கே அணுத்துவமாய் வரையறுக்கப்பட்டிருத்தலானும், வியாப்தியின்மையானும், நான் பருத்தவன், நான் மெலிந்தவன், நான் சுகி, நான் துக்கி, நான் பிராம்மணன், நான் க்ஷத்திரியன் என்னும் தேகாபிமானமுடையார்க்கு ஞானம் இன்ப முதலியவெல்லாம் ஒர்விதமாயிருக்கின்றன. இதனாற் பெறப்பட்டது யாதோவெனின், தேகாபிமானிகளுக்கு வியாப்தியின்மை சமானமாதலின் வரையறுக்கப்பட்ட சாம்சாரிக ஞானசுக முதலியன ஒரே பிரகாரமாய்க் கலவாமலிருப்ப, பரப்பிரமஞான விசேஷத்தினால் தேகாபிமானம் நீங்கினவர்களாய், தங்கள் மகாவியாபகத்தினாற் பராஹம்பாவனையுடையவர்களாய முக்தான்மாக்களின் சுவாபாவிக மாகிய ஞானசுகாதிகள் நிரதிசயமாயும் நித்தியமாயும் இருத்தலின் சாம்சாரிக ஞானமுதலியவற்றினின்று இவை வேறுபடுமென்பது சித்தித்தது. (சஅ)

அஞ்ஞானத்தினாலும் உபாதியினாலும் *பிரமமே கட்டுண்டது என மேலே கூறப்பட்டதில் அவ்வியவஸ்தை நேருமென்று சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஸூஹாஸ வஸல அ (உ. சூ. சசு)

(உசுரி) போலி நியாயமுமே.

சத்தியமாயாவது மித்தையாயாவது உபாதியினாற் கட்டுண்ட பிரமமே சீவான்மாவாக எய்திற்று என்னும் இருபக்ஷத்தினும் ஏற்படும் நியாயங்கள் போலிகளே. (சசு)

அங்ஙனமே,

---

* சாங்கியமத நிராகரணமுதற் பாஞ்சராத்திரமத நிராகரணமிறுதியாகப் பிரதிபாதிக்கப்பட்ட இரண்டாம் அத்தியாயத்து இரண்டாம் பாதத்தில் மாயாவாதத்தையும் ஒருங்குகணித்து நிராகரணஞ் செய்யாது ஈண்டு அதனை வேறுக வைத்து மறுக்கப்போந்தமை மலிவாம் பிற எனின், ஆகாது; நித்தியமாயும் அழியாததாயுமுள்ள ஆன்மாவைப் பிரமமென்றேனும் மித்தையென்றேனும் மாயாவாதிகள் தங்கள் பிரமசூத்திரபாஷ்யங்களிலும் பிரமசூத்திரத்துக்கு ஆதாரமாகிய ஈசகோதி முக்கிய உபநிடதபாஷ்யங்களிலும் வழுவுறக் கூறுகின்றமையின், ஆன்மலக்கணம் விரித்துக் கூறப்போந்த இரண்டாம் அத்தியாயத்து மூன்றும் பாதத்துப் பத்தொன்பதாஞ் சூத்திரமுதல் ஐம்பத்திரண்டாஞ் சூத்திரமிறுதியாகப் போந்த சூத்திரங்களிலே அவர் கொள்கையை நிராகரித்தலே தெறியாமெனக்கொண்டு சூத்திரகாராலும் சைவபாடியகாராலும் அது வேறுக வைத்து நிராகரணஞ்செய்யப்பட்டமையின் சேர்த்து இழுக்கு யாதுமின்றாமாதலின். இந்த அம்சாதிகரண (உ. சூ. சஉ-ஆஞ்) சூத்திர பாஷ்யத்தினும் மாயாவாதம் கண்டிக்கப்பட்டமை காண்க

சுஜ்ஜூஷாதிகரணம் (உ. சூ. நிஎ)

(உசுசு) அதிர்ட்டத்தினுல் நியமமில்லாமையான்.

ஆன்மாக்கள் சத்தியமித்தியோபாதிகளினுலே தோற்றுமாயின், பிரமத்துக்கே அஞ்ஞானமும் உபாதியுமாம். ஆகலின் அவர்களாற் செய்யப்படும் கன்மபயன்களினுலும் நியமமில்லை. (நிஎ)

மேலும்,

சுஹிஸ்யாதிஷ்வபிசெவம் (உ. சூ. நிக)

(உசுஎ) சங்கற்பமுதலியவற்றினும் இங்ஙனமே.

அதிர்ஷ்டங்களுக்குக் காரணமாகிய சங்கற்பமுதலியவற்றினும் இங்ஙனமே நியமமில்லையாம். (நிக)

வதெஹாதிதி சௌஜாதஜஹ்வாஜ (உ. சூ. நிஉ)

(உசுஅ) இடத்தினுலோ எனின் அன்றும்; ஓதுங்குதலான்.

(ஆக்ஷேபம்) உபாதிசம்பந்தம்பற்றிப் பிரமத்துக்கு இடபேதம் வருதலால் வியவஸ்தை உண்டாமே யெனின்,

(உத்தரம்) அன்று; உபாதிநீங்கியபோது எல்லாவிடங்களும் பிரமத்தில் ஒடுக்குகின்றமையான். ஆகலின், சத்தியமித்தியமாயுள்ள உபாதியினல் வரையறுப்புண்ட பிரமமானது சீவான்மாவாம் என்னும் இருபகூத்தினும் நியமம் இல்லை. அதுகொண்டு பிரமத்தின் அம்சமாயுள்ள சீவான்மாவானது அதற்கு (பிரமத்துக்கு) விசேஷணமாயிருத்தலேயே முக்கியசம்பவமாயுடையதென்று கோடல் யுக்தமே. (நிஉ)

இரண்டாம் அத்தியாயத்து

நான்காம்பாதம்.

—o—

(க) பிராணேற்பத்தியதிகரணம்.

தயா வ்ராணாஃ (உ. சை. க)

(உசுக) அவ்வாறு பிராணன்கள்.

மேலே பூதங்கள் பிரமத்தினின்று உற்பத்தியாகின்றன என்றும், ஆன்மா நித்தியம் என்றும் நிரூபிக்கப்பட்டது.

ஈண்டுப் பூதங்கள் போல, இந்திரியங்களும் பிரமத்தினின்று உற்பத்தியுடையனவா? என்றும், அவை ஆன்மாக்களைப் போல நித்தியமா? என்றும் விசாரிக்கப்படுகின்றது. நித்தியமாதலில் ஆன்மா எவ்வாறு பிறப்பதில்லையோ, அவ்வாறே இந்திரியங்களும் பிறப்பதில்லை; ஆன்மாவைப் போல இவைகளும் நித்தியமாம் என்று சுருதியிலுண்மையான். அங்ஙனம்,

ஸஹ உ ஸ்ம சுஷீப்ஷயா வாவதேஎஸ்ம ஸஹாஸ்ஜஹா ஹை கே தே ஷிய உதி வ்ராணா வா ஷியஃ।

(சதபதப்பிராம்மணம். சு. க.க)

"அசத்தே முதற்கண் இருந்தது; அசத்து என்றது எது என்று கேட்க, அது இருடிகள் என்றார்கள்; இருடிகள் யார் என்று கேட்க, அவை பிராணன்கள் என்றார்கள்" என்னும் சுருதியினுலே பிரளய காலத்திற் பிராணன்களின் இருப்புக் கூறப்படுகின்றது. ஆகலின் பிராணன்கள் பிரமத்தினின்று உற்பத்தியாகவில்லை எனின், (க)

(சித்தாந்தம்) கூறுதும்.

தத்ப்ராக்ஸ்ருதேஃ (உ. சை. உ)

(உஎ0) அது கவுணம்; அசம்பவமாதலானும், அது முதற்கண் இருந்ததெனச் சுருதி கூறுதலானும்.

பிராணன்கள் சிருஷ்டிக்குமுன்னே இருந்திலவாக,

ஸதேவ ஸோம்யேத3 மக்ர ஆஸீத் (சாந். சு. உ. க)

"சத்துத்தானே முதற்கண் இருந்தது" எனச் சிவபெருமானையுற்றே சுருதியுளதாகலின், இருடி என்னும் மொழியும் பிராணன் என்னும் மொழியும் சிவபெருமான் மேலனவே. அவர் அநேகரல்லாமையாற் பன்மையிற் கூறி

யது கவுணம். ஆகலின் சிருட்டிக்கு முன்னர்ப் பிரமமிருந்ததன்றி, இந்திரியங்கள் இருந்தன அன்று. (உ)

சூத்திரகாரர் மற்றோர் யுக்தி கூறுகின்றனர்.

தத்து-ஸமந்வயாத் (உ. ச. கூ)

(உஎக) அதற்கு முன்னே வாக்கிருந்தமையான்.

சிவபெருமானுடைய சிருட்டிக்குப் பின்னே எல்லாம் நாமரூபமடைந்தன; சிருட்டிக்குமுன்னிருந்த பிராணசப்தம் இந்திரியங்களைக் குறிக்காது. ஆகலின், பிரமந்தான் முன்னிருந்தது. (கூ)

(உ) சப்தகத்தியதிகரணம்.

ஸப்தஸ்தே வி-ஶேஷிதத்வாச்ச (உ. ச. ச)

(உஎஉ) ஏழே நடைபெற்று விசேடிக்கப்படலானும்.

பிரமத்தின் காரியமாகச் சித்தித்த புலன்கள் எத்தனை? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஏழு. எதனால்?

யதா வஹ்நிர்விஷ்டெ ஜ்வாலாதி உநலாஸஹ ஸ்ப்ருஶ்ய நிவெஷ்டெ தாஶஹஂ வர்ஶா மதிழ (கட. சூ. கo)

"ஐம்புலன்களும், மனசோடியைந்து புத்தியும் சலியாதிருக்குங்கால் அது உயர்ந்த கதி என்று கூறப்படும்" என்னுஞ் சுருதியில் ஏழென்று அறியப்படலானும்,

ஸப்த ப்ராணாஃ ப்ரபவந்தி (முண். உ. க. அ)

"ஏழு பிராணன்கள் உண்டாகின்றன" என்னுஞ் சுருதியில் ஏழு என்பது விசேடித்துக் கூறப்பட்டமையானுமாம் எனின், (ச)

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஹஸ்தாதயஸ்து ஸ்திதெ(அ)தாதெ(அ)நவழி (உ. ச. இ)

(உஎஈ) (ஆன்மா) சரீரத்திருக்கும்போது கை முதலாயின உண்டு; ஆகலின், அஃதங்ஙனமன்று.

இந்திரியங்கள் ஏழுமாத்திரமன்று; ஆன்மா தேகத்துள் இருக்கும் வரையும் கைமுதலாயினவும் உபகரணங்களாயிருத்தலிற் பேதமில்லாமை பற்றி, அவைகளும் இந்திரியங்கள்.

ஶ்ருதெஶ் ச ப்ராண ஸ்ருதெஸ்தாதி (பிரு. இ. கூ. ச)

"புருஷனிடத்திலே இந்தப் பத்தும் பிராணன்கள் (இந்திரியங்கள்); மனசு (ஆன்மா) பதினொன்றுவது" என்று சுருதியும்,

ஊர்யாணி ஏவேகாதஶ (பகவற்கீதை. கஉ. சு)

"இந்திரியங்கள் பத்தும் ஒன்றுமாம்" என்று ஸ்மிருதியுங் கூறுகின்றமையின், இந்திரியங்கள் பதினொன்றும். புத்திமுதலியனவும் வேறு இந்திரியங்கள் அன்று; பின் அவை மனோவிருத்தி பேதங்களே. ஏழு என்று எண்ணிக் கூறினமையும் விசேடித்துக் கூறினமையும் பிரதானமாதல் பற்றியே. ஆகலின், இந்திரியங்கள் ஏழு அன்று; பதினொன்றேயாம். (ஞ)

(சு) பிராணணுத்துவாதிகரணம்.

சுணவஶ (உ. ச. சு)

(உஎச) (அவைகள்) அணுக்களுமாம்.

அவ்விந்திரியங்கள் வியாபகமுடையனவா? இன்றேல் அணுத்துவமுடையனவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவை வியாபகமுடையன; கண் முதலிய இந்திரியம் தூரத்துள்ள பொருள்களைக் கிரகணம்பண்ணுஞ் சாமர்த்தியமுண்மையால் எனின்,

(உத்தரம்) அவை அணுக்கள் எனப்படும்;

வ்யாணாம்தீராஷ்ஷ ஸவெஷ வ்யாணா சுந்தீராஷ்ஷி।

(பிரு. சூ. ச. உ)

"பிராணன் புறப்படுங்கால் எல்லாப் பிராணன்களும் கூடப் புறப்படுகின்றன" எனச் சுருதி கூறுகின்றமையான், அவைகள் வியாபகமுடையன அன்று. வியாபகமுடையவாயின் அவை புறப்பட நேராது. கண்முதலிய வற்றுக்கு வியாபகத்தினலன்றி ஒளிரூபத்தினலே தூரத்துள்ள பொருள்களைக் கவருந் திறமையும், சீக்கிரகதியினல் அணுத்துவமும் சித்திக்கின்றன். ஆகலின், இந்திரியங்கள் அணுக்களே. (சு)

(சு) சிரைஷ்டியாதிகரணம்.

ஸ்ரைஷ்ஷ (உ. ச. எ)

(உஎஞ) சிரேட்டமும்.

வ்யாணாம்தீராஷ்ஷ ஸவெஷ வ்யாணா சுந்தீராஷ்ஷி।

(பிரு. சூ. ச. உ)

"பிராணன் போகும்போது எல்லாப் பிராணன்களும் கூடப் புறப்படுகின்றன" என்னுஞ் சுருதியினாற் பிராணேந்திரியங்கள் அனைத்தினும் விசேஷமாகக் கேட்கப்படுகின்ற பஞ்சவிருத்தியையுடைய பிராணவாயு பிரமத்திலிருந்து உற்பத்தியாகின்றதா? இல்லையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிராணவாயு பிறப்பதில்லை.

ஸுநீஷவாகழி (தைத். பிராம். உ. அ. கூ. எச)

"அது காற்றின்றிச் சுவாசிக்கும்" என்னும் சுருத்தத்திலே சிருட்டிக்கு முன்னும் பிராணனுடைய இயக்கம் கேட்கப்படுகின்றமையான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிராணவாயுவும் பிறக்கின்றது. ஆநீத்(சுவாசித்தது) என்னும் மொழி பிராணவாயு வியாபாரத்தைக் கூறப்போந்ததன்று; அவாதம் (காற்றில்லை) என்னும் மொழி பிராணவியாபாரத்தை நிஷேதித்தலான். பின் பிரமத்தினிருப்பையே கூறுகின்றது. ஆகலின், பிராணன் அநாதிக்கண்ணதன்று.

(ஆக்ஷேபம்) பிராணவாயு உற்பத்தியுடையதாயிருப்பினும்

வாணாத்யா வாயவஃ வஹ (சாங்கியகாரிகை. உசு)

"பிராணன் முதலிய ஐந்து வாயுக்கள்" என்று வேறு தந்திரத்திற் கூறியவாறு, அது ஐம்பொறிகளின் விருத்திக்கு வேறுபாடுற்றதாயாவது

யஃ வாணஸ்வாயஃ (பிரு. டி. க. டி)

"எது பிராணனே அது வாயு" எனச் சுருதி கூறியவாறு, பூதவாயுவுக்கு வேறுபாடுற்றதாயாவது அன்று எனின், (எ)

சூத்திரகாரர் கூறுவாராயினர்.

நவாயு க்ரியெ வ்யபதேஷாத் (உ. ச. அ)

(உசு) அது வாயுவும் அன்று; (இந்திரிய) விருத்தியுமன்று, வேறுகக் கூறப்படலான்.

பஞ்சவிருத்தியுள்ள இந்தப் பிராணன் வாயுவுமன்று, இந்திரியவிருத்தியுமன்று;

வாகஸ்வாஜ்ஜாயதெ வாணோ மநஸ்வெஃந்ரியாணி ச வ0 வாயு ஜ்யோதிராவஃ வ்யபிவிஸ்வஸ்ய தாரிணீ (முண். உ. க. கூ)

"பிராணன், மனம், சர்வேந்திரியம், ஆகாயம், வாயு, தேயு, அப்பு அனைத்தையுந் தாங்கும் பிருதிவி" என்னுஞ் சுருதியில் அது வேறுகக் கூறப்படலான். ஆகலின், வாய்வுக்கும் இந்திரியவிருத்திக்கும் வேறுபட்ட பிராணனே. (அ)

வாயுவினின்று வேறுயிலும்லாத மற்றோர் பூதமன்றென்று சூத்திரகாரர் கூறுவாராயினர்.

அகூ-ரராதிவத்-ர தத்ஹஹ ஸ்ஷ்டராதிஷ்டஃ (உ. சா. கூ)

(உளவு) கண் முதலியன போல அது அவற்றோடு கூறப்படன்முதலிய காரணங்களால்.

வாயுவினின்று வேறுயிலும் அக்கினி முதலிய போல அது வேறோர் பூதமன்று; வாயுவே. அது சிவபெருமானைத் தனக்கு ஆதாரமாய்க்கொண்டு தேகத்தைத் தாங்கும் யோக்கியதையுடையதாகின்றது;

ஹத்-ர வஜீயஸோணா வினஹத்-ர। வாகொஷெவொ வஹ-ரயா ஜிவிஷ்டஃ (தைத். ஆரணி. கூ. கச. சஉ)

"தாங்குபவனுகிய வாயு தாங்கப்படுபவனுமாயிருந்து தாங்குகின்றான்; ஒரே தேவர் பலரூபமாயிருக்கின்றார்"

கஷேகொவி வஹ-ரஜ நந-ர ப்ரவிஷ்டஃ (தைத். ஆரணி. கூ. கச. சச)

"அநேக சரீரங்களிற் பிரவேசித்து ஒன்றுயிருக்கின்றனை"

ப்ராணா நாம ஸ்யஷிரவி ரஜொ ஒராஸாவிஷாஹகஃ।

(தைத். ஆரணி. க0. எச. கூஞ)

"உருத்திரரே! நீவிர் பிராணன்களுக்கு ஓர் கிரந்தியாயிருக்கின்றீர், அழிக்கிறவராகப் பிரவேசியாதிரும்" என்றற்றொடக்கத்த சுருதிகளுண்மையான். மேலும், இது கண் முதலியபோல, ஆன்மாவுக்கு உபகரணமாயிற்று; பிராணசம்வாத முதலியவற்றிலே கண் முதலியவற்றோடு கூடக் கூறப்படுதலானும், அக்கண் முதலியபோல ஆன்மாவுக்கு உபகாரமாகி, அவ்விந்திரியங்களுள்ளே முக்கியமாயிருத்தன் முதலியவற்றானுமாம். (கூ)

சகரணகூாத்வ நதொஷஸ்யாஹி ஏரூ-ர்யதி (உ. சா. க0)

(உளவு) கரணமில்லாமையானும் தோஷமில்லை; அங்ஙனமே சுருதியும் கூறுகின்றது.

(சூத்திரத்தில்) அகரணம் என்பது கிரியையின்மையின் மேற்று. பிராணன் ஆன்மாவுக்கு உபகாரமாகிய எத்தொழிலையும் செய்யாமைபற்றித் தோஷமில்லை. தேகேந்திரியங்கள் சிதிலமாகாமைக்குக் காரணம் வாயு என்று சுருதியே கூறுகின்றது; பிராணசம்வாதத்திலே,

யஷ்மின-ரூர்ரா ஹ்ருத ஸரீரஸ வாகிஷ்டாஸ்ரிவ ஏரூஸ்ரெத வஷ ஸ்ரேஷ்டஃ (சாந். இ. க. எ)

"எந்தப் பிராணன் உற்கிரமணஞ் செ[illegible]தால் இந்தச் சரீரமானது அதிபா வமுடைத்தாகத் தோற்றுகின்றதோ, அந்தப் பிராணன் உங்களுள்ளே சிரேட்டம்" என்று பிரஜாபதி கூறிய பின்னர், வாக்கு முதலியன ஒவ் வொன்றும் உற்கிரமணஞ் செய்தவிடத்தும் தேகத்துக்கும் இந்திரியங்களுக் கும் சிதிலமில்லாமையைக் காட்டி, பிராணன் உற்கிரமணமாகும்போதே அச்சரீரத்துக்கும் இந்திரியத்துக்கும் சிதிலம் கூறப்படலான். (கo)

வஹ்ன்யூத்ஹ் ஸிநாவயுவிர்யுத (உ. சா. கக)

(உஎகூ) அது மனம் போலப் பஞ்சவிருத்தியையுடை யதாகக் கூறப்படுகின்றது.

தொழில்வேறுபாடுபற்றி மனமொன்றே காமமுதலியவற்றாற் கூற படுவது போல, பிராணன் ஒன்றே ஐவகைத் தொழில் வேறுபாடுபற்றிப் பிராணாதி பெயரைப் பெறுகின்றது. ஆகலின், பிராணன் ஒன்றுதானே வாயுவுக்கும்இந்திரியவிருத்திக்கும் வேறுகி ஆன்மோபகாரமாயுள்ளதெனச் சித்தித்தது. (கக)

(நி) பிராணனுத்துவாதிகரணம்.

கூணாஸ (உ. சா. கஉ)

(உஅo) அணுவு (மாகலிங்).

பஞ்ச விருத்தியையுடைய இந்தப் பிராணன் இந்திரியங்கள் போல அணுவா? வியாபகமுடையதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அது அணுவன்று.

ஸஃஃ வூஷிணா ஸஃஸோ ஃரகெந ஸஃஸோ நாஹ்ரந வஸ் வாஹி ஸ்ரிஹிஸொஃஸ்கெ வூஸோz நெந்வஸவெஃண (பிரு. கூ. கூ. உஉ)

வ்ராணை வஷஃo வ்ரதிஷ்டிதி (பிர. உ. சு)
வஷஃoஹீஃo வ்ராணைநாவ்ரதிஷ்டி

"அது புழுவுக்குச் சமம், கொசுவுக்குச் சமம், யானைக்குச் சமம், மூவுலகத் துக்கும் சமம், அது அண்டமனைத்துக்கும் சமம், பிராணனில் அனைத்தும் இருத்தப்பட்டன; எதெல்லாம் பிராணனால் ஆவரிக்கப்பட்டன" என்னுஞ் சுருதியினாற் பிராணன் சர்வாதாரமாய்ச் சர்வவியாபகமாயிருக்கின்ற தெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிராணவாயு அணுவே;

வ்ராணஃந்ரீராஃஹo (பிரு. சு. ச. உ)

" பிராணன் புறப்படுகின்றது " [redacted] அதின் கதி கேட்கப்படலான். ஆதி தெய்விக இரணியகருப்பனுடைய சமட்டிரூபப் பிராணன் வியாபகமாயினும் வியஷ்டிரூபப் பிராணன் அங்ஙனமின்று; இது விரோதமில்லை. ஆகலின், பஞ்சவிருத்தியையுடைய பிராணன் அணுவாம். (கஉ)

(கூ) ஸ்யோதிராத்தியதிஷ்டாநாதிகரணம்.

ஜ்யோதிராத்யுயிஷ்டாநஞ் தஸ்மாந்நாஸ் வாணவகாஸ்ஸாஸ்।
(உ. சா. கஉ)

(உ அக) ஆன்மாவோடு சோதி முதலியவற்றுக்குக் (கண் முதலியவற்றில்) அதிட்டானம் உண்டு, (சிவபெருமான்) சங் கற்பத்தினால்; அங்ஙனமே சுருதி கூறுகின்றமையான்.

மேலும்,

சூதி-தூ'ஸூஷ்மஹ்ருக்வா zகஷிணீ வ்ராவிராஸ (ஐத. உ. ச)

" ஆதித்தியன் கண்ணைக் கண்களைப் பிரவேசித்தான் " என்றற்றொடக்கத்த சுருதிகளாற் கண்முதலியவற்றுக்கு ஆதித்தியன் முதலியன அதிஷ்டானம் எனக் கேட்கப்படுகின்றது.

வாவஜிவிவஷ வாதாஸ்ராணாந்ருஹீக்வா வ்ருஸீரே யயா காமே வஸிவத்தஸ்தித (பிரு. ச. க. கஅ)

" இவ்வாறே இந்த ஆன்மா இந்தப் பிராணன்களைக் கிரகித்துக்கொண்டு தன் சரீரத்திலே இஷ்டமாக அலைந்து திரிகின்றது " என்னுஞ் சுருதியினால் ஆன்மாவும் ரூபமுதலியவற்றைக் கிரகிக்கும்பொருட்டு அவைகளை அதிஷ்டிப் பதாகக் கூறப்படுகின்றது.

ஆன்மாவோடு கூட ஆதித்தியன் முதலியன இந்திரியங்களை அதிஷ்டிப் பது சிவபெருமான் வசத்ததாயோ? சுவதந்திரமாகவோ? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

சூதி-தூ'ஸூஷ்மஹ்ருக்வா zகஷிணீ வ்ராவிராஸ (ஐத. உ. ச)

" ஆதித்தியன் கண்ணைக் கண்களைப் பிரவேசித்தான் " என்றற்றொடக்கத்த சுருதிகளிற் சுவாதந்திரியம் கேட்கப்படுதலின், ஆதித்தியாதி அதிஷ்டானம் பரமேசுவரர் வயத்ததன்றெனின்,

(சித்தாந்தம்) இந்திரியமுதலியவற்றிற்கு ஆதித்தியன் முதலியவற்றின் அதிஷ்டானம் சிவபெருமான் வயத்தது, எதனால்?

ய சூழி தூஉஞொ யஉயுதி (பிரு. டி. எ. சூ)
சூ தூ நஉஞொ யஉய தீ (மத்தியந்தினசாகை)

"உள்ளேயிருந்து ஆதித்தியனை இயக்குகின்றனர்", "உள்ளேயிருந்து ஆன்மாவை இயக்குகின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகளாற் சிவபெருமான் சங்கற்பபூருவமாக எல்லாம் பிரவிருத்திக்கின்றன என்று கேட்கப்படலான். ஆகலின், இந்திரியங்களுக்கு மேலாகிய சூரியாதிகளுடையவும் ஆன்மாவுடையவும் அதிஷ்டானம் சிவபெருமான் வயத்ததே. (கஉ)

தவயு ஏ நி தூஞுவாஸ (உ. சூ. கச)

(உ-அஉ) அதுவும் நித்தியமாயிருத்தலின்.

அனைத்தையும் சிவபெருமான் இயக்குதல் நித்தியமே. இதனாலும் அவைகளின் அதிஷ்டானம் சிவபெருமான் சங்கற்ப வயத்ததே. (கச)

(எ) இந்திரியாதிகரணம்.

த உஜியாணி தஉவஷொஷஉநுத ஸ்ரௌஷாஸ (உ. சூ. கடு)

(உ-அஉ) சிரேஷ்டமாயதொன்றைத் தவிர்த்து மற்றவைகள் இந்திரியங்களே; அங்ஙனம் கூறப்படலான்.

ஈண்டு மேலே கூறப்பட்ட வாக்காதி இந்திரியங்கள் பிராணவிருத்திகளினின்று பின்னமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அவை முக்கியபிராணவிருத்திகளேயாம்.

த வஸ த வெஉவ வவெஷ ஈஷவஹஉவநீ (பிரு. கூ. டி. உக)

"அவையெல்லாம் இதனுடைய ரூபமாயின" என்னும் சுருதியால் அனைத்தும் பிராணசொரூபம் என்று கூறப்படுகின்றமையானும், வாக்காதிகள் வாளாவிருத்தலாகிய மரணகாலத்து உயிர் போயது எனச் சாமானியமாக வியவகரிக்கப்படுதலினானும், அதுகொண்டு இந்திரியங்கள் பிராணனுக்கு வேறன்றுமெனின்,

(சித்தாந்தம்) சொல்லுதும். முக்கியபிராணனிலும் வேறுயுள்ளனவே இந்திரியங்கள். சிரேஷ்டப் பிராணனிலும் வேறுயுள்ளன எந்தப் பிராணன்களோ அவை இந்திரியங்களாம்;

உஜியாணி உஸெகஹ (பகவற்கீதை. கஉ. டி)

"இந்திரியங்கள் பத்தும் ஒன்றும்" என்றற்றொடக்கத்தவற்றிற் கண்முதலாயினவே இந்திரியங்கள் எனக் கூறப்படலான். (கடி)

ஹஉ ஸ்ரு-ஆத வெவ்ஹஷ்ணுர்யாஜ (உ. சா. கசு).

(உஅசா) பேதசுருதியுண்மையாலும் விலக்ஷணமுண்மையாலும்.

வாதஸ்ஜாயத வ்ராணோ உநஸ்வெ-ஜ்ரியாணி ச|

(முண். உ. க. கூ)

இதினின்று பிறக்கின்றன பிராணன், மனசு, எல்லா இந்திரியங்களும்'' என்னுஞ் சுருதி பிராணோற்பத்தியையும் இந்திரியோற்பத்தியையும் தனித்தனி வேறுகக் கூறுகின்றது. இந்திரியமுதலிய ஒய்ந்திருந்தவிடத்தும், பிராணவிருத்தி ஒயாதுளதாகிய விலக்ஷணமும் காணப்படுகின்றது. அதனாலும் பிராணவிருத்தியினின்று இந்திரியங்கள் வேறு. (கசு)

(அ) சம்ஞாமூர்த்திகிலுப்தியதிகரணம்.

ஸஂஜ்ஞாஉ-ஏதீ-ர் கௌவீஹ்ரு தீர்வ்ரு-த்ரு-வ-ர்த உவதெஷாஹ|

(உ. சா. கள)

(உஅநி) நாமரூபங்களின் சிருட்டியானது மூவிதமாகச் செய்யும் அவர்க்கே உரித்து; அங்ஙனம் உபதேசிக்கப்படலான்.

மேலே தத்தம் அதிதேவதைகளாகிய சதாசிவர் முதலாயினோடு ஆகாசாதி பூதங்கள் சிவபெருமானிடத்தினின்று உதித்தன என்று கூறப்பட்டது. அவைகள் இங்ஙனம் பிறந்தபோது தேவர்களுடைய நாமரூப முதலியவற்றின் சிருட்டிமுதற்காரணமாகிய அவரிடத்திருந்து பிறந்ததா? இன்றேல் மற்றொன்றினின்று பிறந்ததா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

தத்தேஜ வைக்ஷத ஏஹ-ஹ்யா0 வ்ரஜாயேய (சாந். கூ. உ. கூ)

"அந்த ஒளி நான் அநேகமாகப் பிறப்பேன் என்று சங்கற்பித்தது''

தத்வொ zஷ்ஜத (சாந். சூ. உ. கூ)

"அது ஜலத்தைச் சிருட்டித்தது'' என்னும் சுருதிப் பிரகாரம் தேஜோபிமானியாகிய உருத்திரர் சலத்தைச் சிருட்டித்து, அதிலே (தமது) வீரியத்தை விடுகின்றனர். இதிலிருந்து சத்துவகுணத்தினராகிய விஷ்ணு உதிக்கின்றனர்.

ஆவொ நாரா நரொ ஸூநூ:|

"அப்புக்கள் நாரம்;'' "நரர் உருத்திரர்'' எனச் சுருதி கூறுதலின், உருத்திரரினின்று உதித்த அப்புதத்துவத்தைப் பிறப்பிடமாகக்கொண்டமையான் விஷ்ணு நாராயணர் எனப்படுவர்.

தா சூவ வெகஷஷ | தா சுஜஷவ்யஜஜ (சாந். சு. உ. ச)

"அந்த அப்புக்கள் சங்கற்பித்தன; அலை அன்னத்தை ஆக்கின" என்று சுருதி கூறுமாறு, அதற்கு அபிமானியாகிய நாராயணர் அன்னம் என்னும் பிருதிவியை உண்டாக்குகின்றனர். பிருதிவித்தத்துவரூப அண்டத்திலிருந்து இரணியகருப்பர் எழுகின்றார். அவ்வாறே,

சுணூ ஹிரண்யா மெயு வாசஜ்ர ரூ உவ்ய வீய்ஷ்ரஷ்
வ்ரயோ வாவைஹவ தத்ர ஜ்ரவ்ரா விஷ்ணு ஜாமெதா ஜாதவெ
டாம்॥

"உருத்திரர் வீரியத்தினின்று சுவர்ணமயமான அண்டமானது சமுத்திர மத்தியில் முதற்கண் உண்டாயிற்று; அதில் முதற்கண் விஷ்ணுவானவர் பிரமாவைப் போல ஞானத்தோடு பிறந்தனர்" எனவும்,

சுவ வரவ வஸஜ்ரமெள தாவரு வீய்ர்மோவ்ஜஜ்ர
சுஜ்ணமேவமெஜ்ர, வஹவஸ்ரா ந்ரர்மஸேவ்ரஜ்ர।
.தஸ்மிந் ஜமெஜ்ர வ்யர ஜ்ரவ்ரா வவ-ர்மெரசுவிதாரேஹம்।
சூவொ நாரா உதிவெ்ராதா சூவெரமெவ நரவ-ர்ரவம்।
சுய நதஜவ்ய தா யவ்ரா தூமெதா நாராயணம் வ்ய்ரதம்।
நாராயணம் வமெரரzவ்யுதாரஜ்ய்ரதாரஜ்ண வரஹவம்।
சுணுவ்யாஜ ஹ்ரிமெ மெரசுவவ்ரதீவாசமெரிதி நீ॥

(மனுஸ்மிருதி. க. அ—கக)

"அவர் (ருத்திரர்) முதற்கண்ணே அப்புவைச் சிருட்டித்து அதிற்றமது வீரியத்தை உருத்தார்; அந்த வீரியம் ஆயிரம் ஆதித்தியருக்கு ஒப்பாய சுவர்ண அண்டமாயிற்று. அந்த முட்டையிலே சர்வலோகபிதாமகராகிய பிரமர் தாமே பிறந்தார். அப்புக்கள் நர (உருத்திர) ரிடத்தினின்று உதித்தமையால், நாரம் எனப்படும். அது பிறப்பிடமாதலினால் அவர் நாராயணர் எனப்படுகின்றார். அவ்வியக்தத்துக்கு மேலானவர் நாராயணர்; அந்த அவ்வியக்தத்தினின்று அண்டத்தின் உற்பத்தி; இவ்வுலகங்களும் சப்ததீவுகளோடு கூடிய பூமியும் அண்டத்துக்குள்ளேயாம்" எனவும் மனுஸ்மிருதி கூறுகின்றது;

ரூ ரவஜஜவ் தெவவ் ரூமெவெசுமெ்ரிஃ வ்ரஜாயதெ।
தெந சுவ்ரூ ரவெவீய்ர்ம வாசுமெ்ரிதி்ரஹிரோ நா।
சுணூஹவ்ரீய்ர்ம வஹவஸ்ரகிரணைவ்ரஜ்ர।
விஷ்ணு வ்ரீராவி நாகூரா நூ ஸ்ருதெவ்ரு வெஹவாஜ்ர।
வ்ரு நநாராயணாவ்ரா நூ நியோ ஜாரீராவ்யவா மெவெள

உசிஹுரஹாஹரஹுஹ்ரு ரோஹ நாராயணம் வ்ரதி|
சுவஹ்ஸ்ஹுகூஹ்ரு ரவொ ஜ்ஜியொ ரவொ நாரஃ வ்ருகீத்தி-ஃ|
நாரஜாகசுதொ வ்ரஹுஹுரவ்ஹாகூஹ்ரு ஹிவொ உதஃ|
நாரஃவ்யாயந0 வொராதந0 ததொ நாராயணஃ வ்ரதஃ|
வ்ரஹுரவி நாராஃ-ஹ்ம முயஃஹ்தி-ஃ0 வஸாவிராசு||

"உருத்திரர் எனப்படும் தேவருடைய ரூபத்தில் மூர்த்தி உளதாகின்றது; பர மூர்த்தி அபிமானியாகிய அவரால் வீரியம் நீரிலே விடப்பட்டது; அவ்வீரி யம் ஆயிரஞ் சூரியரொளியைநிகர்த்த அண்டமாயிற்று; நேரே என் சத்தியின் வைபவத்தினால் விஷ்ணு அதனுள்ளே பிரவேசித்தார்; பின்னர் என் ஆஞ் ஞையினாலே அவர் நாராயணர் என்னும் பெயர் படைத்தார்; இங்கே நாரா யணரைப்பற்றிய சுலோகத்தை உதகரிக்கின்றார்; அப்புக்கள் சூக்கும இரசங் களாம்; இரசம் நாரம் எனப்படும்; இதிலிருந்து பிரமா பிறந்தார்; நரன் நேரே சிவன் எனப்பட்டார்; நாரம் இவருக்கு இடமாகக் கூறப்பட்டமை யின் நாராயணர் எனப்பட்டார்; மனிதருட் சிரேட்டரே! பிரமாவும் கந்த சரீ ரத்திற் பிரவேசித்தனர்" என்று புராணமுங் கூறுகின்றது. இவ்வாறே,

வெஹெந நாரஸ-ஹ்வெ வ்யாகுரொ ஹ்ஸ்தாஸ்தீ வ்ரஜாவதீ|
(தைத். பிராம். உ. சு. உ. அ)

"வேதத்தினாலே பிரஜாபதியானவர் சத்தும் அசத்துமாகிய நாமரூபங்களைப் பிறப்பித்தார்" என்னும் சுருதிக்கிசைய அண்டத்துள்ளேயுள்ள இரண்ணிய கருப்பரேனும்,

கஹ்ரூஹ்ஸ்ஹுஹ-ஹ்தீ வ்யயிவிவ்ரு ரவாஹ்ரு (தைத். ஆரணி. கூ. கஙு. சஂ)

"அப்புவிலிருந்தும் பிருதிவியின் இரசத்திலிருந்தும் (அண்டம்) பிறந்தது" என்னும் சுருதிக்கியைய நாராயணரேனும் அண்டத்துள்ளே இருக்கும் தேவர் முதலாயினோருடைய நாமரூபங்களுக்குக் கர்த்தாவாதல் அருகமா கின்றது. பிரமாண்டத்துக்கப்புறத்துள்ள சிவபெருமான் (சிருட்டி கர்த்தா) ஆகார் எனின்,

(சித்தாந்தம்) மேலே கூறிய சிருட்டிக்கிரமம் யுக்தம் அன்று; பின்னையோ,

வஸெவ்ரு வொளஜ்யெஹ ஃஜ்ர சுவஹீஹெகுவொஹ்ரிதீயஹெவெகூஹ்தி ஹ்ரஹ்ரஹ்யாரு வ்ரஜாயெயெதி தத்தெஜொ zவ்ரஜத (சாந். சு. உ. க, உ)

"சௌமிய, சத்தாம் அது முதற்கண் இருந்தது; ஒன்று தானே இரண்டாவ தற்றதாய் இருந்தது; அது நான் அனேகமாவேன் எனச் சங்கற்பித்தது; அது ஒளியைச் சிருட்டித்தது" என்றற்றொடக்கத்தச் சுருதிகளிலுலே சத்தான்

பத பஞ்சபூதகாரணமாகிய பிரமமே. இதனல் முதற்கட் சிருட்டிக்கப்பட்டது தேயு எனல் நிரசிக்கப்பட்டது.

தஐெகூத।
தஐத்தஜ வொகூத (சாந். சு. உ. சு)
தா ஆவ வொகூஹ (சாந். சு. உ. ச)

"அது சங்கற்பித்தது; அவ்வொளி சங்கற்பித்தது; அவ்வப்பு சங்கற்பித்தது" என்னும் சுருதியினல் ஆகாயமுதற் பிருதிவியீருகச் சதாசிவர்முதலிய பெயருடைய பிரமமானது முன் முன் உள்ளவற்றுக்குக் காரணமாய்ப் பின்பின்னுள்ளவற்றைப் பிறப்பிக்கின்றதெனப் பெறப்படுகின்றது.

ஹதாஹஜிரவ்ஹிவ்ஹா ஒவதா கூஐந ஜீவெநாத்துநாந வ்ரு
வீரு நாரூ ஐவெ வுராகரவாணீதி। தாஹா0 தீவ்ரு0 தீவ்ரு0
ஐஐகெகரா0 கரவாணி (சாந். சு. கூ. க, உ)

"நான் இந்தச் சீவான்மாவோடு இம்மூன்று தேவதைகளைப் பிரவேசித்து நாமரூபத்தை வகுப்பேன்; அவைகளில் ஒவ்வொன்றையும் மும்மூன்றுக்கு வேன்" என்னும் சுருதியினல் தேவதைகள் மும்மூன்றுக்கும் சிவபெருமான் தாமே வாயுமுதலிய ரூபமெடுத்துத் தேயு, அப்பு, பூமி என்னும் மூப்பூதங்களையும் பிரமா விஷ்ணு உருத்திரரூப சீவான்மாக்கள் வாயிலாகப் பிரவேசித்து நாமரூபத்தைச் சிருட்டித்தனர் என்று புலப்படுகின்றது. ஆகலின், பூதங்களை மூப்பகுப்பாக்கி நான்முகப் பிரமாமுதலாயினேராகி நாமரூபமினைத்தையுஞ் சிருட்டிக்கின்றனர் எனக் கூறுவது யுக்தம். பூதங்களைமூத்திறப்படுத்தல் கேவலம் நான்முகப்பிரமாவுக்கு இயையாது. தேயு அப்பு பிருதிவி என மூத்திறப்பட்ட பூதங்களிலிருந்து அண்டம் பிறக்கின்றதன்றே. இதன்பின்,

கணா0 ஹிரண்மய0 ஶெது ஸம்ரூப0 ரூபுவ வீயு।
வ்யஶ0 ஸம்வஹதிவ தத ஐவஹா விஷ்ண ஜாதெதா ஜாத
வெதா0॥

"சமுத்திரமத்தியிற் சுவர்ண அண்டமானது உருத்திரர் வீரியத்தினின்று பிறந்தது; அங்கே விஷ்ணுவானவர் ஞானத்தோடு பிரமாவாகப்பிறந்தார்" என்னுஞ் சுருதியிற் கண்டவாறு நான்முகனர் சிருட்டி பின்னுளதாயிற்று.

(ஆக்ஷேபம்) நான்முகப்பிரமாவுக்குப் பூதங்களை முத்திறப்படுத்துவது கூடும்.

யயா வஜ்ஞ வெளஷதீரா ஹ்ரிவ்ரீ தெவதா0 வ்ரீரீஷ0 வ்ரு
வ்ரு தீவ்ரு தீவ்ரு ஐஐகெகரா ஜவதி தஐந விஜா நீஹி (சாந். சு. ச. உ)

"சௌமிய! இந்த மூன்று தேவதைகள் (பூதங்கள்) புருஷனை அண்டந்து ஒவ்வொன்றும் எங்ஙனம் மும்மூன்றுயின என என்னிடத்து அறிகுதி"

ஈறுஶிஷ்ட0 தெ3யா வியீயதெ3। ஈவ்யயꣳ ஷ்ணுவிஷ்ணோ யாத3ஸ்தே3
வ3ஸீஷ்ட0 ஹவ:தி। யொ ஶ்ரே3ஷ்ட2ꣳ நாமஸ்தி। யொ3ணிஷ்ட2ꣳ நஸ்தி।
(சாந். சூ. நி. க)

"உண்ட அன்னம் மூன்றுகப் பகுக்கப்படுகின்றது; தூலமாயது மலமாயும், நடுக்கண்ணது மாமிசமாயும், நுட்பமாயது மனசாகவும் ஆகின்றது" என்றற்றொடக்கத்த சுருதியினல், அண்டசிருட்டிக்குப் பின்னர் நான்முகப் பிரமனுற் சிருட்டிக்கப்பட்ட ஆன்மாக்களுள்ளே முத்திறப்படுத்தும் வகை கூறப்படுகின்றதே எனின், (கள)

(உத்தரம்) சூத்திரகாரர் பின்வருமாறு அதனை ஆசங்கித்து மறுக்கின்றனர்.

ஶ்ரா0ஸாதி3 ஹெளஶ0 யயோஸ்து3 தி3ஶ்ரயொ ஸ்து (உ. சா. க அ)

(உ அசு) மாமிச முதலியன பிருதிவி சம்பந்தம்; சுருதியே மற்றிரண்டுக்குமாம்.

ஈறுஶிஷ்ட0 தெ3யா வியீயதெ3 (சாந். சூ. நி. க)

"உண்ணப்பட்ட அன்னம் மூன்றுக விதிக்கப்படுகின்றது" என்றற்றொடக்கத்த வாக்கியத்தில் அண்டத்திற் புருஷரால் உண்ணப்படும் அன்னுதிகளின் பரிணுமமே கூறப்படுகின்றதன்றி, முத்திறப்படுத்துகை கூறப்படவில்லை. இன்றேல் மலத்தினும் நுண்ணியவாய மாமிசமும் மனசும் அப்புனினலும் தேயுனினலுமே தனித்தனி ஆக்கப்பட்டனவாகும். அங்ஙனமாகுங்கால்,

ஈறுஶிஷ்ட0 தெ3யா (சாந். சூ. நி. க)

"புசித்த அன்னம் மூவகைப்படுகின்றது" என்னும் பூமியின் முத்திறப்படுகையின் தொடக்கமும்,

ஈறுஶ்ய0 ஹி ஹெளஶ்ய உந்ந0 (சாந். சூ. நி. ச)

"சௌமிய! மனம் அன்னமயமன்றே" என்றதிலே மனசுக்குச் சாற்றும் பூமி விகாரத்துவமும் விரோதமுறும். அவ்வாறே அப்பு தேயு என்னும் மற்றிரண்டின் முப்பகுப்பும் முரணும். ஆகலின், சூத்திரகாரர்

ஶ்ரா0ஸாதி3 ஹெளஶ0 யயோஸ்து3 தி3ஶ்ரயொ ஸ்து।

"மாமிசமுதலியன பிருதிவி சம்பந்தம்; மற்றிரண்டும் சுருதி கூறியவாறு அவ்வாறேயாம்" என்றார். மலம் போல மாமிசமும் மனசும் பிருதிவி சம்பந்தம். அங்ஙனம் மூத்திரம் போல இரத்தமும் பிராணனும் அப்பு சம்பந்தம். அங்ஙனம் என்புபோல மச்சையும் வாக்கும் தேயு சம்பந்தம்.

(ஆக்ஷேபம்) முன்னரே பூதங்கள் முத்திறப்படுத்தப்பட்டிருக்கு மேல் ஒவ்வொரு வஸ்துவும்மூவகைப் பூதங்களால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். (கஅ)

மிருதிவி, அப்பு, தேயு என்பன எங்ஙனமாம் எனச் சூத்திரகாரர் கூறின்றனர்.

ஸ்வஸ்ரூபத்ரூ தத்ராத்ஸ்ருஷ்டிஃ (உ. சூ. ஙக)

(உஅஎ) விசேஷமுண்மையால் அவை அவ்வாறு, கூறப்பட்டன, கூறப்பட்டன.

அன்னதிமிருத்துண்மையாம் விசேஷத்தினால் அன்ன முதலியவற்றின் பேர்க்கு உளதாகின்றது. ஆகலின், முத்திறப்படுத்தும் சிவபெருமான் தான் முகப்பிரமாவாகிச் சமஸ்த நாமரூபங்களைச் சிருட்டித்தனர் என்பது யுக்தம். (ஙக)

மூன்றும் அத்தியாயத்து

முதலாம் பாதம்.

(க) ததந்தரபிரதிபத்தியதிகரணம்.

தடஞாவ்ருத்திவ்ருத்தேள ஸ்ஹதி ஸ்வரிஷ்டஞ்ஞ: வ்ருஹதாரண்யகே (கூ. க. க)

(உஅஅ) பிரதிநோத்தரங்களாற் (பெறப்படுமாறு) ஆன்மா மற்றோர் சரீரமெடுக்குங்காற் சூக்கும பூதங்களைத் தழுவி ஓடுகின்றது.

முதலாம் அத்தியாயத்தினற் சித்தித்த உலகமுதற்காரணம் பிரமம் என (உபநிடதங்களால்) ஒரே கருத்தாகக் கூறப்பட்டமைக்கு விரோதமாக எழுந்த ஆக்ஷேபங்களுக்குப் பரிகாரம் கடந்த அத்தியாயத்திற் கூறப்பட்டது.

எங்ஙனமெனின், பிரதமபாதத்திற் சாங்கியாதி தர்க்கவிரோதம் பரிகரிக்கப்பட்டது.

இரண்டாம் பாதத்திலே பிரதானகாரணவாத முதலியவற்றுள்ளே தர்க்கவிரோதம் காட்டப்பட்டது.

மூன்றும் பாதத்திலே பூதசிருட்டியின் அவாந்தரவிரோதத்தைப் பரிகரித்துக்கொண்டு, ஆன்மா நித்தியத்துவாதி குணங்களையுடையதாக நிரூபிக்கப்பட்டது.

நான்காம் பாதத்திலே பிராணன் இந்திரியம் என்பவற்றின் சொரூபத்தையும், பிரமத்தைக்கொண்டே அவைகளுக்கு உற்பத்தி உளதாம் என்பதையுங் கூறி, மற்றெல்லாவற்றின் நாமரூபங்களின் பகுப்பு நிரூபிக்கப்பட்டது.

ஈண்டு மூன்றும் அத்தியாயத்து முதற் பாதத்திலே நித்தியத்துவமுதலாயவற்றோடு கூடிய ஆன்மா போக்குவரவு செய்தல் நிரூபிக்கப்படுகின்றது.

இரண்டாம் பாதத்தில் அதின் அவஸ்தாநிரூபணபூருவமாகச் சிவபெருமானது சொரூபலக்ஷணம் கூறப்படுகின்றது.

மூன்றும் பாதத்திலே (வேதத்திற் பலவிடங்களினும் கூறப்பட்ட) முக்கண்ணனைச் சிவ உபாசனையின் குணோபசங்காரம் கூறப்படுகின்றது.

நான்காம் பாதத்திலே ஆச்சிரமாதிகளின் தருமம் கூறப்படுகின்றது.

இப்போது முதலாம் அதிகரணத்திலே ஆன்மா மற்றோர் உலகத்துக்குப் போக்குவரவு செய்யுங்கால், அது மற்றோர் சரீரத்தை எடுத்தற்குச் சூக்கும பூதங்களுடன் கூடிப்போகின்றதா? இன்றேற் கூடாது போகின்றதா? என் பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆன்மா தேகத்தைவிட்டுப் புறப்படுங்காற் சூக்குமபூ தங்களாய் எப்பபோகும் சரீரபீஜங்களைக்கொண்டு போகாது, (அவற்றை) விடுத்தே போகின்றது; பூதங்கள் சுலபமாய் யாண்டும் பெறப்படுவன வாத லானும், ஆயாசம் விருதாவாய் முடிதலினுமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஆன்மா மற்றோர் தேகம் எடுக்கும்பொருட் டுச் சூக்குமபூதங்களைக் கொண்டு செல்கின்றதென்பது பஞ்சாக்கினி வித் தையிற் போந்த வினவிடைகளாற் பெறப்படுகின்றது.

வைஷ யஸ்ய வஹ்ந்யாஹுராபோ வை புருஷவசஸோ ஹவனம்।
(சாந். உ. கூ. கூ)

"ஐந்தாவது ஆகுதியில் அப்புக்கள் புருஷன் என்று கூறப்படுதலை அறி வையோ" என்பது வினு.

ஐதிகாவஹ்ந்யாஹுராபோ வை புருஷவசஸோ ஹவனம்।
(சாந். உ. கூ. க)

"ஐந்தாவது ஆகுதியில் ஆகுதி செய்யப்பட்ட அப்புக்கள் புருஷன் என் னும் மொழியையுடையவாகின்றன" என்பது விடை.

இதன் பொருள் பின்வருமாறு சுருக்கிக் கூறப்படுகின்றது. பிராம் மணனி சரீரத்துள்ள ஆன்மா ஆகுதி முதலிய பிற கருமங்களையும் புரிந்து அக்கருமபலன்களைத் துய்க்கும்பொருட்டு, இச்சரீரத்தை விடுத்துப் போகுங்கால், இச்சரீரத்துள்ள மற்றைப் பூதங்களோடியைந்த சூக்குமபூத அப்பினையே கூடி அக்கினியாகக் குறிக்கப்பட்ட * தியு (சுவர்க்க) லோகத்தை அடைந்து, அந்த அமிர்தமயமாகிய தேகாகாரமாய்ப் பரிணமித்த அப்புக் களோடு சேரப்பெற்றுத் தேவர்களுக்கு உபயோகமாகி, அவர்களோடு தானே அங்கே விசேஷ போகங்களை அனுபவித்து, பிராம்மணனி சரீரத்தைக் கொடுக்கும் எஞ்சிய கன்மத்தோடு அவ்வான்மா கன்மங்கள் செய்யும் பொருட்டு இவ்வுலகத்துக்கு வந்து அந்த அப்புக்களோடு கூடியே அக்கினி யாகக் குறிக்கப்பட்ட மேகத்தை அடைகின்றன்; பின்னர் மழைத்துளி

---

* இத்தப் பஞ்சாக்கினிவித்தை சிவஞானபோதத்து உ-ஆஞ் சூத்திரத்து கூ-ஆம் அதிகரணத்து முதலாம் வெண்பாவுரையிற் குறிக்கப்பட்டும், "துறக்கம் மேகமண்ட லம் நிலம் தந்தை தாய் என்னும் இவ்வைந்திடம் அங்கியாகவும், அவ்வவ்விடங்களி னெய்திய ஆன்மா ஆகுதியாகவும் வைத்துத் தியானித்தல்" என்று நிராவிடமாபாடி யத்தில் வரையப்பட்டுமிருக்கின்றது.

களோடு அக்கினியாகக் குறிக்கப்பட்ட பூமிக்கு வருகின்றன். அங்கிருந்து சென்முதலிய தானியங்களோடு உணவுவடிவாகி அக்கினியாகக் குறிக்கப் பட்ட புருஷசரீரத்தை அடைந்து, இந்திரியமயமாகிய அந்த அப்புக்களோடு கூடி மற்றோர் அக்கினியாகக் குறிக்கப்படும் பெண்ணை அடைகின்றன். புருஷ சரீரம் என்று கூறற்கியன்ற சரீரமாகமாறிய அப்புக்களோடு சேர்ந்து, கன் மத்துக்கியையப் பிராம்மணஜாதிசரீரமாகப்பிறக்கின்றன். இஃதெல்லாம் பின் னர் நன்கு விளக்கப்படும். ஆகலின், ஆன்மா மற்றோர் சரீரத்தை எடுக்க வேண்டுமாயின் அது சூக்குமதேகத்தோடு கூடியே போகின்றது. (க)

தந்ரூதகூவாதூ ஹியஸ்ஸாஸ (கூ. க. உ)

(உஅஉ) ஆயின், முத்திறப்படித்தும் இயற்கையும், மிகு நிப்பாடு உண்மையான்.

ஒவ்வொன்றும் முத்திறப்படுதலின், ஒவ்வொன்றும் முத்திறவியல் பினவாம். எஞ்சிய பூதங்களோடு சேர்ந்த அப்புக்களே மிகுதியாதல்பற்றி அவ்வனம் குறிக்கப்பட்டன. ஐந்தாம் ஆகுதியில் அப்புக்கள் என்றவிடத் தக் கேவலம் அப்புசப்தம் கூறப்படுகின்றமையானும் விரோதம் இல்லை.(உ)

வ்ராணஸ்ததாஸ (கூ. க. கூ)

(உகo) பிராணன் புறப்படுதலினாலும்.

வ்ராணஸ்-ஜீராஉதo வஎவ வ்ராணா கந-ஜீராஉஜி|

(பிரு. கூ. ச. உ)

"பிராணன் புறப்படும்போது அதனோடு கூட எல்லாப் பிராணன்களும் புறப்படுகின்றன" என்பதனால் ஆன்மாவோடு இந்திரியங்கள் புறப்படுத லால் இந்திரியங்களுக்குப் பற்றுக்கோடாயுள்ள சரீரகமனமும் அறியப்படு கின்றது. (கூ)

ஆகலின், ஆன்மா புறப்படும்போது சூக்குமபூதத்தோடு சேர்ந்து கொண்டே போகின்றதென்பதைச் சூத்திரகாரர் ஆசங்கித்துப் பரிகரிக்கின் றனர்.

கரூர்ஷி மதி ஸ்ரூதெரிதிசெஇ ஹாகூகூவாஸ (கூ. க. ச)

(உகக) அக்கினி முதலியவற்றை அடைகின்றவெனச் சுருதி கூறுகின்றதெனின், அன்று; அது கவுணமாதலின்.

(ஆக்ஷேபம்)

யதராவு வாஷவு ஷ்ரதவுர்தீ வாமவெவுதீ வாதo வ்ரா ணஸ்ஷுக்ராதிதுர் (பிரு. இ. உ. கஉ)

"எங்கே இந்த இறந்த மனுஷனுடைய வாக்கு அக்கினியையும், பிராணன் வாயுவையும், கண் சூரியனையும் அடைகின்றனவோ" என்றற்றொடக்கத்த சுருதிகளில், இந்திரியங்கள் அக்கினிமுதலியவற்றை அடைதலாகக் கேட்கப்படுகின்றது. ஆகலின், ஆன்மாவோடு கூட இந்திரியங்கள் செல்லலில்லையே எனின்,

(உத்தரம்) அங்ஙனமன்று; வாக்காதி சப்தங்கள் வாக்காதி அபிமான தேவதைகளிற் கவுணமாயினமையானும்,

ஓஷயலொஷாநி வநஸ்பதிந்ஸாஂ (பிரு. நி. உ. கஉ)

"ரோமங்கள் செடிகளையும், கேசங்கள் மரங்களையும் அடைகின்றன" என்று (அங்ஙனஞ்) செல்லாத ரோம முதலியவற்றோடு கூடப்படிக்கப் படுகின்றமையானுமாம். (ஈ)

வாயுஸே ஸம்வணாதி அஹ கா வாவஹ்ருவவிதீ

(சு. க. ஆ)

(உகூஉ) முதற்கண் கூறப்படாமையான் எனின், அஃங்ஙனம் அன்று; பொருத்தமுறுதலான் அவைகளே.

(ஆக்ஷேபம்) முதற்கண்ணே சுவர்க்கலோகாக்கினியையுற்றுப் பேசுங் கால் அப்புக்கள் கேட்கப்படாமையின், அப்புக்கள் புறப்படவில்லை;

வாஆவஸ்மிந்அக்ந ஆவாஸ்ரத்தாம் ஜுஹ்வதி (சாங். இ. ச. உ)

"இந்த அக்கினியில் தேவர்கள் சிரத்தையை ஆகுதிசெய்கின்றனர்" எனச் சிரத்தையே கேட்கப்படலான் எனின்,

(உத்தரம்) அன்று. அப்புக்களே சிரத்தை என்னும் சப்தத்தினாற் கூறப்படுகின்றன. எங்ஙனம்? சிரத்தையை அப்புக்கள் என்று சொல்வதே பிற்றொடர்ச்சிக்கு இணக்கமுறுதலின்.

ஸ்ரத்தா வா ஆபஃ (தைத். பிராம். கூ. உ. ச. உஅ)

"சிரத்தையே அப்புக்கள்" என்று சுருதி சொல்வதாற் சிரத்தை என்னும் பதம் அப்புக்களுக்குப் பிரயோகிக்கப்படுகின்றது. (ஓ)

சூத்திரகாரர் பின்னரும் ஆக்ஷேபித்து உத்தரம் இறுக்கின்றனர்.

ஸ்ரூயதேஅபி ச ஸ்மார்தே காரணாத் வ்ருதீஷு (சு. க. சு)

(உகூக) கூறப்படாமைபற்றி (அது) அன்றும் எனின், அன்று; யஞ்ஞாதி செய்பவர் அறியப்படுதலின்.

(ஆக்ஷேபம்) சண்டி விஞ்சினைகளில் அப்புக்கள்மாத்திரம் கூறப்படுகின்றன. அவற்றுற்றமுவப்பட்ட ஆன்மா குறிக்கப்படவில்லையே எனின்,

(உத்தரம்) அல்லனம் அன்று;

ஸ ய உஶீநரஸீ ஹஷ்டாவபிதேஷ்டதனித்ய॰ வாஸதே தே யஜ்ஞிஸ்ஸிவா॰ஸவஜ்ஞி யஜ்ஞோ ஹ்யாத்ரி॰ ராத்ர்யாவாஸவகூஷ்வாஸவகூஷ் ஹ்யாநீ ஷ்டகூஷ்மிணைதே ஶாவாம்ஷாநீ மெந தெவாம்வத்ஸரஸ்ஸி வரா வஜ்ஞி। ஶாவைஹ்யஃ வித்ர்யொகூ॰ வித்ர்யொகூஷ்டா கூஸாஶாகூஸாஷ்டா ஹ்ரஸ்ஸிவஸிஷ வொஸோ ராஜா தஷ்டிவா நாஸிஹ்ய॰ கம்தெவர்ஹகூஷயஜ்ஞி। தஸ்மிநீ யாவத்ஸ்வாதஸ்ஸிகூர்ஸ்யாzஸ்யெதஸ்மிவாஹ்யாந॰ வாநநிர்வதர் ஜ்ஞாயஸ்யெ தாகூஸ॰ ஶாகூஸாஷ்டாஸ்ய॰ வாயாஹர்மிகூர யஜ்ஞோ ஹவதி யஜ்ஞோ ஹ்மிகூர்யாzஹ்ர॰ ஹவதி। ஈஹ்ர॰ ஹ்மிகூர் தெவொ ஹவதி தெவொ ஹ்மிகூர் வ்ரவஷர்தி தஹ ஹ்ரீரஹியவா ஒஷதியிவ நவ்ஷதய ஸ்ரஜ்ஞோஷா ஹதி ஜாயஸ்தெ zதொ ஸ்வெ வஸ்ய ஹ்ரஜ்ஞிர்வ்ரவதாஸ॰ யொயோர்ஹ்யுஜ்ஞிர்தி யொ ரெத ஸ்ரஜ்ஞதி தஜ்ஞ்ய வஸ ஹவதி।

(சாந். நி. க. ந., ச, நி, கூ)

"யஞ்ஞமும் பிற தருமங்களும் செய்துகொண்டு கிராமத்திலே வசிக்கின்றவர்கள் தூமத்துக்குச் செல்வார்கள்; தூமத்திலிருந்து இரவுக்கும், இரவிலிருந்து அபரபக்ஷத்துக்கும், அபரபக்ஷத்திலிருந்து தக்ஷிணயனத்துக்குஞ் செல்வர்: ஆனல் அவர் வர்ஷத்தை அடைவதில்லை; தக்ஷிணயனத்திலிருந்து பிதிர்லோகத்துக்கும், பிதிர்லோகத்திலிருந்து ஆகாயத்துக்கும், ஆகாயத்திலிருந்து சந்திரனுக்கும் போகின்றனர்; அவன்தான் சோமராஜன்; அங்கே தேவர்களுக்கு அவர்கள் (சிவான்மாக்கள்) அன்னமாக, அவர்களைத் தேவர்கள் அயில்கின்றனர்; தமது கருமமெல்லாம் முடியும் வரையும் அங்கே இருந்து வந்தவழியே ஆகாயத்துக்கும், ஆகாயத்திலிருந்து வாயுவுக்குமாக மீள்கின்றனர்; பின் யஞ்ஞகாரன் வாயுவாகி, தூமமாகி, பனியாகி, முகிலாகி, மழையாகின்றன்; பின்னர்த் தானியமாயும், ஒஷதிகளாயும், மரங்களாயும், எள்ளாயும், பயறுயுமாகின்றன்; இங்கிருந்து மீள்குதல் மிகு கஷ்டத்துள்ளாகும். எதனல் எனின், எவன் அவ்வன்னத்தையுண்டு வீரியத்தை உருக்கின்றனனே அவன் போலாகின்றன் (அந்தச் சிவான்மா)" என்னும் பிற சுருதி வாக்கியங்களிலே யஞ்ஞாதி செய்தவர் சோமராஜா என்று கூறப்பட்டது. அதிர்தமயமாய விசேஷ தேகத்தோடு சுவர்க்கத்திலே நல்வினைப் பயனைத் துய்த்து, அந்நல்வினை ஒழியுங்கால் சண்டிவந்து கர்ப்பத்திலே மிடிமை இப்பர் என்று அறியப்படுகின்றமையான்,

தஸ்மி ஜைதஸ்மிஞ்ஜெள தெவாஸ்ரூஷ்டா ஜ்ஹ்ரதி தஸ்யா ஆஹு॰ தெவொ ராஜா வஸ்ஹவதி (சாந். நி. ச. உ)

"அந்த அக்கினியிலே தேவர்கள் சிரத்தையை ஆகுதிசெய்கின்றனர்; அந்த ஆகுதியிலிருந்து சோமராஜன் உதிக்கின்றான்" என்னும் வாக்கியத்தில் அந்த யஞ்ஞஞ் செய்பவர்களே சோமராஜனுக்குக் குறிக்கப்படலான். ஆகலின், வினவிடைகளினும் அப்புக்களாற் றழுவப்பட்டு அதனையே சரீரமாகக் கொண்ட "ஆன்மாவே அப்பெனக் கூறப்படுகின்றான்" என்று பெறப்படுகின்றது. அது பற்றி விரோதமில்லை. (கூ)

ஹாதோ வா நாத்ர விஜ்ஞாதாயாஹி டஸ்-யதி (கூ. க. எ)

(உக்ச) ஆன்மாவை அறியாமையின், அது கவுணமே; அங்ஙனம் சுருதி கூறுகின்றது.

(ஆக்ஷேபம்)

வஷ வொசோராஜா தத்வா நாஹுஞ்ஜெவா ஹுச்யஜ்ஜி

(சாந். இ. க0. ச)

"இவன் சோமராஜன்; அவன் தேவர்களுக்கு *அன்னம்; இவனைத் தேவர்கள் †உண்கின்றனர்" என்று சுருதி கூறியவாறு, அவன் சோமராஜனுடைய வியல்பை அடைந்தபோது அவன் தேவர்களால் உண்ணப்படுவதாகக் கூறப்படுகின்றமையான், அந்த அப்பு (என்னும் மொழி) சிவான்மாவைக் குறிக்காதெனின்,

(உத்தரம்) அவன் உண்ணப்படுகின்றான் என்று கூறினமை கவுணமே. அவன் பரமான்மாவை அறியாமையாலே தேவர்களுக்கு அறிவிக்கும் கருவியாகின்றான் என்பதே அபிப்பிராயம். அவ்வாறே,

யதாவஸ்-ஸெவ0 வஜெவா நாழி (பிரு. கூ. ச. க0)

"பசுவிருப்பது போல அவன் தேவர்களுக்காகின்றான்" என்னுஞ் சுருதியானது பரமான்மாவை அறியாதவர்கள் பசுப்போலத் தேவர்களுக்கு உபகரணமாகா நிற்கின்றனர் என்று காட்டுகின்றது. பரமான்மவித்துக்கள் சிவபெருமானுக்கு உபகரணமாகவும், அநான்மவித்துக்கள் தேவர்களுக்கு உபகரணமாகவும் ஆகின்றனர் என்றும் அறியற்பாற்று. ஆகலின், எப்பிரகாரத்தினாலேனும் ஆன்மா மற்றோர் சரீரம் எடுக்குங்காற் சூக்குமசரீரத்தோடே செல்கின்றான் என்பது சித்திக்கது. (எ)

---

* அன்னம் என்றது உபகரணமாய்ப் பிரியமாயுள்ளதின் மேற்று.

† உண்கின்றனர் என்றது தேவர்களுக்கு அவர்கள் பிரீதியாகின்றார் என்பதின் மேற்று.

(உ) கிருதாத்தியயாதிகரணம்.

கரிஷ்யதீயே zந்ரஸ்யவாதீ ஏஷ்டவ்யதிரேகோ யதிஷ்டேநவத்.

(சூ. க. அ)

(உகூறு) கருமம் முடிந்தகாலையில் ஆன்மா கன்மசேஷத்தோடு மீளுகின்றது; அங்ஙனம் அது போனபடியானும் வந்தபடியானும் எனச் சுருதி ஸ்மிருதி கூறுவதினால்.

ஆன்மா பூத சூக்கும தேகமுடையனகவே சுவர்க்கலோக முதலிய உலகங்களிலே போய்த் தேவசரீரமடைந்து சுயகன்மத்துக்குத் தகுதியாய பலங்களைத் துய்க்கின்றான் என மேலைச் சூத்திரத்தில் நிரூபிக்கப்பட்டது.

இப்போது ஆன்மா அங்ஙனம் துய்த்த பின்னர் இவ்வுலகத்துக்கு வருங்கால், அவன் கன்மசேஷத்தோடு வருகின்றானா? இன்றேற் கன்மமுழுமையுந் துய்த்தபின் வருகின்றானா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஒரிடத்திலே (தியானப்பொருளாகிய புருஷர்) ஆகாயான்மாவாதலிற் பெரியர் என்றும், மற்றோரிடத்திலே யவைக்கொப்பாயிருத்தலிற் சிறியர் என்றும், ஒன்றிலே சத்தியசங்கற்பத்துவமுடையர் என்றும், மற்றொன்றிலே வசித்துவமுடையரென்றும் பிறவுமாகக் குணங்கள் ஒன்றுக்கொன்று பேதமுறக் கூறப்படலான், ஈரிடத்துங் கூறப்பட்ட வித்தைகள் பின்னமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஈரிடத்தினும் ஞான (மனே) மயத்துவமுதலிய சமமாய்க் கூறப்பட, ஆகாயான்மா என்றது ஆகாயம்போலச் சுவச்சமாயிருத்தலானும், தோத்திரஞ் செய்வதற்கு மகிமையைக் காட்டுவதினாலும், வசித்துவ முதலிய குணங்கள் சத்தியசங்கற்பத்துவ முதலிய குணங்களிலிருந்து பேதமுறுவன அன்றுமாதலினாலும் ஈரிடத்தும் உரைத்த வித்தை ஒன்றே யாம். (கசூ)

(கக) சம்பந்தாதிகரணம்.

ஸம்பந்தாதேவமந்யத்ராபி (கூ. கூ. உ0)

(கூஎச) (இரண்டுக்கும் ஒப்பாக அவர்) சம்பந்தமிருத்தலான், அங்ஙனமே பிறவிடத்தினும்.

ய ஏஷ ஏதஸ்மிந்மண்டலே புருஷ: ஸ ஏவாஹமஸ்மி ஸ ஏவாஹமஸ்மி|

(பிரு. எ. நி. உ, கூ)

"அந்த மண்டலத்திலேயுள்ள புருஷர் இங்கே வலக்கண்ணினும் உளர்" என்று பிருகதாரணியத்திலே தொடங்கி, வியாகிருதி சரீரங்கொண்டு சத்தியமாகிய பிரமமானது சூரியமண்டலத்தினும் வலக்கண்ணினுமாகத் தியானிக்கற்பாற்று என்று கூறப்படுகின்றது. பின்னரும்,

தஸ்யோபநிஷதஹரஹரிதி (பிரு. எ. நி. கூ)

தஸ்யோபநிஷதஹரஹரிதி (பிரு. எ. நி. ச)

"அவரது இரகசியநாமமாகிய அஹர்" அதிதேவதை என்றும்,

"அவரது இரகசியநாமமாகிய அஹம்" அத்தியாத்மம் என்றும் இரு இரகசிய நாமங்கள் கூறப்படுகின்றன.

ஒவ்வோரிடத்தும் இந்த இரண்டு நாமங்களும் தியானிக்கற்பாலனவா? அன்றோ? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உபாசிக்கப்படும் பொருளாகிய பிரமம் ஒன்றுமாதலின், வித்தை ஒன்றே ஈரிடத்துங் கூறப்பட்டது. ஆகலின், இரண்டிடத்தும் இரண்டு பெயர்களும் சிந்திக்கப்படல்வேண்டும் எனின், (உ0)

(சித்தாந்தம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

நவா விசேஷாத் (கூ. கூ. உக)

(கூஎந) இன்றேல் (அங்ஙனம்) இன்று; பேதமுறலின்.

வித்தைகள் ஒன்றன்று; சூரியன் கண் என்னும் ஸ்தானசம்பந்தமாக உபாசனை ஈரிடத்தும் பேதமுறுதலின். ஆகலின், அவ்வவ்விடத்துக்கே அந்தந்த நாமம் இயைந்தது. (உக)

(கஉ) தர்சயத்தியதிகரணம்.

உஸ-யதி ச (கூ. கூ. உஉ)

(கூஎசு) சுருதியுஞ் சொல்கின்றது

சாந்தோக்கியத்தினும் தைத்திரீயத்தினும் மண்டலவித்தை கூறப்படுகின்றது. அந்த வித்தை ஒன்றா? வேறா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ய வஷெ zஜராதிதெ ஹிரண்ணயஃ வ்ராஷெ ஃபுஸிதெ ஹிரண்ய ஸ்ரு ஹி-ரண்யகெச கூவ்ரணவொ-ஸ்வ- வஸவ ஸுவ ண-ஃ (சாந். க. சு. சு)

"பொற்றடியும், பொற்கேசமுமுடையராய், நகம்வரையும் எல்லாம் பொன் மயமுடையராய்ச் சூரியனுள்ளே காணப்படும் பொன்மயபுருஷர்" என்று சாந்தோக்கியத்திற் கூறப்படுகின்றது.

ய வஷெ zஜராதிதெ ஹிரண்யயஃ புருஷ.ஃ (சாந். க. சு. சு)

"சூரியனுள்ளே இருக்கும் புருஷர் பொன்மயபுருஷர்" என மற்றொன்றிலே மூவேதங்களினுமுள்ள மண்டலத்துள்ளே நக்கிரர் புருஷரும் அங்கே இருக்கும் பொன்மயபுருஷனையும்தூரைத்து,பின்னர் உபசாரத்திலே கருதியானது

ஸவெ-ா வெவ ஸுஃ (தைத். ஆரணி. க0. உச. சஉ)

"எல்லாம் உருத்திரர்" என்று தொடங்கி,

நமோ ஹிரண்யவாஹவெ ஹிரண்யவர்ணாய ஹிரண்யஸ்ரஜவாய ஹிரண்யபதயெ யாம்பதயெ நமோ நஃ (தைத். ஆரணி. க0. உஉ. சo)

"போற்கைகளுக்கு நமஸ்காரம், பொன்வர்ணர்க்கு நமஸ்காரம், பொன்வடிவினர்க்கு நமஸ்காரம், போற்பதிக்கு நமஸ்காரம், அம்பிகாபதிக்கு நமஸ்காரம், உமாபதிக்கு நமஸ்காரம், பசுபதிக்கு நமஸ்காரம்" என்பதிறுதியாகச் சர்வான்மகத்துவமும், இரண்ணியபாகுத்துவமும், உமாபதித்துவமும் கூறப்படுகின்றன. ஓரிடத்துச் சரீரமுழுமையும் பொன்மயமாகவும், மற்றோரிடத்திலே பாகுமாத்திரம் பொன்மயமாகவும் கூறப்படலின் ரூபபேதமும், ஓர் இடத்தில்

ஸவெ-ா வெவ ஸுஃ (தைத். ஆரணி. க0. உச. சஉ)

"எல்லாம் உருத்திரரே" எனச் சர்வான்மகத்துவமும், மற்றோரிடத்தில்

ஸவெ-ஷாம மொசூநாதீஷெ!

"எல்லா உலகத்தையும் ஆளுகின்றனர்" எனச் சர்வாதிபத்தியமுமாகிய குண பேதமும் எய்துகின்றமையின், வித்தை ஒன்றன்றே எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். வித்தை பேதமின்று.

ஈஜ்ஜ்யாஜ்ஜ்யே (சாந். க. சூ. சூ)

"ஆகித்தியனுள்ளே உள்ளார்" என ஸ்தானம் ஒன்றுபிருத்தலின், வித்தை ஒன்றும் எனக் காட்டுகின்றது. தைத்திரீயத்திலே,

நாராயணோ வை புருஷோ

"பொன்மயபுருஷர்" என்று உபக்கிரமித்து, இரண்ணியபாகு என்னும் உப லக்ஷணையின்மேலே உபசங்காரத்தினும் சர்வாங்கமும் சுவர்ணத்துவமே என்று கூறப்பட்டது. சகத்துக்கு நாராயணனும், அவர் அதனைப் பிரவேசித்து நிற்கின்றமையான் உலகமாய் நின்றனர் என்பதுபயுக்தம் எனநிரூபிக்கப்பட்டது. ஆகலின், ஈரிடத்தும் ஒன்றே பிரதிபாதிக்க வேண்டினமையின், உமாபதித்துவமுதலிய குணங்கள் இரண்டிடத்தும் (நியாயத்தில்) உபசங்கரிக்கற்பால னவாம். (உஉ)

(ஙஙு) சம்பிருத்தியதிகரணம்.

ஸம்ஹ்ருதிருவ்யாப்தேருபபாதம் (கூ. கூ. உகூ)

(ஙஎஅ) ஆதலினாலும் தொகுத்தலும் ஆகாயவியாபகமும்.

இராணயநீயர் உத்தரபாகத்தில்,

ப்ரஹ்மஜ்யேஷ்டா வீர்யாய ஸம்ஹ்ருதாநி ப்ரஹ்மாக்ர ஜ்யேஷ்ட மிவாசகதாந | ப்ரஹ்மஜ்யேஷ்டாநாம ப்ரயமோ ஜஜ்ஞே தெநாஹ்ருத்தி ப்ரஹ்மணா ஸ்ப்ருத்தமூர் (தைத். பிராம். உ. சு. எ. எஉ)

"பிரமமானது வீரியமாய வலிய செய்கைகளைச் செய்தது; தொடக்கத்திலே ஜ்யேஷ்டமாகிய பிரமம் ஆகாயத்தை ஊடுருவிற்று; பிரமம் பூதங்களுக்கு முன்னே இருந்தது; அந்தப் பிரமத்தோடு எதிர்க்கவல்லார் யார்" என்று கூறப்படுகின்றது. ஹரி (நாராயணர்), அரன் (உருத்திரர்), இரணியகருப்பர் (பிரமா) முதலாயினர்க்கு ஜ்யேஷ்டமாயும், உற்கிருஷ்டகடவுளாயும், இவர்கள் சிருஷ்டிக்கப்படுவதற்குமுன்னே பரமாகாசபதத்தை வியாபித்ததாயும் எவராலும் மேற்கொள்ளப்படாதனவாய், முதிர்ந்தனவாய், பிறராற் செய்ய இயலாதனவாய், உலகத்திலே (பிரசித்த) மாயிருந்த திரிபுரதகனம் காளகூடகபளனமுதலியவற்றை ஸ்ரீகண்டமூர்த்தியாதி வடிவங்கள் வாயிலாகச் செய்துமுடித்ததாயுமுள்ள அந்த மஹத்தான பிரமத்தின் வீரியசித்திகளும்

ஆகாயவியாபகமும் பரவித்தைகள் அனைத்தினும் உபசங்கரிக்கவேண்டுமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) மற்றவைகள் போல, இத்தச் செய்கைகளும் பிரமத்தின் குணங்களானமையாலும், ஓர் விசேஷவிதியைக் குறித்து இவைகள் கூறப்படாமையானும் பரவித்தைகள் அனைத்தினும் உபசங்கரிக்கற்பாலன வாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. வியாபகமானது எல்லா உபாசனைகளினும் உபசங்கரிக்கப்படுவது அன்று. சிறிய ஸ்தானங்கள் ஒழிந்த மற்றை இடங்களிலே சாமர்த்தியத்தினற் (காரியத்தின் இயற்கைகொண்டு) உபசங்கரிக்கப்படல்வேண்டும்.

தெவா ஹவைவ ஸ்வர்ம் லொகமேஜந் தெ தெவா ரூத்ர மப்ரூவந்நு வை நோ (அதர்வசிர)

"தேவர்கள் சுவர்க்கலோகத்தை அடைந்தார்கள்; நீவிர் யார்? என்று அந்தத் தேவர்கள் உருத்திரரைக் கேட்டார்கள்" என்னுஞ் சுருதியினல் நிரதிசயானந்தத்துக்கு ஸ்தானமாதலின் சுவர்க்கம் எனப்படும் அது, பிரமாதி பதவிகளினும் மஹத்தாகிய மகாஸ்தானமாகக் கேட்கப்படுகின்றது. ஆகலின், அப்ஸ்தானங்களுக்கு வேறுயுள்ள வைசுவாநராதி உபாசனைகளிலே ஆகாயவியாபகம் உபசங்கரிக்கப்படல்வேண்டும். அதனேடிசைந்தமையால் மகாவீரியச் செய்கைகளும் அங்கே உபசங்கரிக்கற்பாலன. (உகூ)

(கச) புருஷவித்தியாதிகரணம்.

வாஜஸநேயிந்யாமபி மைகரேஷா ஸாந்தாநாத (கூ. கூ. உச)

(சுஎஅ) புருஷவித்தையினும் அப்படியே; மற்றவைகள் கூறப்படாமையான்.

புருஷவித்தை சாந்தோக்கியத்தினும் தைத்திரீயத்தினும் கூறப்படுகின்றது.

வாஜஸநேஷா வாவ யஜ்ஞஸ்ய யாஸி உதரவிம்ஶதி வஷ்ணி கீர்யா தஸ்யவநிஷ் (சாந். கூ. ககூ. க)

"புருஷனே யஞ்ஞம்; அவனுடைய இருபத்துநான்கு வயசும் பிராதஸ் சவனம்" என்று புருஷவித்தையானது ஒன்றிலே சொல்லப்படுகின்றது.

தமேவைவம் விதுஷோ யஜ்ஞஸ்யாத்மா யஜமாநஸ்ரீர்வா வத்ஸரஸ்ரீர் தக்ஷிணாஸ்ரோ வெதிஃ (தைத். ஆரண். கo. அo. கoக)

"யாகத்தில் ஆன்மா யஜமானன், அவனது சிரத்தை மனைவி, அவனது சரீரம் இந்தனம், அவனது நெஞ்சு வேதிகை என இங்ஙனம் அறிகின்றவன்" என்று மற்றொன்றிற் கூறப்படுகின்றது.

இந்த இரு உபநிடதங்களினுங் கூறப்பட்ட புருஷவித்தை ஒன்றா? பின்னமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இந்த இரண்டு உபநிடதங்களினுமுள்ள வித்தைகள் புருஷவித்தை எனப் பெயரினற் பேதமுறுமையானும், யஞ்ஞத்தில் வெவ் வேறு அங்கங்கள் இரண்டினும் சமமாகக் கூறப்படலானும் வித்தைகள் ஒன்றேயாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. தைத்திரீயத்திற் கூறப்படும் யஜமானன் பத்தினி முதலிய யஞ்ஞ அவயவங்களும், மூன்று சவனங்களும் சாந்தோக்கியத்திற் பேசப்படாமையானும், ஆங்கு வேறு பிரகாரமாகச் சவநத்திரய முதலிய சொல்லப்படலானும் புருஷவித்தை இரண்டினும் பின்னமேயாம்.

ய꣡ஜ்ஞா꣡ய0 வ்ரு꣡தா꣡ஶ்ரு꣡ந்ரு꣡ நு꣡ தா꣡ந் ஸ꣡வ꣡நா꣡ந்।

"மாலை காலை உச்சி என்பனவே சவனங்கள்" என்று தைத்திரீயத்திற் கூறப்படுகின்றது. சாந்தோக்கியத்திலோ புருஷனுடைய ஆயுசு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுச் சவனங்கள் மூன்றுகக் கூறப்பட்டன; தைத்திரீயத்திலே பலங் கூறப்படாமையின்.

வ்ரு꣡ஹ்ணை க்ஷ꣡த்ரா꣡ய ஶ்ரி꣡ய்தை꣡ நம0 ய꣡ஜ்ஞ꣡ய।

(தைத். ஆரணி. க0. எகூ. க00)

"பிரமத்தினெளிக்காக ஒருவன் ஓம் என்று சொல்லி (பரம) ஆன்மாவைத் தியானித்தல்வேண்டும்" எனப் பிரமவித்தையைக் கூறி,

வ்ரு꣡ஹ்ணோ ஶ்ரி꣡ரோ நா꣡வ்ரு꣡தி (தைத். ஆரணி. க0. எகூ. க00)

"பிரமத்தின் மகிமைக் குணத்தை அடைகின்றான்" எனப் பலத்தையும் கூறி,

தை꣡வ்ரு0 வி꣡ஷ்ணு꣡।

"இங்ஙனம் அறிபவன்" எனக் கூறப்பட்ட புருஷவித்தை இப்போது கூறப்படும் பிரமவித்தைக்கு அங்கமாய் அதன் பலம் பிரமத்தை அடைதலேயாம் என்றும், சாந்தோக்கியத்தில்

ஸஹ ஷோ꣡ட꣡ஶவர்ஷ꣡ஶ꣡தம0 ஜீவ꣡தி (சாந். கூ. ககூ. எ)

"அவன் ஆயிரத்தறுநூறு வருஷம் வசிக்கின்றான்" என்றும் வித்தையின் பலன் கூறப்பட்டிருக்கின்றது. ஆகலின் பலத்திலே பேதமுண்மையானும், யஞ்ஞ அவயவங்களிலே பேதமுண்மையானும் வித்தை ஒன்றன்று. (உசு)

(கநி) வேதாத்தியதிகரணம்.

வெயாஉவுஷ்ஷஸ் (கூ. கூ. உநி)

(கசஎ) ஊடுருவுதல் முதலிய வேறு பொருள்கள் பேத முறுதலான்.

தைத்திரீயோபநிடத ஆரம்பத்திலே,

ஸுஹா மித்ரஃ0 வருணஃ (தைத். க. க)

"மித்திரன் எங்களுக்கு இன்பத்தைக் கொடுக்க; வருணன் எங்களுக்கு இன் பத்தைக் கொடுக்க"

ஸஹ நாவவது (தைத். உ. க)

"அவன் எங்கள் இருவரைக் காக்க" என்று கூறப்பட்டிருக்கின்றது.

இந்த மந்திரங்கள் வித்தைக்கு அங்கமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வித்தைக்குச் சமீபத்துளவாதலின் அவை வித்தியாங்க மாகும் எனின்,

(சித்தாந்தம்) ஆதர்வணிகருடைய உபநிடத ஆரம்பத்திற் கூறப்பட்ட

ஸுக்ர0 வ்ரவீது ஹ்ருத்ய0 வ்ரவீது।

"சுக்கிரத்தை ஊடுருவி, இதயத்தை ஊடுருவி" என்றற்றொடக்கத்த மந்திரம் இதயத்தை ஊடுருவுவதை உணர்த்துவதாய்ச் (சத்துருவுக்கு மரணத்தை விளைவிக்க) அபிசாரத்தொழில் இருந்தாற்போலவேனும், ஐதரேய வாஜச நேய உபநிடதங்களின் ஆரம்பத்திற் கூறப்பட்ட மகாவிரத பிரவர்க்கிய கருமங்கள் வெளிப்படை விதிகளாக யஞ்ஞகருமங்களுக்கு அங்கங்களாயி னாற் போலவேனும், மேலே உரைத்த அவ்விரு மந்திரங்களும்

ஔத0 வதிஷ்டாஂ (தைத். ஆரணி. எ. க. க)

தேஜஸ்வி நாவதீதமஸ்து (தைத். ஆரணி. அ. க. க)

"நான் உண்மை சொல்வேன்; எங்கள் படிப்பு தேஜசாகுக" என்றவாறு வேதம் படிப்பதற்கு அங்கங்களாயமைந்தனவன்றி வித்தைக்கு அங்கங்களா வன அன்று; அவற்றின் பயன் வேறுதல்பற்றிச் சுருதி, லிங்கம், வாக்கியம் என்பவற்றினும் சந்நிதி தூர்ப்பலமாதலின். (உநி)

(ககூ) ஹாந்தியதிகரணம்.

ஹாநௌ தூபாயந ஶப்தஶேஷத்வாத் குஶாச்ச்ந்தோ வந்தவ்ய வத்தாஹ்ய (கூ. கூ. உசூ)

(கூ.அo) ஆயின் விமோசனவிஷயத்தில் (அது பிரவேசத்தோடு சேர்த்துக்கொள்ளப்படல்வேண்டும்); இது (விமோசனம்) பிரவேச வாக்கியங்களுக்குச் சேஷமாயிருத்தலின்; சுசங்கள், சந்தசுகள், துதி, கானம் என்பவற்றிற்போல; இது விளக்கப்பட்டதாயிற்று.

வேதசாகை ஒன்றிலே, பிரமத்தை அடையும் அறிஞன் புண்ணிய பாவவிமோசனத்தை அடைகின்றனன் என்று கூறப்பட்டிருக்கின்றது. வேதத்தின் மற்றோர் சாகையிலே, அவன் நீங்கப்பெற்ற புண்ணியபாவமிரண்டிற் புண்ணியம் சிநேகிதர்களையும், பாவம் சத்துருக்களையும் பிரவேசிக்கின்றன என்று கூறப்படுகின்றது. மற்றோர் சாகையிலே, அவ்விரண்டினின்று நீங்குதலும், அவற்றிற் பிரவேசமுமாம் இரண்டுங் கூறப்பட்டன. இஃதெல்லாம் தியானத்தின்பொருட்டேயாம்.

ஈண்டு (அவற்றை) விடுதலும் (அவற்றிற்) பிரவேசித்தலுமாகிய இரண்டும் எவ்விடத்துந் தியானிக்கற்பாலனவா? இன்றேல் அவற்றுள் ஒன்று சிந்திக்கற்பாலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இதனுற் பெறப்பட்டதுயாது? சாட்டியாயனகத்திலே

தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருதஸ்ஸாது க்ருத்யாம் த்விஷந்தஃ பாபக்ருத்யாம்

"அவனுடைய புத்திரர்கள் அவன் ஆஸ்திபையும், அவனது சிநேகிதர்கள் அவன் புண்ணியத்தையும், அவனது சத்துருக்கள் அவன் பாவத்தையும் அடைகின்றனர்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

யதா கஷ்வ இவ ரோமாணி வித்துய பாபம் தர்மேண ஹ்ருதயஸ்யாத்மா பாப்மநஸ்திரோதத்த இதி (சாந். அ. கூ. க)

"ஓர் குதிரை தன் உரோமத்தை உதறுவதுபோலப் பாவத்தை உதறி, இராகுவாயினின்று சந்திரன் விடப்படுவதுபோல" எனத் தாண்டிசாகையினர் கூறுவர்.

தத்தோ விதுஷ்புண்யபாபே விதூய நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி (முண். கூ. க. கூ)

"அப்போது வித்துவான் புண்ணியபாவங்களை உதறி, நிரஞ்சனனாய்ப் பரம சாமியத்தை அடைகின்றான்" என அதர்வணவேதம் கூறுகின்றது. ஈண்டு வித்துவான் புண்ணியபாவத்தை ஒழித்தல்வேண்டுமென்று கூறிய சுருதியில் விடப்பட்ட அவற்றின் பிரவேச ஸ்தானம் உபசங்கரிக்கப்படவேண்டியதின்று; அதனை ஒழித்தல்வேண்டுமென்று கூறிய சுருதி அதனை வெளிப்படையாகக் கூறுமையான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஹாநி என்பது விமோசனம். உபாயனம் என்பது பிரவேசம்; விமோசனமாத்திரஞ் சொல்லப்பட்டபோதாவது, பிரவேசமாத்திரஞ் சொல்லப்பட்டபோதாவது, அவற்றுள் ஒன்றை மாத்திரம் குறியாது இரண்டுந் தொகுத்துக் கூறப்பட்டனவாயே கொள்ளற்பாற்று; விகற்பமாயன்று (அஃதாவது இரண்டில் ஒன்றுமாத்திரம் எனக் கோடற்பாற்றன்று). பிரவேசத்தை உணர்த்துஞ் சப்தமானது விமோசனத்தை உணர்த்தும் வாக்கியத்துக்குப் பரிசிஷ்டமாயிருத்தலின், அது சேஷத்துவம் எனப்படும்; எதனாலெனின், விடுக்கப்பட்ட புண்ணியமும் பாவமும் பிரவேசிக்குமிடத்தைக் கூறுதலால் முற்றியதைப் பிற்றியது ஆவசியகம் அபேக்ஷிக்கும்.

(ஆக்ஷேபம்) (வேதத்தின்) ஓர் இடத்திற் கூறப்பட்ட வாக்கியத்துக்குப் பிறிதோரிடத்துக் கூறப்பட்ட வாக்கியம் சேஷமாவதெங்ஙனமெனின்,

(உத்தரம்)

வா நவ்ருதயாஃ கூஷாஃ।

"பூக்காது காய்க்கும் மரத்தினின்று பிறக்கும் குரங்குகள்" என்னும் வாக்கியத்துக்கு, விசேஷமாய்ப் பிறிதோரிடத்துப்போந்த

ஔதும்பரயயாஃ கூஷாஃ।

"உதும்பரத்தின் மக்களாகிய குரங்களே" என்பது சேஷமானற் போலவும்,

தெவா ஸுராணாம ஊஷதொஹஃ।

"தேவர்களுடையவும் அசுரர்களுடையவும் சந்தசுகளால்" என்பதற்கு, பிறிதோரிடத்துள்ள

தெவஹூ ஹாவஷி வ்ருணீத।

"(தேவர்களுடைய சந்தசுகள் முதற்கண் வரவேண்டும்)" என்பது சேஷமானற் போலவும்,

ஷொடஶிநஃ ஸ்தோத்ர உபகுர்வீத (யசுர். வே. சூ. சூ. கக. சு)

"ஷோடசிகருமத்துக்கு ஸ்தோத்திரம் செய்கின்றான்" என்னும் வாக்கியத்துக்கு,

ஸூர்யோ விஷிதெ ஷொடஶிநஃ ஸ்தோத்ரஸ்ய।
(யசுர். வே. சூ. சூ. கக. சு)

"சூரியன் பாதி உதயமாகும்போது ஷோடசிகருமத்தின் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும்" என்பது சேஷமானற் போலவும்,

| பிதீஜ உவதாயஞ்|

"இருத்துவிக்குர்கள் பாடுகின்றார்கள்" என்பதற்கு

ருத்விஜ்யந்தே வதாயேதி (யசுர். வே. சு. கூ. க. நி)

"அத்துவரியு காணஞ் செய்யப்படாது" என்பது சேஷமானைப் போலவும், பிரவேசத்தைப்பற்றி உணர்த்துஞ் சுருதி (புண்ணியபாவ) விமோசனத்தை உணர்த்தும் வாக்கியத்துக்குச் சேஷமாகக் கொள்ளப்படுங்கால், அவற்றுள் ஒன்றுதான் (சிந்திக்கற்பாலது) என்பது நியாயமன்று. (மீமாஞ்சையின்) முதலாவது தந்திரத்தில்,

கவி தந்த வாக்யமிஷ ஸ்யாத்தந்யாயகூவாத்விகுணஸ்ய|

(பூருவமீமாஞ்சை. கo. அ. ச)

"ஒன்றைமாத்திரம் அங்கிகரிப்பது நியாயமல்லாமையால், ஒன்றுக்குமற்றது சேஷமாகும்" என்று கூறப்பட்டிருக்கின்றது. (ஈண்டு இவ்விஷயத்திற் பிரவேசத்தை உணர்த்திய வாக்கியம் மற்றதிற் கூறப்பட்டதைத்) துதிக்கவேனும், இன்றேல் உயர்ச்சியைக் காட்டவேனும் (உதவுகின்றது).

(ஆக்ஷேபம்) ஓரிடத்தெய்தும் அர்த்தவாதம் மற்றோரிடத்தில் வரும் அர்த்தவாதத்தை அபேக்ஷித்தல் எங்ஙனமாம் எனின்,

(உத்தரம்) அங்ஙனங் கூறல் ஒவ்வாது.

வசகவிமிஷ வா உதிதாவாவாதித்ய|

"இங்கிருந்து சூரியன் இருபத்தொன்றுவதாகக் காணப்படுகின்றது" என்னும் சாமத்தியானத்தைத் துதிக்கப்போந்த அர்த்தவாத சுருதியானது, (சூரியன்) இருபத்தொராவது என நிச்சயஞ் செய்யும்பொருட்டு

ஆஷாடாஸாஂ வஹ்ந்த்ரவஜ்ரய உதெமொகா ஹவாவாதித்ய வசக விமாஂ (யசுர். வே. நி. க. கo. சு)

"பன்னிரு மாசங்களும், ஐந்து இருதுக்களும், மூன்று உலகங்களுமாகிய இருபதும் நீங்கச் சூரியன் இருபத்தொராவதாகவும் (காணப்படும்)" எனத் தொகை நிர்ணயஞ் செய்தற்குக் கூறப்பட்ட (வாக்கியத்தைத்) தைத்திரீய சங்கிதையின் சத்திரப்பி காரணத்து அர்த்தவாதமாக அபேக்ஷிப்பதாகக் காணப்படுகின்றது. அர்த்தவாதமாயினும் பிரவேசம் உபசங்கரிக்கப்படவேண்டியது. மேலும்,

கதரவாக்யதஸ்யதெ வியதிநாதெ தஸ்ய ஹிரயாஜ்ஞாதெ யஸ்யாக்யாதிவயதே ஹிரயாதஸ்யதி (கௌஷீ. க. ச)

"அங்கே தனது புண்ணியபாவங்களை உதறுகின்றான்; அவனுடைய பற்றுள்ள பந்துக்கள் நன்மையைப் பெறுகின்றனர்; அவனுடைய சத்துருக்கள்

தீமையைப் பெறுகின்றனர்'' என்று கௌஷீதகியுபநிடதத்திலே விமோசனம் பிரவேசனம் என்னும் இரண்டும் ஒரிடத்திற் கூறப்பட்டன. ஆகலின், அவை இரண்டுஞ் சமுச்சயம். (உசு)

(கஎ) சாம்பராயாதிகரணம்.

ஸாஉபரராயை கதத்-வ்யாஹாவாதயாஹ்யுரு (சூ. சூ. ஊஎ)

(சூஅக) தேகவியோகாலத்தில் அடையவேண்டிய தொன்றுமில்லாமையான்; அங்ஙனமே பிறருஞ் சொல்கின்றனர்.

மேலுரைத்த புண்ணியபாவங்களின் விமோசனம் தேகவியோகாலத்திலா? மார்க்கத்திலா? சிந்திக்கற்பாலது என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரவர்த்திக்கின்றது. ஒரிடத்திலே,

சுஷு உவ ரொரோணி வியஷ்ய வாவ0 யஷ்கூ ஸரீரமு।

(சாந். அ. சுசூ. க)

"குதிரை தன் உரோமங்களை உதறுவது போல, பாவம் அனைத்தையும் உதறிப் பின்னர்த் தன் சரீரத்தை உதறி" என்னுஞ் சுருதியிற் றேகவியோகாலத்திலே புண்ணிய பாவவிமோசனம் கூறப்பட்டது. பிறிதோரிடத்தில்,

ஸ சூமஹூதி விரஜா0 நதீ0 தா0 மநஸாதைதி கதம் வஷ்கூத உஷ்ஷதெ வியஷ்நஷ்தெ (கௌஷீ. க. ச)

"அவன் விரஜாநதியை அடைந்து, ஞானத்தினல் அதைக் கடந்து, அங்கே தனது புண்ணியபாவங்களை உதறுகின்றான்" என வழியிலே அவற்றை விமோசனஞ் செய்தல் கூறப்படுகின்றது. இங்ஙனம் இரண்டு சுருதியிருந்தாலும், தேகவியோகாலத்திலேதான் விமோசனம் சிந்திக்கற்பாற்று; அதன் பின்னர்ப் பிரமப் பிராப்திக்கு வேறுக அடையற்பாலதாம் கன்மத்துக்குச் சகாயக போகமில்லையாதலின்.

கஷு தாவதெவசிரo யாவஹ விமோக்ஷ்ய சயஸ்வவித்ஷ்யு।

(சாந். சு. கச. உ)

"அவன் (புண்ணியபாவத்தினின்று) விடுபடாதவரையில், அவனுக்கு அங்கே தாமசமே; பின்னர் அவன் (பிரம) சம்பன்னனாவான்" எனப் பிறரும் கூறுகின்றனரன்றே. (அங்ஙனம்) தேகவியோகாலத்துக்குப் பின்னர்த்தான் பிரமம் அடையற்பாற்று. (ஊஎ)

ஹஷ்த உஷயாவிரொயாஸ (சூ. சூ. உஅ)

(சூ அஉ) விரும்பப்பட்டவாறு; இரண்டும் விரோதமின்மையின்.

தேகவியோககாலத்திற் புண்ணியபாவவிமோசனத்தைப்பற்றிச் சுருதி யுண்மையானும், விமோசனத்துக்குப் பின்னர்ப் பிரமப்பிராப்தி எய்துவதாகச் சுருதி யுண்மையானும், அவ்விரு சுருதிகளும் விரோதமுறுவண்ணம்

கதி ஸுகூ ஷ்ரவெ வியோ நுமெ (கௌஷீ. க. ச)

"அங்கே அவன் தன்புண்ணியபாவங்களை உதறுகின்றனன்" என்னுஞ் சுருதி பாகங்கொண்டு, பிரகரணத்துக்கியையப் பொருள் கோடற்பாற்று.

வாகதிஷ்வயா நo வ்ரூ நரோவரூ!

"இந்தத் தேவயான மார்க்கத்தை அடைந்து" என்னுஞ் (சுருதி) வாக்கியத்துக்கு முன்னே நேர்வதாக (அந்தச் சுருதிக்குப் பொருள்) கோடற்பாற்று. (உஅ)

உவவஹுஸ்ருகூணாவெ-ரோவமெ மெ-ரகவசு (சூ. சூ. உக)

(சூ அசு) (அந்த எண்ணீம்) நியாயமானது; அப்படிப்பட்டதொன்று காணப்படலான்; உலகத்திற் போல.

தேகவியோககாலத்திற் சர்வகர்மமும் க்ஷயமானலும், தேவயானத்தை அடையும் விதி பிரமோபாசகர்க்கு நியாயமே; (பிரமப்பொருளை அடைந்த பின்னும் வீடுற்ற ஆன்மா) அங்கே சுகித்துக்கொண்டு சஞ்சரிக்கின்றனன் என்று பெறப்படலின். அது

ஸ ஸ்ரூவஹ்வதி தஸ்ய ஸவெ-ஷ்ர மொகெஷ்ர கரீஷாரொ லவதி (சாந். எ. உரி. உ)

"அவன் சுவராஜ்யவாகிச் சமஸ்தலோகங்களினும் இஷ்டப்பிரகாரம் நிற்கின்றனன்" என்னுஞ் சுருதியினல் அறியப்படுகின்றது; (இது) உலகத்திற் போல (நோக்கின்றது); இராஜனை ஆசிரயித்த புருஷர் பிறர்க்குக் கிட்டாத பொருள்களையெல்லாம் பெறுதல் போலாம். ஆகலின், மார்க்க சுருதிக்கும் விரோதமில்லை. தேகவியோககாலத்திலே சமஸ்த கன்மமும் ஒழிந்து போனலும், உபாசனமான்மியத்தாற் சூக்குமசரீரமுளதாய், மார்க்கத்தில் எய்தும் இடங்களிற் சஞ்சரித்தலும், சந்திரனோடு சம்வாதஞ் செய்தன் முதலிய மற்றெல்லாப் பொருட்சித்திகளும் கூடுமே எனின், (உக)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

முதெ ரஷ்-ரவகூஷ்-ரூயயா zரூயா ஹி விரொயஃ (சூ. சூ. சூ0)

(சுஅசு) இரு சமயத்தினும் (தேவயான) கதி பிரயோசனமுடைத்து; இன்றேல் அங்கே விரோதமுளது,

தேகவியோக காலத்தினும், விரஜாநதியைத் தாண்டிப் போகும் காலத்தினுமாகிய இரு சமயத்தினும், கன்மக்ஷயம் எய்தியபோதே தேவயான கதியிற் பிரயோசனமுளது. இன்றேல், தேகவியோககாலத்திற்றான் கன்மமுழுதும் க்ஷயமாக ஆன்மா உடனே முக்தனாகின்றான் எனின், தேவயானம் நிஷ்பிரயோசனமாய் முடியும். (இதனால்) தேவயானத்தையுற்றுப்பேசுஞ் சுருதிக்கும்,

வா०ஜ்யோதி ரூபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே (சாந். அ. கஉ. சு)

"பரஞ்சோதியோடிசைந்து தனது ரூபத்தை அடைகின்றனன்" எனத் தேவயானம் வாயிலாகப் பிரமத்தை அடைந்த பின்னர் அறிவுவிகசித்தன் முதலிய சொரூபாவிர்ப்பாவத்தை உணர்த்துஞ் சுருதிக்கும் விரோதமுண்டாம். ஆகலின், இந்த உபாசனை சாமர்த்தியத்தினால் தேவயானகதியும், அந்த அந்த இடங்களிற் சஞ்சரித்தலும், சந்திரனோடு சம்வாதஞ் செய்தலுமாகிய எல்லாம் பின் எய்துஞ் சஞ்சரித்தன் முதலியபோலப் பொருத்தமாம். அங்ஙனமாயினும், பிரமத்தை அடையும் வரையும் புத்தி சங்கோசமாய்ச் சம்சாரம் நிலைத்தலும் உபாசனை சாமர்த்தியத்தினால் எய்துவதின்று. சம்சாரத்திற்கு மூலகாரணமாயுள்ள கன்மலேசம் நிலைத்துளதாகக் கோடல் ஆவசியகம் அங்கிகரிக்கற்பாற்று. இத்தச் சம்சாராதுவிருத்தி கன்மத்தினாலன்றிப் பரமேசுவரர் சங்கற்பவிசேடத்தினால் எனக் கோடற்பாற்றன்று; சிவபெருமானது சங்கற்பந்தான் (ஆன்மாவின்) கன்மத்தை வரையறுத்தனை நம்மாற் கூறப்படுதலின். எங்கள் மதத்திலே (சுருதி) விதித்தனவும் விலக்கினவுமாகிய ஆசரணங்களினாலே பிரயோகிக்கப்பட்ட சிவபெருமானது சங்கற்பம் யாதுமில்லையன்றே; இன்றேல் அவர் சங்கற்பத்தை அபேக்ஷியாத புண்ணியபாவங்களுமில்லை.

(ஆக்ஷேபம்) பிரமத்தை அடைந்த பிற்பாடு அறிவு விகாச முதலியவும் சொரூபாவிர்ப்பாவமும் உளவாயின், அது பரியந்தம் புத்தி சங்கோசத்துக்குக் காரணம் கன்மம் நிலைத்தலால் எனக் கோடல் வேண்டும், விரஜாநதியைக் கடந்தவுடனே கன்மக்ஷயம் எங்ஙனமாகும்? எனின்,

(உத்தரம்) கூறப்படுகின்றது. பிராகிருத பிரபஞ்ச எல்லையைக் கடத்தல்தான் பரமாகாயரூபமாகிய சிவபதப்பிராப்தியாம்.

வா०ஜ்யோதி ரூபஸம்பத்ய (சாந். அ. கஉ. சு)

"பரஞ்சோதியை அடைந்து" என்னுஞ் சுருதியினால், அந்தப் பிரமப்பிராப்தி கூறப்பட்டது. விஷ்ணுபத சம்பந்தமாகிய விரஜாநதிதான் பிராகிருத பிர

பஞ்ச எல்லையாகும். நதியைக் கடக்கும்போது, சர்வகன்மங்களினின்றும் நீங்கிய யோகிகள் விஷ்ணுபதத்தைக் கடந்து, பரமானந்தமயமாகிய சிவபதத்தைப் பிரவேசிக்கின்றனர். இதுபற்றியே,

ஹொzஹூநஃ வாஸோவை்நாதி கலிஷ்ணோஃ வாஸ0வஷ்டி (கட. சூ. சூ)

"அவன் அத்துவாவின் கரைக்கண்ணதாகிய அச்சிவபெருமானுடைய (பரமாகாய) பரமபதத்தை அடைகின்றான்" என்றது சுருதி. ஆதலால் விரோதமின்று. (சூ0)

(கஅ) அதிகாரிகாதிகரணம்.

யாவதியகாரஸவஸ்திதி ராயிகாரிகாணாதி (சூ. சூ. சூக)

(சூஅநு) அதிகாரம் இருக்கும் வரையும் அதிகாரிகளுக்கு நீலே உளது.

உபாசகர்களுக்குப் புண்ணியபாவவிமோசனமாதலும் பிரமத்தை அடைதலும் மேலே கூறப்பட்டன.

ஈண்டு அதிகாரபுருஷர்களுக்கு அதிகார போகங்களைவிட்டு முத்தி உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வசிஷ்டர்முதலிய அதிகாரிகளுக்கு அந்தந்தப் புராணங்களிலே சென்மாந்தரம் கூறப்படுதலின், அவர்க்கு முத்தி இல்லையே. ஆகலின், தத்துவங்களை அறிந்தவருட் சிலரே மோக்ஷத்தை அடைகின்றனர், (மற்றவர் அடைகின்றிலர்) எனின்,

(சித்தாந்தம்) அதிகாரபுருஷர்க்குத் தேகம் விடுத்த பின்னரும், (தம்மைப்பற்றிய) பிராரப்த அதிகாரத்துக்குக் காரணமாயுள்ள கன்மம் நசிக்க வேண்டினமையின், (அதுவரையும்) வேறு பலன்கள் அநுபவிக்கவேண்டும். அங்ஙனமே அதிகாரம் முடியும் வரையும் அதிகாரங்களோடு தம்மிற்பொருத்த கன்மபலன்களைத் துய்த்து ஒழிக்கும் வரையும் அவர்கள் அங்கே நிலைத்தல் வேண்டும்; அதுவரையும் அர்ச்சிராதிகதி அவர்க்கின்று. ஞானிகளுக்கும் பிராரப்தகன்மம் அநுபவத்தினற்றன் நசிக்கின்றது. ஆகலின், அதிகாரிகளுக்கு அதிகாரம் நிவிர்த்தியான பின்னர் (அர்ச்சிராதிவாயிலாக) முத்தி சித்திக்கும். இதனால் தத்துவஞானிகள் நியதமாய் மோக்ஷமடைகின்றார்கள் என்பதாம். (சூக)

(ககூ) அநியமாதிகரணம்.

ஹரியவஸ்ஹவை-ஷா ஷவிரோயஸ்ஹூா நஃோ நாஹூாழி (சூ. சூ. சூஉ)

(கூஅசு) எந்த வித்தைக்கென்று நியமமில்லை; (ஆக லின்) சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமில்லை.

உபகோசலவித்தை முதலிய உபாசனைகளிலே அர்ச்சிராதிகதி கூறப் படுகின்றது.

அந்த அர்ச்சிராதிகதி அந்த (உபகோசலாதி) வித்தையுடையோர்க்கா? இன்றேல் உபாசகர் எல்லோர்க்குமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சாந்தோக்கியத்திற் பஞ்சாக்கினி வித்தையினும் உப கோசலவித்தையினும் அர்ச்சிராதிகதி கூறப்பட்டது. அதர்வசிரசிலே பாசுபத வித்தையிற் சிறிது சூசிக்கப்பட்டிருக்கின்றது. சாண்டில்லியாதி வித்தையிற் கூறப்படவில்லை. பிரகரணவசத்தினல் எவற்றிற் கூறப்பட்டிருக்கின்றதோ, அவற்றிலேதான் நியதமாகக் கொள்ளற்பாற்று; மற்றவைகளுக்கின்று எனின்,

(சித்தாந்தம்) கூறுவம். எந்த வித்தைகளிலே சொல்லப்பட்டுளதோ, அந்த வித்தைகளிலேதான் (அர்ச்சிராதிகதி உண்டென்று கோடற்கு) நியம மில்லை. பின்னையோ, இது எல்லா உபாசனைகளுக்கும் செல்வதாகும். அப் போதுதான் சுருதி ஸ்மிருதிகளுக்கு விரோதமின்று.

யெ வாீ கூஎணை ஸுஷ்டா வஷ்யீவாவஷெ தெஷ்வீ-ஸுஹிவா லவஷீ (பிரு. அ. உ. கடி)

"அரண்ணியத்திலிருந்து சிரத்தையையும் சத்தியத்தையும் உபாசிப்போர் அர்ச்சிராதிகதியை அடைகின்றனர்" எனச் சுருதியானது பஞ்சாக்கினி வித் தைபேசுமிடத்து எல்லோர்க்கும் அந்த மார்க்கத்தைப் பேதமின்றிக் கூறு கின்றது.

கூஹி ஜ்யோ-ரதி ரஹ ஸுக்ஷ்ம:।

"அக்கினி, சோதி, பகல், சுக்கிலபக்ஷம்" என ஸ்மிருதியும் அதனையே (மார்க்கத்தையே) எல்லோர்க்கும் பேதமின்றிக் கூறுகின்றது. ஆகலின், உபாசகர் எல்லோர்க்கும் அர்ச்சிராதிகதி நியமமே.* (கூ0)

---

*மாயாவாதிகட்குரிய நிர்க்குணோபாசனைபற்றி எதுவும் பிரதிபாதிக்கப்படாத பிரம சூத்திரங்களுக்கும் இவற்றுக்கு மூலமாகிய முக்கியஉபநிடதங்களுக்கும் சங்கரா சாரியர் வலிந்து பொருள் செய்தீர்த்து அவற்றைத் தம்பக்கத் துக்கினைக்கத் துணிந் தாற்போன்றும், அப்பயதீக்ஷிதயோகியார் சைவபாஷ்யத்துக்கு உயிர்வகாட்டிமுதற் கண்ணேஇயற்றிவைத்த சிவாத்துவைதநிர்ணயம் என்னும் நூலைத்தீக்ஷிதயோகியார் க்குப் பின்னிருந்த மாயாவாத பண்டிதர்கள் திரிவுபடுத்திச் சிவாத்துவைதசைவத்தி னுக்குத் தம் மாயாவாதத்துக்கு உயர்வுகாட்டிப் படைத்துவைத்தாற்போன்றும், அவ்வ னம் அப்பண்டிதர்கள் அத்தீக்ஷிதயோகியார் இயற்றிய ஆனந்தலகரியையும் (ரத்தினத் தீயபரீக்ஷையில் ஸ்ரீமத் கூர்மேண (ஸ்ரீமத்-ஆதி-) என்னும் சுலோகவியாக்

(உ0) அக்ஷரத்தியதிகரணம்.

அக்ஷரயியாம ஈவ்ரொயவ்ஸாரோ நு தத்ரூவாஹ்யா ஸௌவஸவ தத்ரு-க்ஷ்டி
(க்ஷ. க்ஷ. க்ஷக்ஷ)

(க்ஷ அள) ஆயின் அக்ஷரத்தைப்பற்றிய (நிஷேத) குணங்கள் தொகுக்கற்பாலன; அது (பிரமம்) ஒன்றுயிருத்தலாலும், (அந்த அஸ்தூலத்துவாதி குணங்கள் பிரமத்தில்) இருத்தலாலும்; உபசத்துக்குரிய மந்திரவிஷயம் போல; இது விளக்கப்பட்டது.

கார்க்கிப்பிராம்மணத்திற் பிரமத்தைப் போதிக்கும்பொருட்டு

அவ்ய-ிய உநண்ண ஹ்ரவ்வ்ழி (பிரு. நி. அ. அ)

"(அது) ஸ்தூலமல்லாதது, அணுவல்லாதது, குறுக்கமல்லாதது" என்றற் றொடக்கத்தவைகளிலே சில நிஷேதங்கள் கேட்கப்படுகின்றன; கடவல்லியிலே,

அஸ்ரூ ஷவ்ஸ-ஷிஸ-ிவழி (கட. க்ஷ. கநி)

"சப்தமல்லாததும், பரிசமல்லாததும், ரூபமல்லாததும்" என்றற்றொடக்கத்தவற்றினும், ஆதர்வணத்திலே

யத்தத்ரெஸ்ரூ ஶ்ரூஹ்ய ஶ்ரொத்ர ஶவண-ிழி (முண். க. க. சு)

"காணப்படாதது, பற்றப்படாதது, கோத்திரமில்லாதது, வர்ணமில்லாதது" என்றற்றொடக்கத்தவைகளினும் கேட்கப்படுகின்றன.

அந்த நிஷேதகுணங்கள் ஆனந்தாதி (குணங்கள்) போலப் (பிரமோபாசனையில்) உபசங்கரிக்கற்பாலனவா? அன்றி? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஆனந்தாதிபோன்ற குணங்களல்லாமையின், அந்த நிஷேதங்களைப் பரமத்தை அணைத்தினும் உபசங்கரித்தலின் யாது பயன் எனின்,

---

யானத்தையும் திரிவுபடுத்திக்கெடுத்தாற் போன்றும், சைவபாஷ்யகாரரும் தீக்ஷிதயோகியாரும் "நிர்க்குணோபாசகர்க்கு அர்ச்சாதிகதி அபேக்ஷையில்லை" என்றற் றொடக்கத்தனவாகவும், "அவ்வுபாசகர்கள் (போக்குமீட்சியின்றி) இங்கே இலயமடைந்து விடுகின்றார்கள்" என்றற்றொடக்கத்தனவாகவும் மாயாவாதிகட்குச் சார்பாக மூறையே வரைந்து வைத்தாற் போல இந்த (க்ஷ. க்ஷ. க்ஷஉ-ஆஞ்) சூத்திர சைவ பாஷ்யத்தினுறுதிக்கண்ணும் வொர்க்மணிதீபிகை இறுதிக்கண்ணும் அம்மாயாவாதிகள் பிற்காலத்திலே பொறித்துவைத்த அப்பொய்யுரைகளைப் பொருட்படுத்தாது, இந்தச் சூத்திரபாஷ்யத்து இறுதியிலே பொருத்திவைத்த அக்கற்பனாவாக்கியங்களை ஈண்டு மொழிபெயர்க்காது தவிர்த்துவிட்டேம்.

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. அகூரசம்பந்தமாகிய நிஷேத குணங்களும் பரவித்தை அனைத்தினும் உபசங்கரித்தல் நியாயமே; குணியாகிய பிரமம் யாண்டும் ஒருபெற்றித்தாதலின். இத்தக் குணங்களினுலேதான் பிரமோபாசனையைப் பிறவனைத்தினின்றும் பிரிக்க இயல்வதாகும்; மற்றோர் பிரகாரத்தால்லது. ஹேயகுணசம்பந்தமுறுத ஆனந்தமுதலிய குணங்கள் பிரத்தியக்கான்மாவினிருந்து பிரமத்தைப் பிரித்துக் காட்டும் பொருட்டே போந்தன. பிரதானப்பொருளை இயைந்திருத்தல்தான் குணத்தின் சுபாவம். சாமதக்கினிக்குள்ள ஈான்கு இராத்திரிப்புரோடாசத்துக்குரிய உபசத்துக்குக் குணமாக விதிக்கப்பட்ட

கூழ்ஹொதரம் வொஷ்டவ்ஷ்!

"அக்கினி! ஹோதாவின் செய்கையையும் யஞ்ஞத்தையும் அறிதி" (என்றற் றொடக்கத்த) மந்திரம் சாமவேதத்திலே கூறப்படுவதாய்ச் சாமவேத உச்சசுவரத்தோடு படிக்கப்படுவதாயிருந்தாலும், (அது) யசுர்வேதத்துக்குரிய பிரதான (குணியாகிய) உபசத்தைத் தொடர்ந்து உபாம்சுவாக (மெதுவாக) உச்சரிக்கப்பட வேண்டியதாகின்றது. இதுமுதற்காண்டத்திற் (பூருவமீமாஞ்சை, சூ. சூ. கூ) கூறப்பட்டுள்ளது. (சூசூ)

இதனைற் குணங்களெல்லாம் தியானத்தில் உபசங்கரிக்கப்படவேண்டியதில்லியோ? என, சூத்திரகாரர் சொல்வாராயினர்.

ஹயஶீரநாஸு (சூ. சூ. சூச)

(சூஅஅ) இவ்வளவுமாத்திரந்தான் தியானத்தின் பொருட்டு.

ஆமனனம் என்றது அன்பினேடு தியானஞ் செய்தல். இவ்வளவு குணத்தொகுதியும் எவ்விடத்தினும் உபசங்கரிக்கற்பாலன. இந்தக் குணத்தொகுதியினுற் பிறவனைத்தினின்றும் நீங்கியதாகப் பிரமத்தியானம் உண்டாகின்றது. ஆகலின், அகூரப்பிரம சம்பந்தமாகக் கூறப்பட்ட அஸ்தூலத்துவாதி நிஷேத (எதிர்மறைக்) குணங்களே பிறவனைத்தினின்று பிரமத்தைப் பிரித்தறியச் செய்யும் குணங்களாதலால், அவை பரவித்தைகளில் உபசங்கரிக்கற்பால்ன. "சர்வகர்மா, சர்வகாமர், சர்வகந்தர், சர்வரசர்" என்பலற்றை (உபசங்கரிக்கவேண்டியது) இன்று. (சூச)

(உக) அந்தராபூதக்கிராமாதிகரணம்.

கஹாரஹலிதமுராஶவஸு வ்யாதஜெநாzந்யாலெஷாநுவவதீரிதீ செளொவதொவஸு (சூ. சூ. சூரி)

(கூஅக) (அனேத்தின்) உள்ளும் (இருக்கிற அவரை யுற்றுப் பேசும் வாக்கியத்திலே), பூதத்தொகுதிச் (சரீரச்சம் பந்த) முடைய (தன்னைப்பேசுவதாகச்) சுருதி கூறுவதாகவும், இன்றேற் பேதஞ் சொல்ல இயலாதாகவுமிருப்பின், அஃ தன்று; (சத்வித்தையின்) உபதேசம் போல்வது.

பிருகதாரணியோபநிடதத்திலே,

யஷாக்ஷா ஹவைரோக்ஷா ஹ்ரஹ யகூத்தா வவ ஃஹாதராஸ்ய ஶெவ்யாஅக்ஷ்ய
(பிரு. நி. ச. க)

"(யாஞ்ஞவற்கியரே!) சாக்ஷாத்தாகவும் அபரோக்ஷமாகவும் உள்ளதாய், அனேத்துள்ளுமிருக்கின்ற (பரம) ஆன்மாவுமாகிய பிரமத்தை எனக்குச் சொல்க" என உஷஸ்தி கேட்க,

யஃ ப்ராணேந ப்ராணிதி ஸ த ஆத்மா வவ ஃஹாதராஃ யோ zவாநேநாவாகிதி ஸ த ஆத்மா வவ ஃஹாதராஃ (பிரு. நி. ச. க)

"உச்சுவாசத்திற் சுவாசிக்கின்றவரே உன் (பரம) ஆன்மாவாய் அனேத்துள்ளுமிருக்கின்றனர்; நிச்சுவாசத்திற் சுவாசிக்கின்றவரே உன் (பரம) ஆன்மாவாய் அனேத்துள்ளுமிருக்கின்றனர்,"

கதா zநு ஏாத்ரஃ (பிரு. நி. ச. உ)

"மற்றெல்லாம் தீமையின் பாலன" என உத்தரமிறுக்கப்பட்டது. பின்னர்,

யதேவ ஸாக்ஷாத்ரஹ யகூத்தா வவ ஃஹாதராஸ்யஶெவ்யாஅக்ஷ்ய
(பிரு. நி. ச. உ)

"(யாஞ்ஞவற்கியரே!) சாக்ஷாத்தாக அனேத்துள்ளும் இருக்கின்ற (பரம) ஆன்மாவாகிய பிரமத்தைக் கூறும்" என்று ககோளர் கேட்ப, அதற்கு

யொzஸ்நாயா விஜாவெ ஸொகஃ ஸொஹஃ ஜராஃ ம்ருத்யு ஸேது
ஸேதுகஃ வெ தரோத்நஃ விதிக்ருத்(ப்ராஹ்மணா அதிக்ஷாயந்தி ஃ ப்ராஜ்ஞி)
(பிரு. நி. நி. க)

"பசி, தாகம், சோகம், மோகம், ஜரை, மரணம் என்பவற்றைக் கடந்தவராகிய அத்தப் (பரம) ஆன்மாவை அறிந்து (பிராமணர்கள் யாசகர்களாகின்றனர்)"

ஸேதாzநுவாத்ரஃ (பிரு. நி. நி. ச)

"மற்றெல்லாம் தீமை" என்பதிறுதியாக உத்தரம் இறுக்கப்பட்டது.

சண்டு சரிடத்தும் கூறப்பட்ட வித்தை ஒன்றா? அன்றா? என்பது ஈண்டு நோக்கம்.

(பூருவபக்ஷம்) சண்டப் பூதத்தோடினையந்த பிரத்தியகான்மவிஷயத்தை யுற்றே உஷஸ்தி வினவியது. இன்றேல்,

யஃ வ்ராணைந வ்ராணிதி ஸ தி சூத்ரா (பிரு. தி. ச. க)

"நிச்சுவாசத்திற் சுவாசிக்கின்றவர் ஆன்மா" என அந்த வினவுக்கு விடுத்த உத்தரவிஷயத்துக்கும், சகோளர் விடுத்த வினவுக்கு, பிரமுதலியவற்றை செய்ப்பதென உத்தரமாகக் கூறப்பட்ட விஷயத்துக்கும் பேதம் காண்டல் அரிதாமெனின்,

(சித்தாந்தம்) அங்ஙனம் கோடல் கூடாது; இவ்விஷயம் (சத்வித்தை யின்) உபதேசம் போல்வது.

ய சூத்ரா வவ-ஹாஹரஃ (பிரு. தி. ச. க; தி. ச. உ)

"எல்லாவற்றுள்ளும் இருக்கின்ற ஆன்மா" என சரிடத்தும் நிகழ்ந்த வினாக் கள் ஒன்றாயிருத்தலின், சிவபெருமானே சரிடத்தும் கொள்ளப்பட்ட பிர னை விஷயம். உபாதியில்லாததாயும், உச்சுவாசாதிகளுக்குக் காரணமாயும், போசனாதிகளைக் கடந்திருப்பதாயும் இவையந்த (பிரசின) உத்தரம் அந்தச் சிவபெருமானிலே முற்றுகின்றது. சத்வித்தியாவிஷயத்திற் போல, வினவும் விடையும் ஒரே விஷயத்தில் முற்றுகின்றன. வினவினவரின் பேதமும் ரூப பேதமும் வித்தையிலே யாதும் பேதத்தை விளைக்கவில்லை. (கூ)

அங்ஙனஞ் சூத்திரகாரர் கூறுகின்றனர்.

வ்யதிஹாரோ விசிஷ்டீ ஹீதரவத் (கூ. கூ. கூஉ)

(கூஉ) மாறுபாடு (நிகழவேண்டும்); (அவை இரண்டும் பிரமத்தையே) விசேடிக்கின்றன; பிறவற்றிற் போல.

(ஓர்கால்) விஷயமொன்றென நிச்சயித்தபோது, வினவினைக்குள்ளே ஒருவர்க்கொருவர் கருத்து மாறுபாடு நிகழ்தல் வேண்டும். (அஃதாவது) உஷஸ்தி பசிமுதலியவற்றைச் செய்ததாகப் பிரமத்தைத் தியானிக்குங் கால், சகோளரும் நிச்சுவாசாதிக்குக் காரணமாக அதனைத் தியானிக்கவேண் டும். சத்வித்தையிற் போல சரிடத்துமுள்ள வாக்கியங்கள் சிவபெருமானை விசேடிக்கின்றன. ஆகலின், வினவினும் விடையினும் ஒரே விஷயமே கூறப் பட்டமையின், வித்தையிற் பேதமின்று. "அது நீயாகின்றனை" என்றதிற் போல, சம்தேகம் அறுக்கும்பொருட்டே புநருக்தி (எய்திற்று). (கூஉ)

(உஉ) சத்தியாதியதிகரணம்.

வைஸ்வ ஹி ஸத்ர்யஸீ (கூ. கூ. கூள)

(ஈகூக) (தேவதை) ஒன்றே (கூறப்பட்டது); சத்திய முதலிய (கூறப்பட்டன).

திருட்டாந்தமாக மேலே அதிகரணத்திலே நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், சத்வித்தை பேதமா? அபேதமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரகிரணத்தில் ஆவிருத்தி (கூறியது கூறல்) காணப்படலானும், உத்தரத்திலே பேதம் காணப்படலானும் வித்தை பேதமென்றே கொள்ளப்படுமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சத்வித்தையிற் பேதமில்லை;

வெயo தெவதா (சாந். சு. கூ. உ)

"இந்தத் தேவதை" என்றற்றொடக்கத்தவற்றால் உரைக்கப்பட்ட *மகா தேவதை ஒவ்வோர் வினவினும் உத்தரத்திலும் காணப்படுகின்றமையின்.

தத்ஸ்தயo ஸ ஸூத்ர தத்ஸ்ருவி (சாந். சு. அ. எ)

"அது சத்தியம், அது (பரம)ஆன்மா, அது யோகின்றனே" என மீட்டும் மீட்டும் சத்தியமுதலிய குணங்கள் ஆவிருத்தியாகக் காணப்படுகின்றன. ஆகலின், வித்தை ஒன்றாக, வித்தையும் ஒன்றும் என்க. (கூஎ)

(உகூ) காமாதியதிகரணம்.

காமோடியஸ்தத்ர தத்ர ஆயதநாதிப்யo (கூ. கூ. கூஅ)

(ஈகூஉ) (சத்திய) காமாதிகுணங்கள் அங்கங்கே (உபசங்காரஞ் செய்யற்பாலன); ஸ்தானமுதலியன (ஒன்று) யிருத்தலின்.

சாந்தோக்கியம், தைத்திரீயம், பிருகதாரணியம், கைவல்லியம் என்னும் உபநிடதங்களிலே தகாவித்தை கூறப்படுகின்றது.

இது அபின்னமா? இன்றேற் பின்னமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

யதிஷ்வீமீ ஸ்ருஹு வ²ெர டஹரo வ²ணூரீகo வெஷ்ட டஸ்மொzஷ்மிஞ்ஜஹராகாஶ: (சாந். அ. க. க)

சாந்தோக்கியத்திலே,

---

* ஈண்டு மகாதேவதை என்றது (சு. உ. கச-ஆஞ்) ருத்ரிபாவ்யத்திற் குறிக்கப்பட்ட (இ. ச. உள்-ஆம்) பாணினிருத்திரவிதிப்பிரகாரம் மகாதேவரின் மேலாயிற்று.

"இத்தப் பிரமபுரத்தத் தகராபுண்டரீகத்திலே தகராகாயம்உள்ளது" என்று தொடங்கித் தகராகாச மொழியினுற் கூறப்பட்ட தகரபுண்டரீகத்திருப்பவர்க்குப் பாவமில்லாமை முதலிய எண் குணங்கள் முக்கியமாகக் கூறப்பட்டன.

தைத்திரீயத்திலே,

ஊஹ்ம் விவாவழ் (தைத். ஆரணி. க0. கஉ. உஅ)

"பாவமில்லாத தகரம்" என்று தொடங்கித் தகரபுண்டரீகத்தில் இருப்பவர்க்குப் பிரணவப் பிரகிருதியாதலும், மகேசுவரர் எனப்படுதலும், கிருஷ்ணபிங்கள விரூபாக்ஷத்துவ முதலிய குணங்கள் உளவாதலும் காட்டப்பட்டன.

பிருகதாரணியத்திலே,

ய வஷோ ஃதஹ்ருத்ஆய ஃகாஸஸ்தஸ்மிஞ்ஜெத வஷ்வ் வஸீ வஷ்வ்வெஷ ப்ராந ஷ்வ்வாயிவ தீம் (பிரு. சு. ச. உஉ)

"இதயத்துள்ளே ஆகாயம் உள்ளது; அதிற் சர்வத்தையும் வசிகரிப்பவரும், சர்வத்துக்கும் ஈசானரும், சர்வத்துக்கும் அதிபதியுமானவர் அமர்கின்றார்" என வசித்துவாதி குணங்கள் (கூறப்பட்டிருக்கின்றன).

கைவல்லியோபநிடதத்திலே

ஹ்ருத்புண்ரீக0 விரஜ (கைவ)

"துகளற்ற இதய புண்டரீகம்" என்று தொடங்கி,

விஜ்ஞாநாத்மா நஅ ரீரஷிவ ஷ்ரோத்ரீஷோஷஹாய0 வாஷிஷ்டா0 வ்ரஹ்ம் தீர்கொஅந0 நீலகண்ட0 வ்ராத்ய (கைவ)

"வியாபகரும், சிதானந்தரும், அரூபரும், அற்புதரும், உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், திரிநேத்திரரும், நீலகண்டரும், பிரசாந்தரும்" என்பதிறுதியாக இருதயபுண்டரீகத்திலிருக்கும் பரவஸ்துவுக்குத் திரிநேத்திரத்துவம், நீலகண்டத்துவம், சிதானந்தரூபத்துவம், உமாசகாயத்துவமுதலிய குணங்கள் (கூறப்பட்டிருக்கின்றன). ஈண்டு நீலகண்டத்துவமுதலிய குணங்கள் சரீரதர்மமாகவும், சத்தியகாமத்துவமுதலிய குணங்கள் ஆன்மதருமமுமாகி விரோதமுறுதலின் உபசங்காரம் நியாயமின்று. ஆகலின், வித்தைகள் பின்னமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. ஆங்காங்குக் கூறப்பட்ட இருதய புண்டரீக ஸ்தானமுதலியன ஒன்றுமாதலின், வித்தைகள் ஒன்றே. ஆகலின், சத்தியகாமத்துவ முதலிய குணங்கள் யாண்டும் உபசங்கரிக்கற்பாலன. சாந்தோக்கியத்திற் கூறப்பட்ட அபகதபாப்மத்துவாதி குணங்களும், பிருகதா

ணியத்திற் கூறப்பட்ட வசித்துவாதி குணங்களும், தைத்திரீயத்திற் கூறப் பட்ட பிரணவவாச்சியத்துவாதி குணங்களும், கைவல்லியத்திற் கூறப்பட்ட சிதானந்தருபத்துவாதி குணங்களுமாகிய இவையெல்லாம் தகரவித்தையிலே பிரமத்தின் குணங்களாக உபசங்கரிக்கற்பாலன. கைவல்லியத்திற் கூறப் பட்ட உமாசகாயத்துவமும் திரிலோசனத்துவமும் மற்றேரிடத்திற் (கூறப் பட்ட) சிருஷ்ணபிங்களத்துவமும் விரூபாக்ஷத்துவமும் (முறையே) ஒரே அர்த்தமுடையன. மீட்டும் மீட்டும் கூறுதல் ஆதரத்தை (பிரியத்தை) யறிவித்தற்காம். மீட்டும் மீட்டும் குணங்கள் கூறப்படும் இடங்களினெல்லாம் அவனமே பொருள் கோடற்பாற்று. ஈண்டுக் குணமுடையதாகக் (கூறப்படும்) பிரமம் ஒன்றே உபாசிக்கற்பாலதாகலின், பாவமில்லாமை முதலிய குணங் களோடு சர்வேசுவரமும், ஒங்காரவாச்சியமும், உமாசகாயமும், திரிலோச னமும், நீலகண்டமும், சிதானந்தருபமும், அனந்தமும், அமிர்தமும், அற் புதமுமாகிய பரப்பிரமம் தகரபுண்டரீகமத்தியிலே அனுசந்தானஞ் செய் யற்பாற்று. *இந்தத் தகரோபாசனையே பரவித்தைகளுட் பிரதானமாயிருக் கின்றது. சாந்தோக்கியத்தினும் கைவல்லியத்தினும் இந்தத் தகரோபாசக நிஷ்டன்,

வரஂஜ்ஞாதி ரூவஸஂவஂஜ்ஞை ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதெ।
(சாந். அ. கஉ. கூ)

"பரஞ்சோதிரூபத்தை அடைந்து அதன் சொரூபமாய் விளங்குகின்றனன்" என்றும்,

ஜ்ஞாத்வா தேமுக்தஶ்ச பவதி ஸ்தோத்ரஸ்ய ஸாரஸங்க்ரஹோ வரஸ்தாத (கைவ)

"முனியானவன் தியானித்துத் தமக்கு மேலே பூதயோநியும் சமஸ்தசாட்சி யுமாயுள்ளாரை அடைகின்றான்" என்றும் கூறிச் சாகூத்தாகப் பிரகி ருதி மண்டலத்துக்கு மேலே உள்ள அந்த உபாஸ்யமாகிய பரப்பிரமத்தை அடைதலன்றே பயனைப் பெறப்படுகின்றது. நீலகண்டத்துவ திரிலோச னத்துவாதி குணங்களும், அபகதபாப்மத்துவாதி குணங்களும், பிரமத்தில் நித்தியமாயிருத்தலாலும், அங்கியோங்கியமாய் ஒன்றை ஒன்று அபேக்ஷித் தலாலும், அவை உபசங்கரிக்கப்படுதலின் விரோதமின்று. நிஷேதகுணங்கள்

---

* உபக்கிரமணிகை (உ0க-ஆம் இலக்கம் தொடுத்து உகஙி-ஆம் இலக்கம்) வரை யிற் கூறியாங்கு, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சைவசமயஸ்தாபனாசாரி யர் முதலாயினோர் திருவுளப்பிரகாரம் இச்சைவபாஷ்யகாராகிய ஸ்ரீநீலகண்ட சொர்ரியர்க்கும் குரீதிசாரர்சாகிய வீயாசருக்கும் சமஸ்த உபநிடதங்களின் முடி வாகிய திருக்சிற்றம்பலமே முடிந்தநிலையாகக் கொள்ளப்பட்டிருக்கின்றதன்றி, வேறான மாயாவாதமதமேனும் வைணவமதமேனும் முடிந்தநிலையாகக் கொள்ளப்பட்டில தென்பது உறுதியேயாம்.

பொருத்தமில்லாவிடத்து இடம்பெறுவாம். பரப்பிரமத்துக்குத் நிரிசேத நிர்க்கோபுடைய திருமேனி கூறப்படுதலின், சரீரத்துக்குரிய பாவம், ஜரை, மரணம், பசி, தாகம், அசத்தியகாமம், அசத்தியசங்கற்பமென்னும் குணங்கள் சொல்லநேருமெனக்கொண்டு, இவற்றை நிஷேதிக்கும்பொருட்டன்றே அபகதபாப்மத்துவாதி குணங்கள் பிரதிபாதிக்கப்பட்டன. நிரிலோசனத்துவமுதலிய லக்ஷணமுடைய சரீரமுடையபோதும், அப்பரப்பிரமம் பாவம், ஜரை, சோகம், பசி, தாகமென்பவற்றினின்று நீங்கி, சத்தியகாம சத்தியசங்கற்ப சிதானந்தரூபமாயிருத்தலின் விரோதமின்று. (கூ)

(உ) அலோபாதிகரணம்.

(ஆக்ஷேபம்) பிரியசிரஸ்த்வமுதலிய போல நீலகண்டத்துவாதி அவயவங்கள் பிரமத்துள் அந்தர்ப்பாவமாயுளவேல், பின் அவர் தேய்வு வளர்ச்சிகளுக்குட்படுதல் வாயிலாக, நீலகண்டத்துவாதிகள் இலவாயொழியுமோ? எனின்,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

சூத்ரம் உலோபஃ (கூ. கூ. கூக)

(கூகூ) ஆதரத்தினுலாதலின் உலோபமில்லை.

மேலே நீலகண்டத்துவாதி விசிட்டரூபமும், உமை எனப்படும் பராசத்தியோடிசைதலும், சத்தியசங்கற்பத்துவமுதலிய குணத்தொகுதியும் விரூபிக்கப்பட்டன.

சண்டு அவை பரப்பிரமத்தில் ஓர்கால் உலோபமாய் இருக்குமா? இன்றேல் ஓர்காலும் இருக்கமாட்டாவா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) நியானதனின்பொருட்டுப் பரப்பிரமத்திலே கற்பிக்கப்பட்டமையின், அவை ஓர்கால் உலோபமாகும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பரப்பிரமத்துக்கு உமாசகாயத்துவாதி குணங்கள் சுருதியில் யாண்டும் அப்பியாச லிங்கத்தினுலும் ஆதரத்தினுலும் உலோபமின்றிக் கூறப்படுகின்றன. ஆகலின், அனுப்தசக்தியையுடையது பரப்பிரமம். என்றே ஆதரத்தினுலும் அப்பியாசத்தினுலும் கூறப்பட்டதெனின்?

யாண்டுமே. கிருஷ்ணபிங்களம் வீருபாக்ஷம் என்றமையாற் சத்தியோடிசைதலும் நிரிசேத்ரமுடைமையும் தெரித்தவிடத்தும், மீட்டும் ஆதாத்தினுல் அவை

உரலஹாயஃ பரதோஷஃ பூஜ்யஃ திரொதநிஃ (சைவ)

"உமாசகாயரும், பரமேசுவரரும், பிரபுவும், திரிலோசனரும்" என அப் பியிக்கப்பட்டனவன்றே. ஆதித்தியமண்டலவித்தையினும்,

நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யபதயே அம்பிகாபதய உமா பதயே (தைத். ஆரணி. க0. உஉ. ச0)

"இரண்ணியபாகுவினர்க்கு நமஸ்காரம், இரண்ணியபதிக்கு நமஸ்காரம், அம்பிகாபதிக்கு நமஸ்காரம், உமாபதிக்கு நமஸ்காரம்" என ஆதரத்தினுல் உமாபதித்துவம் அப்பியசிக்கப்பட்டது. மற்றோரிடத்தில்,

நீலக்ரீவோ விலோஹிதஃ (யசுர். வே. ச. நி. க. ஈ)

நீலக்ரீவாயச சிதிகண்டாய ச (யசுர். வே. ச. நி. நி. க)

"நீலக்கிரீவர், விலோகிதர்," "நீலக்கிரீவர்க்கு நமஸ்காரம், சிதிகண்டர்க்கு நமஸ்காரம்" என்றற்றொடக்கத்தவாக நீலக்கிரீவத்துவம் சிவபெருமானுக்கு ஆதரத்தினுல் அப்பியசிக்கப்பட்டது.

சத்தியசங்கற்பத்துவாதி குணங்கள் ஓரிடத்திற் கூறப்பட்டிருந்தாலும் பிறிதோரிடத்திற் கூறினமை ஆதரத்தினுலேயாம்.

ஆகலின், உமாபதித்துவாதி குணங்கள் அப்பியாசத்தினுலும் ஆதரத்தி னுலும் பரப்பிரமத்துக்கு உலோபமில்லையே. வேறு பிரமாணங்களால் அறி யப்படாத நாமம் பிரமம் என்னும் விஷயத்திலே திவ்விய சுருதியானது எவ் வியல்பினதாகிய சொரூபத்தைச் சொல்கின்றதோ, அவ்வியல்பையே சுருதி யைப் பற்றுக்கோடாகக் கொண்டவர்கள் அங்கிகரித்தல்வேண்டும். இன் றேல் அதற்கு விருத்தமாகிய தர்க்கத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டால் உலக உபாதானத்துவாதிகம் சித்திக்கமாட்டாது. சுருதியே

ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரஹ்ம (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்" எனச் சத்திய ஞானகாரமாய் அவற்றி னின்று பிரியாததாயுள்ளது பிரமம் என்று கூறி,

தஸ்மாத் ஸத்யம் பரம் ப்ரஹ்ம (தைத். ஆரணி. க0. உசு. சக)

"இதனும் சத்தியம் பரம் பிரம்ம" என்றற் றொடக்கத்தவாகக் கூறப்பட்டு வருக்கே திரிலோசனத்துவமும் பரமசத்தியாகிய உமாசபளித்துபமும் விசே ஷமாகக் கூறின்றது. பின்னரும்,

ஸ ஏஷோ ப்ரஹ்மண ஆநந்தஃ (தைத். உ. அ)

"அது பிரமத்தின் ஓர் ஆனந்தம்" என நிரதிசயானந்தமுடைமை கூறி, பின்னரும் அவர்க்கே

ஆகாஸஸரீரம் ப்ரஹ்ம (தைத். க. சு)

"ஆகாயசரீரம் பிரமம்" என்றற்றொடக்கத்தவற்றால், சித்பிரகாசரூபத்தையும் ஆன்மராமத்தையும், பாவிய காரணமின்றி அத்தகாரணத்தினால் அனுபவிக்கப்படும் பரமானந்த விலாசத்தையும், சமஸ்த உபத்திரவகளங்கமில்லாமையையும், அநாதிமுத்தத்துவத்தையுஞ் சுருதி பிரகாசிப்பிக்கின்றது. இவர்க்கு விரூபாக்ஷத்துவாதி லக்ஷணங்களையுடைய சரீரசம்பந்தமுண்மையின், ஆன்மாவுக்குப் போல எய்தற்பாலனவாம் தோஷங்களை அபகதபாப்மத்துவாதி குணங்களாற் சுருதி நிராகரிக்கின்றது.

யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித் (முண். க. க. சு)

"சர்வஞ்ஞரும் எல்லாம் அறிபவரும்"

யோஸௌ ஸர்வஜ்ஞ ஈக்ஷதே (சுவே. சு. அ)

"இவரது பராசத்தி நாநாப்பிரகாரமாகக் கேட்கப்படுகின்றது"

பராஸ்ய சக்தி (சுசர். வே. ச. நி. உ. க)

"பக்தர்களுக்குப் பதியாயுள்ளவர்க்கு" எனப் போந்தவாற்றால், அவருக்குச் சர்வஞ்ஞத்துவம், சர்வசக்தித்துவம், சுவதந்திரத்துவ முதலியன நிரூபிக்கப்படுகின்றன. இங்ஙனம் சுருதிதானே சமஸ்தப் பிரமாணங்களுக்கும் தலையாயதாகி, சத்தியஜ்ஞானானந்தத்தினின்று நீங்காத சுவரூபத்தையும், சர்வஞ்ஞதையையும், நித்தியதிருப்தியையும், சுவதந்திரத்தையும், அநாதிபிரகாசத்தையும், அனந்தசத்தியையும், அனுப்தசத்தியையும், ஆன்மராமத்தையும், உள்ளே அநுபவிக்கப் பாலதாம் பரமானந்தத்தையும், உபசாந்தத்தையும், அமிர்தத்தையும், நீலகண்டத்தையும், விரூபாக்ஷத்தையும், உமாசகாயத்தையும் பிரமமுடையதாக யாண்டும் கோஷிக்கின்றது. இங்ஙனங்கூறுஞ் சுருதிகளைத் தடுக்கவல்லார் யார்? ஆகலின், மேலே கூறிய விசேஷகுணங்கள் பிரமத்தினின்று ஒர்காலும் இலவாயொழியமாட்டாவே. (சூசு)

(உரு) தத்வசநாதிகரணம்.

உவஹ்யிதே ஃதஸ்துஉஅநாஸ (சூ. சூ. சஂ)

(சூசுசா) (பிரமத்தை) அடைந்தவன் விஷயத்தில்; அது பற்றி இதற்கு வசனமுண்மையான்.

ஈண்டு முக்தரால் அடையப்படும் பயன் பூருவாதிகரணத்திற் கூறப்பட்ட பிரமசொரூபமா? மற்றொன்று? என்பதில் சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஸாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம் (சுவே. சு. சுசு)

"நிஷ்களமாயும், நிஷ்க்ரியமாயும், சாந்தமாயும், தோஷமொன்றுமில்லாயும் பாவமிலாததாயும்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே பிரமம் நிர்விசேஷமாகவே கூறப்படுகின்றது.

ஸ்ரவணவிஷ யஸ்வரூப ஜ்ஞான (முண். க. உ. சு)

"பிரமத்தை அறிபவன் பிரமமாயே ஆகின்றான்" என்னுஞ் சுருதியினால் முக்தன் பிரமசொரூபத்தை அடைதலே முக்தி. ஆகலின், நிர்விசேடப்பிரமமே முக்தனால் அடையற்பாற்று, மற்றொன்றன்றெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். முன்னர்க் கூறப்பட்ட சவிசேஷப்பிரமசொரூபமே முக்தனால் அடையற்பாற்று; தகரபுண்டரீகத்துள்ளே இருப்பதாகப் பிரதிபாதிக்கப்பட்ட விரூபாகூத்துவமுடைய பரப்பிரமத்தைத் தியானித்தலால்,

வாமஜ்யோதி ராஜ்யவஸ்வரூபே (சாந். அ. கஉ. க)

"பரஞ்சோதிரூபத்தை அடைந்து" என்னுஞ் சுருதிப்பிரகாரம் முக்தனால் அடையப்பட்டவிடத்து,

ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே (சாந். அ. கஉ. க)

"தனது ரூபத்தோடுதோற்றுகின்றான்" என்றவாறு தனது ரூபம் ஆவிர்ப்பித்தல் காரணமாக,

ஜகந்நீலந்நீலோ வர்ணோ வர்ணவா யாதெநவா ஜாதிலிவா।

(சாந். அ. கஉ. க)

"பெண்களோடாயினும், யானங்களோடாயினும், ஞாதிகளோடாயினும், உண்டி நிரம்பி நிறைத்து மகிழ்கின்றான்" என்றற்றொடக்கத்தவற்றால் முன் நிர்த்தேசப்படி ஞாதி முதலாயினரோடு சேர்தல் கூறப்படுதலினாலும்,

வாமம வாஸ்யமாநைதி (முண். க. க. க)

"பரமாயை சாமியத்தை அடைகின்றான்" என்னுஞ் சுருதியினாலும்

மாஹுஸ்ரிவஸமோ ஹவைது (வாயு. பூ. உஅ: உஉ)

"முக்தன் சிவசமமாகின்றான்" என்னும் ஸ்மிருதியினாலும் முக்தன் பரப்பிரமசாமியத்தை அடைதல் கூறப்படுதலானுமாம். மேலே கூறப்பட்ட நீல கண்டத்துவாதி இலக்ஷணத்தையுடைய பரப்பிரமசொரூபத்தான் சாகூஷாத்காரம் முக்தன் அடைய்வேண்டிய மோக்ஷபயன்; இந்தப் பிரமசொரூபஸாம்யாபத்தி சாரூபமைக்குரியதன்று; அபததபாப்மா (சாந். அ. க. டு) என்றற்றொடக்கத்தவற்றாற் சாம்சாரிக தருமம் நிஷேதிக்கப்படுதலால். ஆகலின், பரமுக்தி சகுணமே. நிஷ்களம் நிஷ்க்ரியம் என்றற்றொடக்கத்தவற்றால் நிர்

குணங்கள் நிஷேதிக்கப்படுகின்றன; கல்யாணகுணங்கள் நிஷேதிக்கப்பட வில்லை.

நிஷ்கலம் நிஷ்க்ரியம் (சுவே. உ. கக)

"நிஷ்களம் நிஷ்க்ரியம்" என்றற்றொடக்கத்தவற்றாலும்,

பராஸ்ய சக்திர்விவிதைவ (சுவே. உ. கஅ)

"பிரதானமாகிய (பாசத்துக்கும்), க்ஷேத்திரஜ்ஞனாகிய (பசுவுக்கும்) பதியாகிய ருடைய குணங்களோடுகூடிய சக்தி" என்றற்றொடக்கத்தவற்றாலும் நிர்க்குணத்துவமும் சகுணத்துவமும் சாமானியமாக எய்துவிடத்தது,

ஸர்வஜ்ஞ: (சாந். அ. க. இ)

"அபகதபாப்மா"

யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித் (முண். க. க. உ)

"எவன் சர்வஜ்ஞனும், எல்லாம் அறிபவனும்" என்றற்றொடக்கத்த விசேஷ சருதிகளைக்கொண்டு, நிர்க்குண சுருதிக்கு ஹேய குணம் இல்லையென்பதும், சகுணசுருதிக்குக் கல்யாணகுணம் உள்ளதென்பதும் பொருளாம் என்றறியப்படுகின்றது. மேலும், மோக்ஷபலம் சகுணமென்றே வசனமும் சாதிக்கின்றது.

ஸோஸ்நுதே ஸர்வான்காமான்ஸஹ ப்ரஹ்மணாவிபஸ்சிதா

(தைத். உ. க)

"அவன் சர்வஜ்ஞதையுடைய ப்ரம (ஆனந்தத்) தோடு கூடச் சமஸ்த போகத்தையும் அடைகின்றான்" என்னும் வசனத்திலுள்ள கூட (ஸஹ) என்னும் சப்தம் ப்ரமானந்த போகத்தோடுகூட மற்றைப் போகங்களையும் ஏககாலத்திலே முக்தன் அடைகின்றனன் என்பதின் மேற்று. ஆகலின், சகுணப் ப்ரமோபாஸனமே முக்தனுக்கு அடையற்பாலதாம் பயன். (சஅ)

(உசு) தந்நிர்த்தாரணாதியமாதிகரணம்.

தன்னிர்தாரணாதியஸ்ஸாதுக்ருத: வ்யாஸ்ய ப்ரதிபேயஸ் ஸ்யாத்

(சூ. சூ. சக)

(உகஎ) செய்யவேண்டுமென்பது நியமமில்லை, இது காணப்படலான்; தடையின்மையாகிய வேறு பயன் இருத்தலின்.

சோமாஸ்மாயாஜ்ஞ உபநிஷத் யித்தை முதலிய உபாஸனைகள் கர்மாவைப் போலவே அங்ஙனே என்பது சித்தாந்தம்.

(பூருவபக்ஷம்) (யஜ்ஞ) கருமானுஷ்டானத்திலே கன்மங்களுக்கு அங்க மாயிருத்தலின், அந்தத் தியானங்கள் நியமமாக அநுஷ்டிக்கற்பாலன. கன்மப்பிரகரணங்களுக்குப் புறம்பாக அவை படிக்கப்பட்டாலும், வாக்யத்தினாலே அவைகள் யஜ்ஞங்களோடு சம்பந்தப்படுகின்றன. எங்ஙனமெனின்,

யஸ்ய வாங்மநஸீ ஜ்ஞாநே ஸம்யக் (யசுர். வே. கா. நி. எ. உ)

"யஜ்ஞத்துக்குச் சட்டிவம் பாணத்தினாலாகின்றது" என்னுமிடத்துப் பூர்ணத்தினாலாவதென்பது புறம்பே கூறப்படினும், அது யஜ்ஞத்துக்கு இன்றியமையாது சட்டிவலாயிலாக யஜ்ஞத்தோடு சம்பந்தமுறுகின்றது. அங்ஙனமே,

ய ஏவம் வித்வாந்ஸோ(அ)யம்

ய ஏவமேவம் வித்வாꣳஸோ(அ)யம் (சாந். க. எ. எ)

"இங்ஙனம் அறிந்த எவன் உரத்துப்பாடுகின்றானே", "இங்ஙனம் அறிந்த எவன் சாமஞ்சைப் பாடுகின்றானே" என யஜ்ஞத்துக்கு இன்றியமையாத சாமம் முதலியவாயிலாக, அந்த உபாசனைகள் யஜ்ஞசம்பந்தமுடையவாகின்றன. ஆகலின், யஜ்ஞகன்மங்களில் நியமமாக உத்கீதாதி உபாசனைகள் வேண்டுவதாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். கோதோஹனமுதலியவை நியமமில்லாமை போல, உபாசனைகளும் (ஆவசியகமின்று); அஃதாவது,

அதிவ்ருஷ்டிம் வருணய ப்ரோதோஹதி நக்ந வாருகாவஸ்ருஜ்

"சமசமென்னும் பாத்திரத்தில் அவன் சலத்தைக் கொண்டுபோக, (ஆயின்) பசுவை விரும்பியவன் விஷயத்திலே கோதோகனத்திற் கொண்டுபோக" எனச் சுருதி கூறுகின்றது. ஈண்டுச் சலங் கொண்டுபோதற்குக் கோதோகனத்தை விதித்தமையும் யஜ்ஞகருமத்தின்பொருட்டாகாது ஏஜமானவிஷய இச்சாவிஷயம்பற்றியாம்; இது சலத்தைக் கொண்டுபோதல் போல் நியதமின்று. அங்ஙனம், கன்மங்களே உத்தேசித்து விதிக்கப்படும் உபாசனைகள் யஜ்ஞகன்மபலன்பற்றி விதிக்கப்பட்டில;

தே நாஹைஷ கார்ஷதா யஜ்ஞதேவம் வேத்ஸ்யந்த வேதி

(சாந். க. க. எ0)

"இதனை இங்ஙனம் அறிந்தவனும் அறியாதவனுமாம் இருவரும் அந்த யஜ்ஞத்தைச் செய்கின்றனர்" என உத்தேமுதலியவற்றின் உபாசனை இன்றி யஜ்ஞாநுஷ்டானஞ் செய்யக்காண்டலான்.

யதேவ வித்யா கரோதி ச்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்தரꣳ ஏவதி (சாந். க. க. க0)

"ஆனின், ஞானத்தோடும், சிரத்தையோடும், உபசிடதந்தொண்டும் ஒரு வன் செய்கின்ற யஞ்ஞமும் அதிவீரியமுடையதாகின்றது;" "செய்கின்றனன்" (ஆபஸ்தம்) என்னும் வினை கிகழ்காலத்திருப்பினும், யஞ்ஞத்தை அதிவீரிய முடையதாக்குதற்குச் சாதனமாக உபாசகாகிதி கற்பிக்கப்படுகின்றது. அதி வீரியமுடையதாகின்றதென்பது பிரபலகன்மாந்தரத்தினால் தடை ஒன்றும் கோராது விரைந்து பயன் கொடுக்கவேண்டியதென்பதின் மேற்றே. அங்ஙனம் சாமமும் விருஷ்டிமுதலியவும் போல வேறு பலன்களைக் கொடுப்பனவாகக் கேட்கப்படாலானும், யஞ்ஞகன்மங்களில் உபாசனைகள் நியமமில்லை. (கை)

(உ ஏ) பிரதாநாதிகரணம்.

வ்ரதாநவதெவ தத்ஸ்தூயே (கூ. கூ. சஉ)

(கூகூ) ஹவிகள் போலவே (உபாசனைகள் பேதம்); இது கூறப்பட்டது.

ஏகராகிய பரப்பிரமசிவனுர் பரவித்தைகளிலே அந்தந்தக் குணவிசிஷ் டங்களோடு வெவ்வேறுகத் தியானிக்கற்பாலர் எனக் கூறப்பட்டது. இது ரண்டுப் பொருந்துமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) குணங்களிற் பேதமிருப்பினும், குணியாகிய பிரமம் ஒன்றுமாதலின் உபாசனை பேதமுறாது; எங்ஙனம் ஒரே அரசன் பல்வகை ஆபரணவேறுபாட்டோடியைந்து கொலுவிருத்தல், தேகப்பயிற்சி செய்தல், போசனஞ் செய்தல், இருத்தல், வேட்டையாடல், போர்புரிதல் முதலிய அவ்வத்தொழில்களிலே இவ்வாசனமுதலிய ஸ்தானபேதங்களினும் பேதமு ருதே, அங்ஙனமே ததராதி ஸ்தானபேதத்தில் அவ்வக்குணங்கள் பேதமுற் நிருந்தாலும் பிரமம் ஒன்றுமாதலின் அதின் உபாசனையும் ஒன்றுபிருத்தல் வேண்டும் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்; ஏகராகிய பரப்பிரம சிவபிரான் சொரூபத்திற் வேற்றுமையேனும், அந்தந்தக் குணவிசிஷ்ட சொரூபத்தினும் குணவிசே பேதம்பற்றிப் பேதமெய்துவதாக, (அந்தப்) பேதருணக்களுடையவனாகத் தியானித்தலால் உபாசனைப்பிரயோகம் வேறுபடுகின்றது; இந்திரனுக்குப் பலிகொடுத்தல் போல. எங்ஙனமெனின்,

ஐந்ராயராஜை வரோசாமம் ஐந்ராயாயிராஜாயை ஸ்ராய ஸ்வரா ஜை (ஸ்ரீ. வே. உ. கூ. சு. க, உ)

"இராஜனுடைய இந்திரனுக்குப் புரோடாசத்தைக் கொடுத்த", "சுவிராஜ னுடைய இந்திரனுக்கும், சுவராஜனுடைய இந்திரனுக்கும் (கொடுத்த)" எனச் சுருதி கூறுகின்ற, குணங்கள் வேறுபடுதற்பொருட்டு வெவ்வேறு புரோடாசங் கள் பலிகொடுக்கப்படுகின்றன. (அங்ஙனம்)

நாராயணோபநிஷத் உபயம்.

"(வேள்விக்குரித் தியானிக்கப்படுதலின்) தேவதைகள் வெவ்வேறு" என்னுஞ் சங்கர்ஷகாண்டத்த (தேவதாதிகரண) த்திற் கூறப்பட்டவாறே, ஈண்டுப் பிரமம் ஒன்றுயினும் வெவ்வேறு குணங்கள்பற்றி உபாசனை பேதமுறுதலின், அரசன் ஒருவனுயிருப்ப, அவன் சொரூபம் பேதமுறுதிருந்தாலும், ஸ்தான குணமுதலிய பேதங்களால் வேறுக்காரராற் செய்யப்படுமவழிபாடுகளும் பின்னமே. (சூ)

(உஅ) இலிங்கபுலீயஸ்துவாதிகரணம்.

ஸ்ரீமதுலியஸ்தூபி வேயஸ்துஷயி (கூ. கூ. சகூ)

(கூகூஎ) இலிங்கத்திலே ஆதிக்கிய முண்மையின்; அதுவே அதிகபலம்; அதுவும் (கூறப்பட்டது).

முன்னர்ப் பரவித்தைகள் அனைத்தினும் பிரமம் உபாசிக்கற் பாற்றென வுணர்த்தப்பட்டது. அந்த உபாசியப்பிரமத்தை விசேடித்து நிச்சயிக்கும்பொருட்டே எழுந்தது இவ்வதிகரணம்.

யவெ-ர ஏவ ரூத்ரயவெஷ ரூத்ராய நமோ zஸ்து।
வாரூஷோ வை ரூத்ரஸ்தஸ்மை நமோ நமஃ॥

(தைத். ஆரணி. த0. உ. சஉ)

"எல்லாம் உருத்திரே; அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம்; சத்தும் மகத்துமாயுள்ள உருத்திரர் புருஷர்; அவர்க்கு நமஸ்காரம், நமஸ்காரம்" எனவும்,

விஶ்0 ஊ0தத0 ஊவந0 விதி0 யஹாயாஜாதத0 ஜாயோ நயிய।
யவெ-ர ஏவ ரூத்ரயவெஷ ரூத்ராய நமோ zஸ்து॥

(தைத். ஆரணி. த0. உ. சஉ)

"தேவர்களும் ரிஷிகளும், புனமும், மித்திரமாகப் பிறந்தனவும், திருக்கின்றனவுமாகிய இவையனைத்தும் உருத்திரர்; அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம்" எனவும்,

கதூரூத்ராய வாஜெதயெ தீவூஷீராய தவ்யவெ। வோசேமஶம்
ஹூதெ யவெ-ர ஏவ ரூத்ரயவெஷ ரூத்ராய நமோ zஸ்து॥

(தைத். ஆரணி. த0. உ. சகூ)

"மேலாகிய உருத்திரர்க்கும், மிகுந்த ஞானமுள்ளார்க்கும், அறச்செயல் செய்பவர்க்கும், வணங்கற்பாலருக்கும், இருதயத்துள்ளார்க்கும் இந்த இனிய [illegible] இவையனைத்தும் உருத்திரர், அந்த உருத்திரர்க்கு நமஸ்காரமாகுமே

நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே ஸோமாபதய உமாபதயே பசூனாம்பதயே நமோ நம: (தைத். ஆரண். க0. உ. ச0)

"சுவர்ணபாகுவுடையார்க்கு, சுவர்ணவர்ணருக்கு, சுவர்ணரூபர்க்கு, அம்பி காபதிக்கு நமஸ்காரம், உமாபதிக்கு நமஸ்காரம், பசுபதிக்கு நமஸ்காரம் நமஸ்காரம்" எனவும் தைத்திரியத்திற் கூறப்படுகின்றது.

சண்டு எல்லோர்க்கும் சர்வான்மகமாகவும் உமாபதியாகவும் கூறப்படு கின்ற பரப்பிரமம் பிரகிருதத்திலே ஆதித்தியமண்டல உபாசனையில் மாத் திரமா? இன்றேற் பரமித்தை அனைத்தினுமா? உபாசிக்கற்பாலது என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரகரணத்தில் பாதும் விரோதமின்மையின், இப் போது கூறப்பட்ட சூரியமண்டலவித்தையிலேதான் பிரமம் உபாசிக்கப் பாற்றெனின்,

(சித்தாந்தம்) சொல்லுதும். இந்தச் சர்வான்மகமாய் உமாசகிதமாயுள்ள பரப்பிரமமே பரமித்தைகள் அனைத்தினும் உபாசிக்கற்பாற்று; அவ்வம் வுபாசனைகளிற் கூறப்படும் குணலிங்கசம்பந்தமாயுள்ள வாக்யவேஷம் மிருத் தன்மையின். அங்ஙனமே,

ஸவை-ர வேவ ஸ-ஆ:ஸ: (தைத். ஆரண். க0. உ. ச. ச2)

"எல்லாம் உருத்திரரே" என்னும் வாக்கியத்தில்,

ஸவ-ம வஷ்டி0 ஸ்ரவது தஜ்ஜாதிபாஸ உபாஸீத।

(சாந். கூ. கா. க)

"இஃதெல்லாம் பிரமம்; (இந்த உலகம்) அந்தப் பிரமத்திலே தோற்றி, நிச் சலாசித்து, ஒடுங்குவதாக ஒருவன் தியானிக்க" என்று கூறும் சாண்டில் லிய வித்தையிற்றியானிக்கற்பாலதாகிய (பிரமத்தின் குண) லிங்கம்உள்ளது.

ஸ-ஸ-ஷோ வேவ ஸ-ஆ:ஸ: (தைத். ஆரண். க0. உ. ச. ச2)

"புருஷர்தான் உருத்திரர்" என்னும் வாக்கியத்திலே, புருஷரூத்த ட உபகோசலவித்தைமுதலியவற்றிற் கூறப்பட்ட உபாசிக்கற்பாலதாம் (பிரமத் தின்) லிங்கம் (காணப்படுகின்றது). எங்ஙனமெனின், சண்டிப் போன்ற [illegible] தென்பது

[illegible] வேவ ஸ்ரேஷ்ட ஸ்ருத ஸுவீர (சாந். க. உ. த)

"மேன்மையே, சத்தியம் இதுவே முற்றவும்" [illegible] உபாசிக்கற்பாலதாம் (பிரமத்தின்) இலக்ஷணப்பொருத்தமு

ஸோऽயமாத்மா வாங்மயஸ்ஸ மனோமயஸ்ஸ ப்ராணமயஸ்ஸ சக்ஷுர்மயஸ்ஸ ஸ்ரோத்ரமயஸ்ஸ பூமமயஸ்ஸ ஆகாசமயஸ்ஸ தேஜோமயோऽதேஜோமயஸ்ஸ காமமயோऽகாமமயஸ்ஸ க்ரோதமயோऽக்ரோதமயஸ்ஸ தர்மமயோऽதர்மமயஸ்ஸ ஸர்வமய இதி (தைத். க. ஒ)

"மற என்னும் அது பிரமம்; அது ஆன்மா; அதின் அவயவங்கள் மற்றத் தேவதைகள்" என்றுமிடத்து மறஃ என்பது வியாகிருதி வித்தையில் உபாசிக்கப்படும் பிரமத்தின் லிங்கம்.

ஸஹஸ்ரஸீர்ஷா புருஷ: (தைத். ஆரணி. க0. உஒ. சஉ)

"இருதயத்தில அதிக சாந்தம்" என்னும் சுருதியானது இருதயத்தைச் சுட்டுதலால், அந்த நகரவித்தையில் உபாசியமாகிய பிரமத்தின் குணலிங்கத்தைக் குறிக்கின்றது.

அதிரணுர்மஹானஜ (தைத். ஆரணி. க0. உஉ. ச0)

"இரண்டியபாகுவின் பொருட்டு" என்பதிற் சுவர்ணருபத்துவம் ஆதித்திய மண்டலவித்தையில் உபாசிக்கப்படும் (பிரமத்தின்) லிங்கம்.

உமாபதயே (தைத். ஆரணி. க0. உஉ. ச0)

"உமாபதிக்கு" என்பது பலவித்தைகள் அனைத்திலும் உபாசிக்கப்படும் (பிரமத்தின்) லிங்கம். சம்சாரநோயை உருக்கிவிடுதலால் உருத்திரன் எனப் பிலர் பரமான்மாவாகிய சிவபிரானர். இங்ஙனம் உமாபதியாகிய பரப்பிரம மூர்த்திக்குப் பலவித்தைகள் அனைத்திலும் உபாசியத்துவம் உளதென்பது (மேலே போந்த) வாக்கியங்களான் முடிவு பெறுகின்றது. வாக்கியம் பிரகரணத்திலும் பலமுடைத்தன்றே. இது பூருவமீமாஞ்சை, கூ. கூ. சச-ற் கூறப்பட்டுள்ளது. ஆகலின், உமைபோடிசைந்த சம்சாரநோயை ஒழிக்கும் பரமௌஷதமானது எல்லா வித்தைகளிலும் உபாசிக்கற்பாலதென்பது சித்திக்கின்றது. (சகூ)

(உகூ) பூருவவிகற்பாதிகரணம்.

வாஜிவாஜினே வாகரணாதூர்த்வாதீயாரா நவவத (கூ. கூ. சச)

(கூகூஅ) பிரகரணத்தினுல் முந்தியதற்கு விகற்பம்; (ஆகலின்,) நிரியை உண்டு; மானசபாத்திரத்திற் போல.

ஷோடஶதம் வாஜமஸ்ராணயபாணாதூர்த்வம் நாऽஸீந்நக்ஷத்ரம் நாऽஸீந்நாக்யாத்ரயீ தஸீத் (சத்பதப்பிராம்மணம், அக்னிரகசியம், ஒ. கூ)

"மனோமயமாய், மனிஞற் கட்டப்பட்டுத் தனக்குரிய மூப்பத்தாறுவிரற் பிரகாசம் பொருந்தி அக்னிவேதிகைகளின் அதன்கண்ட" என்ன (சதபதப்) பிராமணத்தைச் (சார்ந்த) அக்னிரகசியத்திற் கூறப்பட்டுள்ளது. அவையிரு

வாக்தீக் ப்ராணஸ்தூக் மநஸ்தஸ்மாத் தீக்ஷிதீ வாசிக்ஷிதா ப்ராணஸ்தீக் (அக்கினிரகசியம்)

"ஆச்சிரமங்கள் ஒன்றுக்கேனும் சேராமல் ஒர் தினமாயினும் இரு பிறப்பான் இருத்தல் கூடாது" என ஸ்மிருதியும் கூறுகின்றது. இங்ஙனம் ஆச்சிரம மில்லாமையினும் ஆச்சிரமமுடைமை சிரேட்டமே. அங்ஙனமாயினும், ஆபத்தாகிய விஷயங்களில் ஆச்சிரமமில்லாதோர்க்கும் செபமுதலிய சாதனத்தினால் ஞானம் எய்துகின்றதே. (கூக)

(கக) தத்பூதாதிகரணம்.

தஜ்ஜலாநிதி நாதஜ்ஜாவோ ஜெஜிதி நாஷி நியாதஜ்ஜலாவாஹாவெஜ்ஜிஃ (கூ. சூ. சo)

(சூத்) அவ்வாறுகிய புருடனுக்கு அவ்வாறுதலினிருந்து நீங்குதல் கூடாது; சைமினி அங்ஙனங் கொள்ளுதலான்; நிலையினின்று இறங்குதல் தடுக்கப்படுதலின்.

ஈண்டுத் துறவுபூண்டோர் பூருவாச்சிரமத்துக்கு மீடலாகிய இறக்கம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஷாஷுயயுஃo ஸோவ்ய ஷுஹீ ஷவெஸ்ர்
ஷுஹோஷாவ நீ ஷுஹ்வா வ்யஜெஸ் (ஜாபாலம்)

"பிரமசரியத்தை முடித்துக் கிரகஸ்தாச்சிரமியாதல்வேண்டும்; கிரகத்தை விட்டு வானப்பிரஸ்தனாகித் துறவு செய்தல்வேண்டும்" என்னும் வாக்கியத்தினால் ஆச்சிரம ஏற்றம் எவ்வாறு சுவேச்சாதீனமோ, அவ்வாறே (ஆச்சிரமத்தினின்று) இறக்கமும் எய்தலாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஸ்ருஷ்டிகாதி ஆச்சிரமத்தை அடைந்தவனுக்கு அதினின்று இறங்குதல் கூடாது; அந்நிலையினின்று இறங்குதல் தடுக்கப்படுகின்றமையான்.

கூதுஷோதாந ரோஹாஸுகுஷெ zஸுலாதியநீ (சாந். உ. உகூ. க)

"ஆசாரியகுலத்திலே தன்னை மிகுதியும் ஒறுத்து" என்னும் சுருதியினால், அது நிச்சயமாய்த் தடைப்படுத்தப்படுகின்றது.

கஸுஜீயாததெகாந வுநரெயாஸ்

"அவன் காட்டுக்குப் போய் அங்கிருந்து மீண்டு வாராதிருப்பானாக" எனவும்,

ஸஜ்ஜ்ஹ்யாதீஜ வ ுநராவ துயெசு।

"அக்னிகளே விடுத்துப்போய் அவன் மீண்டு வாராதிருப்பானாக" என வும் சாஸ்திரங்கள் இறங்குதலைத் தடைப்படுத்துகின்றன. ஆச்சிரமத்தி னின்று ஏறுதற்கு விதி இருத்தல்போல, இறங்குதற்குச் சாஸ்திரங்களில்லை. அவ்வாறே இறக்கத்தைச் சுருதிகள் வெளிப்படையாய்த் தவிர்த்தலானும், இறக்கத்துக்கு உடன்படுஞ் சுருதியின்மையானும், (உயர்ந்த ஆச்சிரமத்தி னின்று இறங்குகின்ற அவர்களுக்கு) ஞானதிகாரமில்லை; சைமினிக்கும் இதுவே சம்மதம். (சஅ)

உயர்ந்த பதவியிலிருந்து இறங்கிறவனுக்குப் பிராயச்சித்தாதியினுல் வித்தியாதிகாரம் இல்லை என்று சூத்திரகாரர் கூறுகின்றனர்.

நஆயிகாரிகஷி வதந்ந ோநா துயொஸு (கூ. சு. சக)

(சநிக) யோக்கியதையைக் கொடுக்கத்தக்க பிராயச்சித் தமும் இல்லை; ஸ்மிருதி கூறுமாறு வழுவுதல்பற்றி அது அவர்கட்கியையாமையின்.

மீமாஞ்சாதிகரணத்து (கூ. அ. உஉ-இல்) நெறி தவறிய பிரமசாரிக்குக் கர்த்தபபஷி (கூறப்பட்டாற் போல, யோக்கியதா) அதிகாரத்துக்கு இலக்ஷ ணமாகச் சொல்லப்பட்ட பிராயச்சித்தமானது (ஆச்சிரமத்தில்) உயர்ந்து வழுவினவனுக்கு எய்தாது;

ஸுஷ்ஹொ நெவழ்ஜ்ஷ ய்ஜ்ஹ்ஹ யஷ்ஹ ுவ்ரசுவதெ நஸ்ஹி।
வ்ராய்ஸ்ஜ்ஹ்தீ நவ ஸுயாஜ்ஹி யெந ஸ ுஜ்ஹ்ஹெஜ்ஹ்ஷ ஸுத்ஜ்ஹஹா॥

"நைஷ்டிகப் பிரமசரியத்துக்கு ஏறிய மனுஷன் அதினின்று தவறுவானு யின், அந்த ஆன்மாவைக் கொன்ற அவன் சுத்தி எய்துமாறுள்ள கழுவா யைக் காண்கிலேன்" என்று ஸ்மிருதியானது அவனுக்குத் தகுதியாக்கப் பிராயச்சித்தத்தை மறுத்தலான்; அவன் அந்தப் பிராயச்சித்தத்துக்கு யோக்கியனுகான். (சக)

உவவ ுவஷ்ஹிஜ்ஹெகெஹாவஜ்ஹ ுநவ துஜ்ஹ ுஸுஜ்ஹ (கூ. சு. சஉ)

(சஅ0) உபபாதகம் (என்ப) சிலர்; போசன (விஷய)த் திற்போலப் (பிராயச்சித்தம்) உண்டு (என்ப); இது கூறப்பட் டது.

உபபாதகமாயிருத்தலான், சிலர் பிராயச்சித்தத்தை அங்கீகரிக்கின் றூர்; மதுவை உண்டு பிராயச்சித்தங் கோடல் போல.

உ துஜ்ஹொஷாஜ்ஹெஜ்ஹ தஜ்ஹவிஜ்ஹொயி।

"பிரமசரிய விஷயத்திற் கூறப்பட்டது விரோதமில்லாவிடத்து உயர்ந்த ஆச்

சிமிகளுக்கு எய்துவதாம்" என்னும் வாக்கியத்தினைப் பிரமசாரிக்கு எது கூறப்பட்டதோ, அது விரோதமில்லாவிடத்து மற்ற ஆச்சிரமிகளுக்கும் பொருந்தும் என்பது பெறப்பட்டது. (சஉ)

வஹிஷ்ணுஹயாவி ஷ்ணு த ராஹாராஷ (கூ. சா. சகூ)

(சகூக) ஆயின் அவர் இரு பிரகாரத்தானும் புறத்தே நிற்கின்றார்; ஸ்மிருதியும் ஆசாரமுமுண்மையான்.

உபபாதகமாயிருந்தாலும் மகாபாதகமாயிருந்தாலும், இந்த (அதிக் சிமிகள் வைதிக) கன்ம அதிகாரமுதலியவற்றினின்று பஹிஷ்கரிக்கப்படுகின்றனர்;

ப்ராயஶ்சித்தஜ்ஞாநி யேந ஸுஷ்ருத்ய கூத்ஹா।

"ஆன்மாவைக் கொல்பவன் சுத்தியடைதற்குரிய பிராயச்சித்தத்தைக் காண்கிலேன்" என ஸ்மிருதியிற் கூறப்படுதலானும், ஷிஷ்டர் (சங்கத்தி) னின்று பஹிஷ்கரிக்கப்படுதலானுமாம். ஆகலின், ஆரூட பதிதற்கு (உயர்ந்த வழுவினர்க்கு) ஞானதிகாரம் எப்பிரகாரத்தானும் இல்லை. (சகூ)

(கஉ) சுவாம்மியதிகரணம்.

ஷ்வாதிநஃ ஷலஸ்ய தித்ருஷ்டத்ருஷ்டாப்யாம் (கூ. சா. சச)

(சகூஉ) யஜமானனுக்குப் பலம் கூறப்படலான், என்பர் ஆத்திரேயர்.

மூற் கூறப்பட்ட உற்கீதாதி உபாசனநிஷ்டானம் யஜமானனுக்கா? இன்றேல் இருத்விக்குக்களுக்கா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உற்கீதமுதலிய உபாசனை யஜமானன்பொருட்டே அநுஷ்டிக்கற்பாற்று; அவனுக்கே அதிவீரியமாகிய பலத்தைக் கொடுப்பதாகக் கேட்கப்படலான். இருத்விக்குக்களால் (அநுஷ்டிக்கற்பாலது) என்பது ஆத்திரேயர் கொள்கை (எனின்), (சச)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

சூத்ர-ஜ்யோதிஷ்டோமஷ்ஷ ஹி வர்ணீயதே।

(கூ. சா. சஞ்)

(சகூக) அவை இருத்விக்கின் கன்மம் என்பது ஔடுலோமி (கொள்கை); அவர்க்குத் தக்ஷிணை கொடுக்கப்படுகின்றதன்றே.

வாவப விஷ்ணு ஷ்டாதா ஷ்ரூயதே (சாந். க. ள. அ)

"இதனை அறிந்த உற்காதா கூறுவாராக" என்னும் சுருதிவாக்கியசேஷத்தான், உற்காதாவே உபாசிக்கவேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்படுகின்றது. இருத்துவிக்குக்கே அவ்வநுஷ்டானம் உரியதென்பது ஔடுலோமிமதம்.

(ஆக்ஷேபம்) ஒருவன் ஒன்றைச் செய்ய, அதன் பலம் மற்றொருவனுக்குச் சேறல் எங்ஙனமெனின்,

(உத்தரம்) (முக்கிய) கருமத்துக்குப் போல மற்றை அங்க கருமங்கள் அனேத்தையுஞ் செய்யும்பொருட்டு யஜமானனாலே இருத்துவிக்குக்கள் (தக்ஷிணை) கொடுக்கப்படுதலான், சாங்ககருமாநுஷ்டானத்தின் பொருட்டே இருத்துவிக்குக்கள் எஜமானனால் (தக்ஷிணை) இறுக்கப்படுகின்றார்கள். ஆதலின் இருத்துவிக்கினாலே செய்யப்பட்டது யஜமானனாலே செய்யப்பட்டதே. ஆகலின், யாககர்த்தாவுக்கே பலமுஞ்சேருமென்பதில் விரோதமில்லை. (சசு)

(கஙு) சககாரியந்தரவித்தியதிகரணம்.

ஸஹகார்யுத்தரவிதௌ விகேஷண தூதீயஹவிதோ விஹ்யாதிவத்

(கூ. சூ. சசு)

(சசுச) வித்தையுடையானுக்கு யஞ்ஞவிதிமுதலியபோல, மூன்றுவதாகிய (மௌனம்) மற்றோர் சககாரியாக விதிக்கப்படுகின்றது; பிரசித்தமாதலின்.

தஸ்மாத் ப்ராஹ்மணஃ பாண்டித்யாந்நிர்வித்யாத² பால்யேந திஷ்டாஸேத் பாண்டித்யம் பால்யம் சாந்தரம் ஏதாப்யாம் (பிரு. நி. கி. க)

"ஆகலின் பிராமணன் பாண்டித்தியம் எய்திய பின்னர்ப் பால்லியமாயிருக்க நாடுவானாக; பாண்டித்தியத்தையும் பால்யத்தையும் விடுத்த பிற்பாடு முனியாய் இருப்பானாக" என்று கோளப்பிராம்மணத்திலே கூறப்படுகின்றது. அநேக உபநிடதங்களின் தாற்பரிய நிர்ணய ரூபமாகிய பாண்டித்திய முழுமையும் அடைந்து (பிராமணன் ஒருவன்) பால்லியமாய் (இருக்கவேண்டும்; அஃதாவது) இராகத்துவேஷமுதலிய அனேத்தையும் விடுத்துப் பால்லியத்தை ஒத்த மற்றோர் நிலையிலே நிற்கவேண்டும் (என்பதே); பாண்டித்தியம் பால்லியம் என்பனவற்றை முழுதும் நாடிக்கொண்டு பின்னர் முனியாதல் வேண்டும்.

சண்டப் பாண்டித்தியமும் பால்லியமும் விதிக்கப்பட்டாற்போல, முனியின் நிலையும் (மௌனமும்) விதிக்கப்பட்டதா? அன்றி? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) முனி என்றவிடத்து "ஆகுக" (ஹவெது) என்னும் விதிப்பிரயோகமின்மையான், அது விதிக்கப்படவில்லை எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. வித்தையுடையானுக்கு யஞ்ஞாதிகள் போலப் பாண்டித்தியம் பால்லியம் என்பவற்றுக்கு மூன்றுவதாகிய மற்றோர் சககாரியமாய் மௌனம் விதிக்கப்படுகின்றதே; மிருதியும் தியானஞ் செய்பவனுக்கே முனி என்னும் சப்தம் பிரசித்தமாதலின். வித்தையைப் பெறும்பொருட்டு உபாசியவிஷயமாயுள்ளதை இடைவிடாது அப்பியாசஞ் செய்வதாயுள்ள இத்தப் பிரகிருஷ்டமாகிய தியானத்தில் "அவன் நிற்க" (திஷ்டாஹெசு) என்னும் சப்தத்தை வருவித்துக்கொள்வதினால் விதிக்கப்படுகின்றது. ஆகலின், வித்தையுடையானுக்கு மௌனவிதி நேர்ந்திருக்கின்றது. (சசு)

(கச) கிருத்சிநபாவாதியதிகரணம்.

கூசு வூஸாவாத்ஹூஹ்ஹிணாவ்வஸஹாராஃ (கூ. சு. சள)

(கூசுரு) ஆயின் எல்லோரினும் (வித்தை) உண்மையின், (சுருகி) கிரகஸ்தனேடு முடிக்கின்றது.

ஈண்டு வித்தை எல்லா ஆச்சிரமிகளுக்கும் சாதாரணமாயுள்ளதா? இன்றேற் சிலர்க்குமாத்திரம் உளதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரமசாரிகள் வேதாப்பியாசம் செய்கின்ற ஆசாரியர் வசப்பட்டவராதலினும், கிரகஸ்தன் குடும்பத்தைத் தாங்குதலிலே முயற்சித்திருத்தலாலும், வானப்பிரஸ்தன் துறவிலே முயற்சித்திருத்தலாலும், அவர்களுக்கு ஞானமுந் தியானமும் எய்தமாட்டா.

வெஹாஜவிஜ்ஞாநவ்ரிஹ்ரீதாஷ்டா வ்ரஹ்மயாவயோஹ்ரஹ்மயஜ்ஞவ்ரதாஃ (கைவ)

"வேதாந்த ஞானத்தினாலே நன்கு நிச்சயிக்கப்பட்டவர்களாய், சந்நியாச யோகத்தினாலே சுத்த சத்துவமனமுடையவர்களாயுள்ள யதிகள்" என்னும் சுருதியினால் வேதாந்தார்த்த ஞானமுடையவர்களுக்குச் சந்நியாச யோகம் கேட்கப்படலானும்,

சதுராஶ்ரமாஃ (கைவ)

"அத்தியாசிரமத்தினின்று" என்பதினாற் தியானவிதி பெறப்படல்லானும், துரியாச்சிரமிகளுக்கே ஞானமும் தியானமுமாம், மற்றவர்களுக்கில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) வித்தை எல்லோர்க்கும் உரித்தே;

கூடாவை ஸாவெள டெஸ்ரவ்ரூயாய ஶ்ரேயாநஃ।
வவவெவவத்யநாவஹாயாஷாவ்ரஹ்மலோகமம்ருதத்வமேதி।
நச வாநாவத்தி (சாந். அ. கநி. க)

"ஆடும்பஸ்தனைப், பரிசுத்தமாகிய ஸ்தானத்திருந்து வேதாத்தியயனஞ் செய்துகொண்டு" என்று தொடங்கி, "இங்ஙனம் ஆயுசுபரியந்தம் ஒழுகுகின்றவன் பிரமலோகத்தை அடைந்து மீளத்திரும்புவானல்லன்" எனச் சாந்தோக்கியத்திற் கூறப்பட்டமைபற்றி, எல்லா ஆச்சிரமிகளிடத்திலும் வித்தை உளதாகக் காணப்படலான். இங்கே கிரகஸ்தாச்சிரமத்தோடு சுருதி இங்ஙனம் உபசங்காரித்தல் எல்லா ஆச்சிரமிகளுக்கும் அது உண்டெனக் காட்டும் பொருட்டன்றே; இங்ஙனம் அத்தியாசிரமவசனமும் எல்லா ஆச்சிரமிகளுக்கும் அது உண்டெனக்காட்டும்பொருட்டேயாம். ஆகலின், எல்லா ஆச்சிரமிகளுக்கும் வித்தை உண்டே. சந்நியாசம் என்னும் பதம் பலங்களையெல்லாம் விடுத்தலின் மேற்று. யதித்தன்மை என்பது ஜிதேந்திரியத்தின் மேற்று. ஈதெல்லாம் எல்லா ஆச்சிரமிகளுக்கும் நேர்கின்றனவே. (சஎ)

(கநி) பாசுபதவிரதாதிகரணம்.

ஸைதவ ஹிதரெஷா வேர்ஷவதொஷாஷ (கூ. சா. சஅ)

(சசுசு) மௌனம் போல மற்றவர்களுக்குங் கூறப்படலான்.

கர்ஷா ஹிக்ஷா ஹொதர்ஜாலவஸ்ய ஈஷுழி, வைஜ்யா வஜ்ஜீர் ஷ்யாவவிக்ஷாதர் ரர்ஷெர், ரர்ஷர் வஸகஷ ஸாஹர்ஷி, ரர்ஷ்ரோபஸ்ஷாதர் வெவர்ராணஸீஷுஈஜர் கவஷா நியஷ்ஷத | வ்ரதமேதத்தாஸர் வதிழ (அதர்வசிரசு)

"ஆசையை அறுத்து, ஏதுஜாலங்களின்மூலத்தைப் புத்தியினற் சிந்தித்து உருத்திரரிடத்தே மனசை நிறுத்துக; உருத்திரரிலே ஏகத்துவம் கூறுப; அன்னமும் பலமுமாகி, நித்தியரும் பழையோருமாகிய உருத்திரரைத் தபசினலே (ஞானத்தினலே) நீவிர் ஒருக்கிப் பற்றுக, இது பாசுபதவிரதம்" எனப் பாசுபதவிரதம் அதர்வசிரசிற் கூறப்படுகின்றது. புராணங்களினும் பிரசித்தம்.

இந்தப் பாசுபதநிஷ்டர்க்கு ஞானப்பேறும் முத்தியும் எய்துமா? எய்தார்வா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) இந்தப் பாசுபதவிரதம் ஆச்சிரமங்களுக்குள் அடங்காமையானும், காலவரையறையுடைமையானும், கிருஷ்ணர் முதலாயினோராற் புத்திரப்பேற்றின் பொருட்டு அநுஷ்டிக்கப்பட்டிருத்தலானும், அவாந்தரபலப்பேறெழிந்து அவர்களுக்கு மோக்ஷசித்தியில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். இந்த விரதத்தை மரணபரியந்தம் அநுஷ்டிப்பவர்களுக்கு முத்தியே பேறு; ஞானப்பேறும் பரப்பிரமமாகிய சிவபெரு

மானத் தியானஞ்செய்தலேயாம்; முனியின் நிலைமைபோலப் பிரணவோபேத மும் சமம் தமமுதலிய மற்றைப் பரதருமங்களும் பாசுபதம் எனப்படும் விர தத்திலும் உபதேசிக்கப்பட்டிருத்தலினாலும்,

ரூஉ வாகஷுரோஹ்ம்। ரூஉ ஸாஸ்வதம் வைவஸ்வாணவிஷ ஷ்ஜ்ம் தவவாகிய ஹத। வ்ரதமேதத் வாஸ்வதம்। கஹிரிதுரிநா ஹஸ்ஹ்ரஷீகா விஷ்ஜ்யாஹரிநி ஸம்ஸ்ப்ருஷ்தஷ்ஷ்ட்ர வ்ரதமேதத்தா ஸ்வதம் வஸ்வாஸ விமோக்ஷாய (அதர்வசிரசு)

"உருத்திரரில் ஏகத்துவம் கூறுப; அன்னமும் பலமுமாக நித்தியரும் புரா ணருமாகிய உருத்திரரைத் தபசினால் ஒருக்கிப் பற்றுக;' 'அக்கினி என்பது பசுமம்' என்றற்றொடக்கத்த மந்திரத்தினாலே விபூதியை எடுத்து, அங்கங் களிலே தொட்டு, அவற்றைப் பூசிவிடுக; ஆகலின், இந்தப் பாசுபதவிரதம் பாசத்தினின்று பசுவை மீட்கும் பொருட்டுள்ளது" என அப்பாசுபத நிஷ் டர்க்கும் சிவத்தியானத்தினாற் பாசத்தை அறுத்தலாகிய மோக்ஷபலத்தின் சம்பந்தம் பெறப்படுகின்றமையானுமாம். ஆகலின், ஆயுசுபரியந்தம் (வை திக)பாசுபதவிரதத்தைஅநுஷ்டிப்பவர்க்கு முத்திதான் பலம்.

ஆச்சிரமங்களுள்ளே அது அடங்கவில்லை என்பதுபற்றிச் சூத்திரகாரர் கூறுவாராயினர். (சஅ)

கூநாவிஷ்ட்வாஸ்ரமயோக (கூ. சு. சகூ)

(சகூஎ) தன்னைக் காட்டாமல்; சம்பந்தமுண்மையின்.

மற்றோர் ஆச்சிரமமாகத் தன்னைக் காட்டாது அவ்வியக்தமாயிருந்தா னும், பாசுபதாச்சிரமமானது ஞானசாதனத்துக்குரிய பிரமசரியமுதலிய யதி தர்மங்களை அடக்கி, அத்தியாசிரமம் எனப் பெயர் படைத்து, பரசிவனை அடைதற்குக் காரணமாய், சுவதந்திரமாய் (வாய்ந்தது) இந்த ஆச்சிரமமே தம்.

யாவஜ்ஜீவாதம் வாஹராஸ்ரயோவிவா (வாயு. பூர். உகூ: அ)

"சரீராந்தம் வரையுமேனும், பன்னிருவருஷமேனும் அநுஷ்டிக்க" என் னும் சுலோகத்திற் கூறப்பட்டவாறு, பாசுபதவிரதமானது சிவபரியந்தமே னும், சொற்பகாலத்துக்கேனும் அநுஷ்டிக்கப்படுவதென இருவகைப்படும். இந்த இரண்டிலே சிவபரியந்தம் அநுஷ்டிக்கப்படுவது *அத்தியாசிரமம்

---

*உபக்கிரமணிகை (கூசக—கூசக-ஆம்) இலக்கம் வரையும் உபப்பிருங்கணப் பிரமாணசித்தமாய்க் காட்டப்பட்டவாறு இச்சைவபாஷ்யகாரரும் அத்தியாசிரமம் என்றதற்குப் பாசுபதவிரதம் என்று பொருட்படுத்தினராக, சங்கராசாரியர் (சவே. கூ.உக-இற்) கண்ட அந்த அத்தியாசிரம சப்தத்தற்குப் பரமகம்சசன்னியாசியென்று உபப்பிருங்கணங்களுக்கெல்லாம் மூடணுறப் பொருள்செய்து தவறுண்டனர். அர்

னைப்பட்டு மோகூத்துக்கு வாயிலாகும்; மற்றது போகஹேதுவாயுள்ளது. இங்ஙனம் போகமோகூஹேதுவாய் இருதிறப்படும் அந்த விரதமானது சிவப்பிரசாதத்தைப் பாலிப்பதெனச் சுருதி விதிக்கின்றது. சுருதிவாக்கியம் அப்பிராமாண்ணியமாகாதிருக்கப் பொருள்செய்யற்பாற்று. (சஉ)

(கசு) ஐகிகாதிகரணம்.

வைஹிக ஈ வ்யூஹ்வ்ய திவ்யை கஜூரா நாஸ (சூ. சா. நிo)

(சசுஅ) இந்தப் பிறப்பிற் பிரதிபந்தமில்லாதொழியிற் (பயன் சித்தியாகின்றது); அங்ஙனஞ் சுருதி காட்டுதலான்.

மேலே கூறப்பட்ட உபாசனநிஷ்டர்களுக்கு மோகூபலம் இச்சென னத்திலா? இன்றேல் மறுசென்னனத்திலா? என்பது சந்தேகம்.

(பூருவபகூஷம்) அது ஆராயப்படுகின்றது. இந்தச் சென்மத்திலே முக்தி எய்துவதென்று விசுவசித்துப் புருஷன் உபாசனையிற் பிரவர்த்திக்கின்று னன்றி, சென்மாந்தரத்தையுற்றன்று. பயனைக் குறித்து எவன் தாமசத்தை விரும்புவன்? ஆகலின், பயனுளதாயின் அது இச்சென்னனத்தில் முக்திபலம் எய்தும், இன்றேல் ஒர்காலும் எய்தாதெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிரபலமாகிய மற்றோர் கருமப் பிரதிபந்தம் இல்லாதபோது, பரத்தின் உபாசனபலம் இந்தச் சென்மத்தில் எய்தும்; பிரதிபந்தமுளதாயின் அடுத்த சென்மத்தில் எய்தும்; உலகத்தில் நன்மையா னது தனக்குச் சாதனமாயிருக்கும் புண்ணியஞ் செய்த பின்னர்த்தான் எய்த வேண்டும் என்பது நியமமன்று. பின் பிரதிபந்தங்கள் உள்ளபோது அது மற்றோர் சென்மத்தில் எய்துகின்றது. அதுபோலாம்; சென்மாந்தரத்திலே செய்யப்பட்ட சிரவணாதி பலத்தினாலே வாமதேவர் முதலியோரும் அப்பிரம விதியா பலத்தை அடுத்த சென்மத்திலே எய்தினர் என்று சுருதியிற் காணப்படலான். ஆகலின், இப்பிறப்பிலே வீடுபேறு எய்தவேண்டும் என் பது நியமமன்று. (நிo)

(கள) முக்திபலாதியமாதிகரணம்.

வஸவ ஈ ஹ்யாங்கி ஸுஷுவுஸ்ராவ்ய தெஷுஷுவுஸ்ராவ்ய தெஷீ (சூ. சா. நிக)

(சசுஉ) இங்ஙனம் முக்திப்பயனிற் பேதமின்று; அதின்

தியாச்சிரமம் என்பது துரியாச்சிரமத்தின் மேற்று; அந்தியாசிரமம் என்பது (வைதிக) பாசுபதவிரதத்தின் மேற்று.

நிலைமை நிச்சயிக்கப்படுகின்றமையின், அதின் நிலைமை நிச்சயிக்கப்படுகின்றமையின்.

கேவலம் கன்மங்களினல் எய்தும் பலப்பேறுகள் போல முக்திப்பயனும் பிரபலகர்மாந்தரப் பிரதிபந்தமில்லாவிடத்து எய்துமென்று நிரூபிக்கப்பட்டது.

அந்த நியாயத்தினலே (யஞ்ஞ) கன்மபலங்களிலே (பேதமுளதாதல்) போல, ஞானபலனுக எய்தும் முக்தியினும் பேதமுளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) கன்மபலம் போல முக்திபலமும் பேதமாம்.

ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்காமோ யஜேத।

"சுவர்க்ககாமன் ஜ்யோதிஷ்டோமத்தினல் வேட்க"

வாஜபேயேந ஸ்வராஜ்யகாமோ யஜேத।

"சுவராச்சியகாமன் வாஜபேயத்தினல் வேட்க" என்றற்றொடக்கத்தவற்றுற் கன்மபலம் பலவாகக் காணப்படுதல்போல, உபாசனஞானபலத்திக்குமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. கன்மபலன்களைப் போல ஞானே பாசனபலம் பேதமடையும் நியமம் இல்லை; பிரமசொரூபத்தையடைதலே பலமாயிருத்தலின். வித்தையுடையார் அனைவர்க்கும் பிரமசொரூபமடைதல் ஒன்றேயாதலின் ஈண்டுப் பேதம் எய்தாது. உபாசனையின் வேறுபாட்டினல் முக்திசொரூபமாகிய அந்தப் பலம் வேறுபாடுடையதெனக் கூறுதல் அடாது; உபாசனகருமங்களுக்கு முக்தி பலத்தையொழித்து வேறுபலமின்மையானும், பிரமம் ஒன்றுமிருத்தலின் அந்தப் பிரமரூப முக்திபலமும் ஒன்றுமிருத்தலானுமாம். ஆகலின், மோக்ஷபலத்திற் பேதமில்லை. (நிக)

நான்காம் அத்தியாயத்து

முதலாம் பாதம்.

(க) ஆவிருத்தியதிகரணம்.

ஸுவ்ருத்தி ரஸக்ருதுபதேசாத் (சூ. க. க)

(சூத்) அடிக்கடி ஆவிருத்தி (கருதப்படுகின்றது); உபதேசத்தினால்.

மூன்றும் அத்தியாயத்திலே உபாசகன், உபாசியம், உபாசனோபதேசம், ஆச்சிரமதருமமுதலியன விசாரிக்கப்பட்டன.

ஈண்டுப் பின்னரும் நான்காம் அத்தியாயத்து முதலாம் பாதத்திலே உபாசனப்பிரகாரமும்,

இரண்டாம் பாதத்திலே சிலோபாசகனுடைய உற்கிராந்திதசையும்,

மூன்றும் பாதத்திலே அர்ச்சிராதிகதியும்,

நான்காம் பாதத்திலே பிரமத்தைஅடைந்தவனுடைய நிலைமையும் நிரூபிக்கப்படுகின்றன.

ஈண்டு முதலதிகரணத்தில்

ஆத்மேத்யுபாஸீத (தைத். உ. க)

ஆத்மாநமேவ லோகமுபாஸீத (சுவே. ச. கச)

"பிரமத்தை அறிந்தவன் பரமானந்தத்தை அடைகின்றான்;" "சிவபெருமானை அறிந்து அத்தியந்தசாந்தியடைகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே மோக்ஷசாதனமாக விதிக்கப்பட்ட (வேதனத்தை) அறியுந்தொழிலை ஒருமுறை அநுஷ்டிக்க வேண்டுமா? இன்றேல் அடிக்கடி அநுஷ்டிக்க வேண்டுமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஓர்கால் அநுஷ்டிக்கற்பாற்று; "ஒருமுறை செய்தாற் சாஸ்திரார்த்தம் நிறைவேறிற்று" என்னும் நியாயத்தினற் பிரயாஜாதி போல,'ஒருமுறை அநுஷ்டித்தாலும் வேதனம் ஞானம் என்னும் மொழிகளின் அர்த்தம் சித்தியாய்விட்டது எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்.

ஆத்மேத்யுபாஸீத (தைத். உ. க)

"பிரமத்தை அறிபவன் பரமானந்தத்தை அடைகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளில்மோக்ஷசாதனமாய் விதிக்கப்பட்ட (வேதனம்) ஓர்கால் ஆவர்த்திக்கத்தக்கது;

மிதாஷ்யமிவுகு்வாவீ்க (சாந். க . கஅ. க)

"மனசைப் பிரமமாக ஒருவன் உபாசிக்க"

ஊதிஅகவதிஅ திகதுல்ம யாஸா ஒ்வுவஅ-ல்வெந யவஸவ0 வெஷ (க. கஅ. க.)

யதுவெஷ வஸ்மியெத ந்ஷநூ் (சாந். ச. க. ச)

"இதனை (வேதத்தை) அறிகின்றவன் கிர்த்தியினையும் யசசினையும் பிரமவர்ச்சசினையும், பிரகாசித்துத் தபிக்கின்றன், தான் அறிகிறதை அறிகிறவன் என்னல் இங்ஙனம் கூறப்படுகின்றன்"

கநஷ வஸதா உழுவொ மிவுதா ஸாயியா மிவுகாஷவாவெஷ்ல
(சாந். ச. உ. உ)

"பகவானே, நீவிர் உபாசிக்கும் தெய்வதத்தைச் சொல்லும்" என்றற்றொடக்கத்த சுருதிகளின் உபக்கிரமோபசங்காரங்களிலே, அறிதல் உபாசித்தல் என்னும் இரு மொழிகளும் மாறிமாறி எய்தலானும், மோக்ஷத்தின் சாதனமாகிய வேதனம் உபாசனரூபமாக இருக்கின்றமையானும், உபாசனசப்தமும் இடையிடின்றிச் செல்லும் சிந்தனையின்பேற்றுமாதலினுமாம். பிரமாஜாதிபோல என்றமை:— இதன் பயன் அதிர்ஷ்டமாதலின், இது ஒரு முறை அநுஷ்டித்தால் அமையும்: அறிதற்பொழிற் பயன் சாக்ஷாத்கார திருஷ்டமாதலினால் அதன் பலோதயம் வரையும் ஆவிருத்தி செய்யவேண்டும், நெற்குத்தல் முதலிய போல. (க)

ஷிமஷாஷ (சு. க. உ)

(சூத்ர) குறிகளானும்.

கெஷ்தரமிவுஷாஜாநாஸ்ஷ்ஷ்ஷ் வாஸோ ஷதா| ஷதாவாகக யாகெதாவாய-கெதாவாவ ஷ-வாவாஷமிகெஷ்| வரவிஷாஷஜ நிவாஷதப வாவஷ ஷாநாநப வஸிஷவுவிவஸ|

ஸுஷாதிகாமெஷாஷாநாந-தீவிஷ்ஷ|
ஸாகாஷ வஷவாஜ்முஷாவ விஷாக்ஷவாஸாஷவாஸ்|

"சிவ ஞானத்தினால் ஆன்மாவுக்கு எய்தும் தூய்மை பரமாக மதிக்கப்படுகின்றது; மகாபாதகஞ் செய்தானுயினும், உபபாதகஞ் செய்தானுயினும் இவில் ஒர்சாமம் பிரமத்தியானஞ்செய்வானாக;" "ஆன்மாவுக்கு விதிக்கப்பட்ட யோகத்தை ஒருவன் பயில்க;" "பொன்வண்ணரும் சொப்பனத்தில் அடையற்பாலருமாகிய பரமபுருஷரை அறிக" என்னும் (ஸ்மிருதி) வாக்கியங்கள் அவ்விஷயத்திற் குறிகளாயுள்ளன. ஆகலின், பிரம வேதனம் ஆவிருத்தி செய்யற்பாற்று. (உ)

(உ) ஆத்துமாதிகரணம்.

ஆத்மேதி தூபகச்சந்தி ஸ்வாத்மயனீத (சு. க. ங)

(நிலை) ஆன்மாவாகவே அவரை அடைகின்றார்கள்; பற்றுதலுஞ் செய்கின்றார்கள்.

மேலே அதிகரணத்திலே பிரமோபாசனை ஆவிருத்தி செய்யப்படல் வேண்டும் என்று கூறப்பட்டது. பிரமத்தைத் தனக்கு ஆன்மாவாய்க் கொண்ட ஆன்மா தன்னைப் பிரமத்தோடு ஒன்றாகவா? இன்றேல் அதற்கு வேறாகவா? கொள்ளல்வேண்டும் என்னும் விசாரம் உண்டாகின்றது. (முதலாவது)

விஷயவிசேஷ ப்ரவிருத்யுபலப்தேஶ் (சாந்தோ. ஆரணி. கம. கஉ. உஅ)

"விசுவாதிகர் மகர்ஷியாகிய உருத்திரர்" என்னுஞ் சுருதியினாலும், (உ. க. உஉ-ஆம்) சூத்திரத்தினாலும் பிரத்தியகான்மா எனப்படும் ஆன்மாவினின்று பதியாகிய பரப்பிரமம் வேறென்று நிரூபிக்கப்பட்டமையானும், (இரண்டாவது) சர்வஜ்ஞதையுடைய பிரமமாக ஆன்மா ஓர்போதும் ஆகாதலினாலும், ஆன்மாபிரமத்தைத் தனக்கு வேறாகக் கொண்டுதான் உபாசிக்கவேண்டுமென்று கொள்ளின்,

(சித்தாந்தம்) சிவன் எனப் பெயர்கொண்ட பரப்பிரமம் ஆன்மாவுக்கு மேலாய விடத்தும், உபாசகன் "நான் பிரமமாகின்றேன்" என்று அவரைத் தியானித்தல்வேண்டும். பூருவோபாசகர்களும்

ஶிவோ வாஹமஸ்மீதி ஜுஹுயாதேவமேவ ஹி | ஸுஹம மேவேதிவி

"பகவானாகிய தேவனே! நீயிதோ நான், நானே நீயிர்" என்று ஆன்மாவாகத் தியானித்தார்கள். உபாசகனுக்கு உபாசியர் வேறாயவழியும், பரப்பிரமம் தனது சுரூபத்தை அவர்க்குக் கொடுத்து அநுக்கிரகிக்கின்றது. "அது நீயாகின்றனை" என்றற்றொடக்கத்தவற்றால் அவர்களும் தமது சிஷ்யர்களுக்குப் (பிரமத்தைத்) தமது ஆன்மாவாகவே அறியுமாறு உபதேசிக்கின்றார். நிரதிசயசுகக்கான்மகமாகிய நிகிலபாசபந்தச்சேதமும், எல்லாற்றாலும் பரமானந்தமய நிஷ்களங்கமாகிய சிவத்துவம் அடைதலுமே முக்தியாகும். ஆன்மாவுக்குப் பசுத்துவநிவிர்த்தியின்றிச் சிவத்துவப் பிராப்தி இல்லை. பசுத்துவநிவிர்த்தியும் அந்தச் சிவத்துவபாவனையின்றி இல்லை. ஆகலின், நிரந்தரம் சிவோகம் எனக் கொள்ளும் பாவனைப் பிரவாகத்தினாலே பாசம் இளக, அதனால் பசுத்தன்மை நீங்கிய உபாசகன் சிவனேயாகின்றான். சமஸ்த தோஷகளங்கம் நீங்கிய நிரதிசயமங்களாஸ்பதமன்றோ சிவத்துவம். பரப்பிரமமும் அவ்வியல்பினதே. அவ்வப் பாவனையினாலே உபாசகனும் அவ்வாறேயாகின்றான். அதனாற்றான்,

ஶிவ வநகோ ஜெய ஸ்ரீவாகார ஸ்வ-ஶிநு தூஸிதரூ (அதர்வசிகை)

"பிற எல்லாம் விடுத்து இன்பஞ் செய்பவராகிய சிவன் ஒருவரே தியானிக்கற்பாலர்" என்றற்றொடக்கத்த சுருதிகளினுலே முழுட்சுவுக்குச் சிவபெருமானையொழிந்து பிறவெல்லாம் தியானயோக்கியமன்றென நிஷேதிக்கப்படுகின்றன. பிராம்மணதி தேகாபிமான முதலியவாய பசுவினியல்பு நீங்கி, நிரதிசயசொரூபானந்த சாட்சியாகிய சுவப்பிரகாச சிவரூபபராஹம்பாவத்தை அடைவதே முத்தி என்பது சமஸ்த சுருதிதாற்பரியமாதலின், பிரமபாவனை பாசனை உபாசகனுக்கு முத்திகரமாகின்றது. இல்லையேற் சம்சாரநிவிர்த்தி எங்ஙனமாம்!! (கூ)

(க) பிரதீகாதிகரணம்.

சூத்திரகாரர் பின்னர் விசேஷங் கூறுவாராயினர்.

நவ்ரதீகெ ந ஹி ஸஂ (சு. க. சு)

(சூஎக) குறியில் (ஆன்மாவாகத் தியானம்) இல்லை, உண்மையாய் (அங்கே வழிபடற்பாலர்) அவர் அல்லர்.

ஔநா ஹ்ரஷ்ஹதூ ஹாஸீத (சாந். கூ. கஅ. க)

"பிரமமாக மனசைத் (தியானிக்க)" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே மனமுதலியவற்றிற் பிரமத்தை உபாசிதீதல் காணப்படுகின்றது. அவற்றினும் பிரமம் ஆன்மாவாகத் தியானிக்கற்பாலதா? இன்றேல் வேறுய்த் தியானிக்கற்பாலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஔநாஹ்ரஷ்ஹதூ ஹாஸீத (சாந். கூ. கஅ. க)
சூதிதூ ஹ்ரஷ்ஹதூ ஹாஸீத

"மனசைப் பிரமமாகத் தியானிக்க; சூரியனைப் பிரமமாகத் தியானிக்க" என்றற்றொடக்கத்த சுருதிகளினுற் பெறப்பட்ட பிரதீகோபாசனைகளிலே பிரமதிருஷ்டியினுற் சம்ஸ்காரஞ் செய்யப்பட்ட மனமுதலியன உபாசிக்கற்பாலன எனப் பெறப்படுகின்றது. ஆகலின், பிரதீகமானது உபாசகனுலே பிரமமாகப் பாவிக்கப்படுங்கால் அதனை ஆன்மாவாக உபாசித்தலில் யாது விரோதம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது. பிரதீகங்கள் ஆன்மாவாகப் பாவிக்கப்படமாட்டா. பரப்பிரமம் உபாசிக்கப்படுவது அவைகளில் அன்று; ஆனுற் பிரமதிருஷ்டியினுலே மனமுதலிய உபாசிக்கற்பாலன. அங்கே மனிதர்களால் விசேடிக்கப்பட்ட பிரமமே உபாசிக்கற்பாலதாகக் கொண்டாலும், மனமுதலியவற்றுக்கும் பிரமகுணம் இல்லாமையால் விகாரமுறுதலின், இந்த விசேஷத்தையுடைய பிரமம் ஆன்மாவாகப் பாவிக்கப்படமாட்டாது. ஆயின்

சத்தியசங்கற்பமுதலிய (குணங்கள்) விசேடித்துள்ளபோது (பிரமமே ஆன்மாவாகப் பாவிக்கப்பட்டது); இன்றேல், ஆன்மாவும் விகாரமுறுதற்கு ஏதுவாகுமன்றே. ஆகலின், குறியிலே உபாசகர் (பரம) ஆன்மாவைத் தியானித்தல் கூடாது. ஈண்டுச் சிவபிரான் சாகூஷாத்தாக உபாசியராகாரன்றே. (சு)

(சு) பிரமதிருஷ்டியதிகரணம்.

ஸ்ரஹ்ருஷி ரூக்ஷ்ஷாக (சு. க. (பி)

(சூஎசு) (பிரதீகத்திற்) பிரமோபாசனை (கருதப்படுகின்றது); அதின் உற்கர்ஷத்திஞல்.

பிரதீகோபாசனவிஷயத்தில் மனம் சூரியன்முதலிய பிரதீகங்களைப் பிரமமாகத் தியானித்தல் வேண்டுமா? இன்றேற் பிரமத்தை மனமுதலிய வைகளாகப் பாவித்தல் வேண்டுமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பிரமத்தையே மனமுதலியவாகக் கருதிப் பிரமோபாசனை செய்யற்பாற்று. அவர் ஒருவரே பலதாதாவாக இருத்தலான் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும்.

விஜ்ஞாயிகோ ரூஜ்ஞ: (தைத். ஆரணி. க0. கஉ. உஅ)

"விசுவாதிகர் உருத்திரர்" என்றற்றொடக்கத்த கருதிகளிலே பிரமம் உற்கிருஷ்டம் எனப் பெறப்படுதலின், நிகிர்ஷ்டமாகிய மனமுதலியவைகளைப் பிரமமாகக் கோடற்பாற்று. உலகத்திலே நிகிர்ஷ்டனுகிய இராசசேவகனை இராசாவாகக்கருதி அவனை வழிபடுகின்றூர். பின், இராசாவைச் சேவகனுகக் கொண்டு எவரும் வழிபடுவாரல்லர். இதுதான் மிகவும் உசிதமானது. எது உற்கிருஷ்டமாகிய வஸ்துவாயிருக்கின்றதோ, அதனையே எல்லோரும் வழிபடுகின்றூர். ஆகலின், பரப்பிரமம் சர்வோற்கிருஷ்டமாயிருத்தலின், அது சர்வநமஸ்காரவிஷயமாய்ப் போந்தது. "இருதம் சத்தியம்" என்னும் மந்திரத்திற் கூறப்பட்ட விசேஷத்தோடியைந்த யாதொரு பிரமமுண்டோ, அந்த விசுவரூபர்க்கு நமஸ்காரம். நமஸ்காரம் அனேகத்தும் யாண்டும் மற்றை யோர்க்கில்லை. இன்னும் அந்தப் பிரமம் உற்கிருஷ்டமாயிருத்தலின், நமஸ்காரவிஷயலக்ஷணம் கூறப்பட்டது. எங்ஙனமெனின்,

யஷ்ஷ்ஹிரண்யகர்ப்பம் ஸமவர்தத அக்ரே பூதஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத்
ஸ தாதார ப்ருதிவீம் த்யாமுதேமாம் கஸ்மை தேவாய ஹவிஷா விதேம
(தைத். ஆரணி. உ. கசு. உரு)

"எவர் சிரசாயுள்ளாரோ, அவர்க்கு நமஸ்காரம்; தருமம் நெற்றி, பிரமா மேல் அலகு, யஞ்ஞம் கீழ் அலகு, விஷ்ணு இருதயம், சம்வற்சரம் பிரஜாநாம்"

என்றற்றொடக்கத்த தைத்திரீய சுருதியிற் சிம்சுமாரான்ம நிரூபணவிஷயத்தில், இருதயாதி ரூபங்களையுடைய விஷ்ணுவாதியர்க்கு வேறுகச் சர்வோற்கிருஷ்டதேவராகிய பரப்பிரமசிவனுர்க்கே பிரதானசிரோரூபத்துவம்

யவெஷ நமோஸ்து ருத்ராய (தைத். ஆரணி. உ. சசு. உசு)

"பிரசாயுள்ள யாதொருத்தருக்கு நமஸ்காரம்" என்னும் நமஸ்காரவிஷயமாயுள்ள இலக்ஷணத்தினுலேதான் பொருத்திக் கூறப்பட்டது. இதுதியினும்,

கவ ஹேதா நா சிவதிரவதி கவ ஹேதா நா ரெஷ்டா zவி|

(தைத். ஆரணி. உ. சசு. உசு)

"நீவிர் செத்துக்களுக்கெல்லாம் அதிபதியாகின்றீர்; நீவிர் செத்துக்களுக்கெல்லாம்சிரேஷ்டராகின்றீர்" என அவரே சமஸ்த செத்துக்களுக்கும் அதிபதித்தன்மையாயுஞ் சிரேட்டத்தன்மையாயும் இருத்தலைக் கூறி,

நமஸ்தே ருத்ரமன்யவ உதோத இஷவே நம: (தைத். ஆரணி. உ. சசு.உசு)

"உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!! எல்லா நமஸ்காரமும் உமக்கே" எனச் சமஸ்த செத்துக்களுக் தும் உற்கிருஷ்டமாயி நித்தலினுற் சித்திரித்த அகில நமஸ்கார பரியவசான எல்லை கூறப்பட்டது.

நமஸ்ஸ ஹந்த்ரே நமோ வ்ருக்ஷேப்ய: (யசு. வே. ச. நி. க. க)

"உருத்திரரே! உமது ஞானத்துக்கு நமஸ்காரம்" என்றற்றொடக்கத்தவைகளினுல் எல்லாவற்றுக்கும் மேலாயிருத்தலினுலன்றே மீட்டும் மீட்டும் நமஸ்காரங் குறிக்கப்பட்டது. செல்வமுதலியவற்றுற் சிறந்தலினையன்றே உலகத்தில் வணங்குகின்றார். சர்வ நமஸ்கார விஷயத்தினுற் சர்வோற்கிருஷ்டரும், உமாசகாயரும், விரூபாக்ஷரும், ஈசுவர சப்தவிஷயமாயுமுள்ளார் பரப்பிரம வஸ்துவாகிய சிவபிரானே. சர்வோற்கிருஷ்டரும் அனைவராலும் நமஸ்கரிக்கற்பாலருமாகிய அவர் வியாபித்திருத்தலினுல் மனம் ஆதித்தியன் முதலிய பிரதிகங்கள் அனைத்துக்கும் உபாசியத்துவம் எய்திற்று. ஆதலினன்றன்

ஸூஷ்ய ஸுவதிஜ்யேஷ்ட வோ நமோ நம: (யசு. வே. ச. நி. ச. உ)

"சுவானங்களுக்கும், சுவானபதிகளுக்கும் நமஸ்காரம், நமஸ்காரம்" என்றற்றொடக்கத்தவைகளிலே சுவானமுதலிய அத்தியந்த நிகிருஷ்ட செத்துக்களினும் சர்வோற்கிருஷ்டராகிய பிரமம் வியாபித்திருத்தலின் சுருதியானது நமஸ்காரம் கூறுகின்றது. ஆதலின், உற்கிருஷ்டசம்பந்தத்தினுலே நிகிருஷ்ட செத்துக்களுக்கும் உபசாரம் சொல்லக் காணப்படலான், விசுவாதிகமாகிய பிரமதிருஷ்டியினுலே மனமுதலியவற்றுக்கும் உபாசியத்துவம் சித்தித்தது. (நி)

---

* சிவபெருமானைத் திவ்ய சிம்சுமார விருக்ஷத்தின் சிரசென்று கூறும் இவ்வுண்மையை அரதத்தாசாரியரருளியயஸ்மை நம:(யவெஷ நமோ) என்னும் சதுர்வேத தாத்பரியசங்கிரகசுலோகத்தானும் அறிக.

(நு) ஆதித்தியாதிமத்தியதிகரணம்.

ஆதித்யாதி உதயஸ்தாபத உவலெதீ (சூ. க. சு)

(சூஎடு) அங்கத்திலே ஆதித்தியன் முதலாயினோர் திருஷ்டிகளும் (தியானிக்கப்படல்வேணடும்); பொருத்தமாதலின்.

மேல் அதிகரணத்திலே பிரமம் மேலாதலின், ஆதித்தியன் முதலாயினோர் உபாசனையிற் பிரமமாக உபாசிக்கற்பாலர் எனக் கூறப்பட்டது.

ய வனவாலெஸ்ன கவடதி கூஷ்ணீய ஸ்வாவஸீத (சாந். க. சு. க)

"இங்கே எரிகிறவனை உற்கிதமாகத் தியானிக்க" என்றற்றொடக்கத்தவை களிலே (விதிக்கப்பட்டவாறு) கர்மாங்கோபாசனைகளில், ஞாயிறு முதலியவற்றை உற்கிதமாகவா? அல்லது உற்கிதத்தை ஆதித்தியனாகவா? தியானிக்க வேண்டும் என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உற்கிதமுதலியவும் ஞாயிறுமுதலியவும் (யஞ்ஞ) கர்மாங்கங்களாகவும் பிரமரூபங்களாகவும் இருத்தலினால், இரண்டில் ஒன்றைக் கேனும் பிரமம் விதிக்கப்படவில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். ஆதித்தியன் முதலாயினோர் கன்மங்களில் ஆதிக்கற்பாலராய் உற்கிருஷ்ட மாயிருத்தலின், கர்மாங்கமாயுள்ள உற்கிதமுதலியன ஞாயிறு முதலியவாக மதிக்கற்பாலன. அங்ஙனம் ஆதித்தியன் முதலியவாக மதிக்கப்பட்ட உற்கிதாதி கன்மங்கள் பெருப்பயனை விளைப்பனவாம்.

யதெவவித்யயாகரோதிதமெவவீர்யவத்தரம் பவதி (சாந். க. க. கo)

"ஞானத்தோடு செய்யப்படும் எதுவும் அதிபலமாகும்" என்னுஞ் சுருதியினால், சுவயமாகச் செய்யப்படும்போது வீரியமாயுள்ளது ஞானத்தோடியைந்து செய்யப்படும்போது மகா வீரியமுடையதாயும் பெரும்பயனை விளைக்கக் கூடியதாயுமிருக்கும் என அறியப்படுகின்றது. இங்ஙனம் அவ்விரண்டும் பிரமமுதலிய விஷயத்திற் சமமாயிருப்பினும், உற்கிதமுதலியன யஞ்ஞகரு மங்களாக விதிக்கப்பட்டிருந்தாலும், அவ்வுற்கிதமுதலியன செய்யப்பட வேண்டியவாய பலசாதனமுடைமையானும், ஆதித்தியன் முதலாயினோர் அதற்கு மாறுபிருங்குபியல்பினராய், அங்ஙனம் பலசாதனமாகாமையானும் உற்கிதமுதலிய கர்மாங்கங்கள் ஆதித்தியன் முதலியோராக உபாசிக்கற்பாலனவாம். (சு)

(சூ) ஆசீநாதிகரணம்.

சூவீ நஷ்ஷஹாக (சூ. க. எ)

(சூஎசு) இருத்தல்; கூடுமாதலின்.

உபாசனை எப்படிச் செய்யவேண்டும் என்று விளக்கப்பட்டது. ஈண்டு உபாசனத்துக்கு ஆசன நியமம் உண்டா? இன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சுருதியானது ஒருவன் இருந்து உபாசித்தல் வேண்டும் என ஓரிடத்தும் நியமம் விதிக்காமையானும், மானச வியாபாரமாகிய உபாசனை எல்லா நிலையினும் பொருந்துமாதலானும், உபாசகனுக்கு ஆசன நியமம் இல்லை எனின்,

(சித்தாந்தம்) ஒருவன் இருந்துகொண்டே தியானித்தல் வேண்டும். எதனாலெனின், அவ்வியல்பினனுக்குத்தான் ஏகாக்கிரசித்தம்நேரும். ஆசன நியமச்சுருதியும் இருக்கின்றது. அது வருமாறு:—

விவிக்தெஷ்ட தே ஸுஷ்வாஸ நஷ்ஷ்ரூஹ்ரீ ஷ்ஷ்ரீவஶிரஷ்ஷ்ரீரஃ। கூர்ஷ்ஷ்ரீஷ்ஷ ஷ்ஷகெஷ்ரியாணி நிருஜ்ய ஹத்யா ஷ்ஷ்ரஹ்ரஹ்ம ப்ரணவ்। ஹ்ரத்ய ஷ்ணாஸீகஃ விரஜம் விமுஜ்ய விஜிஜ்ஞாஸெ விமுஹ்ம விஷொகஃ। கநஜ ஸேவுஜ ஶிஜ்ஞை ரூலெவ ஶிவஃ வ்ரஷாஜ ஶிஜ்ரதஃ ஷ்ரஹயொநிஷு। தஷாஷி ஶ்ருஷாஜவிஹீநஸெகஃ விஜுநிஜா நஜ்ரூலெவஶிஜ்ஷ்ய தே | உரோஷ ஹாயஃ வரஶெஷ்ரஃ ப்ரஜுஷ்ஞிஷொசநந்நீ ஸகணஃவ்ரஷாஜே। ஜ்ஞா கூவாஜுநிமுக்ஷுஜிஜுஜீதயொ நிஃஸஶஸ்ஷயாகூஜிஜுஶிஸ் வரஷ்தாக (கைவ)

"தனியிடத்திலே சுகாசனத்திருந்து, சுத்தனுகி நேரிய கழுத்துத்தலே சீர முடையனுய், வைதிக பாசுபதவிரதமுடையனுய், இந்திரியங்கள் அனைத்தையு மடக்கி அன்பினேடு தன் குருவை வணங்கி, இதயகமலத்தைத் துளைற்ற தாய்ச் சுத்தமாகக் கருதி, அதனடுவே தெளிவுடையராய், சோகமிலராய், அனந்தராய், வெளிப்படாதவராய், நினைத்தற்கரியராய், பிரசாந்தராய், அமிர்தராய், பிரமகாரணராய், முதனடுவீறிலராய், ஏகராய், வியாபியாய், சிதானந்தரூபியாய், நிஷ்களராய், அற்புதராய், உமாசகாயராய், பரமேசுவரராய், பிரபுவாய், மூக்கண்ணராய், நீலகண்டராய், பிரசன்னராயுள்ளாரைத் தியா

---

* ஆசன நியமம் கூறிய இச்சுத்திரத்துக்கு மூலமாயுள்ளது நீலகண்ட சிவாசாரியரால் இச்சுத்திர பாஷ்யத்திலே பிரமாணமாக உதகரிக்கப்பட்டதும், வெ பெருமானே உமாசகாயர் என்ற நேரே உணர்த்தியதுமாகிய கைவல்லிய சுருதியேயாம். இப்பரசுருதியை கிர்க்குணப் பிரமத்துக்குத் தாழ்ந்த சகுணப்பிரம சுருதி என்ற திரிவுபட உணர்ந்துகொண்ட சங்காசாரியர்க்கும், சைவசுருதி என்றேர்ந்து கொண்ட இராமாநுஜர்க்கும் உருசிக்காமையால் இக்கைவல்லிய சுருதி இந்த ஆசன நியமம் உணர்த்திய சுத்திரத்துக்குப் பிரமாணமாக அவ்விருவராலும் உதகரிக்கப்படாது தவிர்க்கப்பட்டது. இதனல் வியாசர் சுத்திரக்கருத்து நிர்புறமும் மாயாவாதாசாரியர் வைணவாசாரியர் கருத்து மற்றேர் புறமுமாக முரணுண்டு போனமை வெளிப்படை. அஃதன்றிக் கைவல்லியோபநிடதத்தை நவீநோபநிடதமென்பார் கூற்றும் போலியாமென மறுக்க.

னித்து, முனியானவன் பூதகாரணராய், சமஸ்த சாகூஷியாயிருப்பவரை இருளுக்குமேலே போயடைகின்றான்'' எனக் கைவல்லியோபநிடதம் கூறுகின்றது. ஆகலின், ஒருவர் இருந்தே பிரமத்தைத் தியானித்தல் வேண்டும். (எ)

ஔபாஸநாஅ (சு. க. அ)

(சூஎஎ) தியானத்திலும்.

ஔகூவா ஊநிமஉஉதி ஊதியொநிழ் (கைவ)

''உயிர்களுக்குக் காரணராயிருப்பவரைத் தியானித்துப் போயடைகின்றான்''

காரணஞ ஔய ஸலவெ-ஃயு-ஃவலவெஹஸ்வெ-ஃபாரஞ்ஊ ராகூஉஔஔ (அதர்வசிகை)

''சர்வசுவரிய சம்பன்னரும், சர்வேசுவரரும், சம்புவும், காரணருமாயுள்ளார் ஆகாயமத்தியிலே தியானிக்கற்பாலர்''

ஔபாஸ நிஉஃயநாஔவ (கைவ)

''தியானமாகிய மதனத்திலேதான்'' என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, பரமாத்மாவைச் சேதிக்கும் காரணமாய உபாசனை தியானரூபமாய் இருப்பதாகப் புலப்படலானும்,

ஔயதிவகொ ஔயதீவொஷிதஅஹயஞஃ

''கொக்குத் தியானிக்கின்றது; பந்துவானவன் இல்லாதோனையுற்றுச் சிந்திக்கின்றான்'' என்பவைகளிலே கூறுதல் போல, அங்கசேட்டையற்றவராய், உறுதியாகிய கட்பார்வை உற்றவராய், ஒரேவிஷயத்தில் மனஞ் செலுத்தினவராயுள்ளவர்களிடத்திலே தியானம் விவகரிக்கப்படுகின்றமையானும், மற்றேரியல்பினதாகிய அன்னிய சிந்தனைபினால் தடுக்கப்படாது தைல தாரை போலப் பிரிவுபடாத நினைவின் தொடர்ச்சிரூபமாகிய ஏகாக்கிரசித்தம் தியானத்தில் ஆவசியகம் இன்றியமையாததாலினாலும், தியானஞ் சித்திக்குமாறு ஆசனநியமம் ஆவசியகம் கவனிக்கற்பாற்று. (அ)

கூஉஅகூஊஹவெகூஏ (சு. க. கூ)

(சூஎஅ) சலியாமையையும் அபேக்ஷித்து.

ஔயதீவ வ்யபிவீ ஔயதீவாஹரிக்ஷிழ் (சாந். எ. சு. க)

''பிருதிவி தியானித்தல்போல, அந்தரிக்ஷம் தியானித்தல்போல'' என்றற்றொடக்கத்தவாக்கியங்களிலே பிருதிவியாதிகளின் சலியாமையை அபேக்ஷித்துத் (தியானம்) பிரயோகிக்கப்படுகின்றமையான், ஒருவர் இருந்தே தியானித்தல்வேண்டும். பூமிமுதலியபோலச் சலனமற்றிருப்பவனுக்கே தியான சந்ததி கூடும். (கூ)

ஊஷஞிஉ (சு. க. கo)

(சுஎக) வ்ஸ்மிருதியும் கூறுகின்றது.

ஸுவெள ஜெஸ்ரை வ்ரதிஷ்டாவ்ய ஸ்ரீராஸன ஸாத்மநஃ | நாத்யுச்ச நாதிநீசம் வெஸாஜிநகுஸோத்தரம் | தஸ்மிந்நாஸ்ய ஸ்திரம் கூர்ச்சம் யதவ்ஜித்தேந்த்ரியக்ரியம் | உவவிஸ்யாஸநே யுஞ்ஜ்யாத் யோகமாத்மவிஸுத்தயே (பகவற்கீதை. சு. கக, கஉ)

"பரிசுத்தமாகிய ஓர் ஸ்தானத்திலே அதிக உயரமல்லாததும், அதிக தாழ்வில்லாததும், தருப்பை, மான்றோல், வஸ்திரம் என்பவைகளின் ஒன்றினால் ஆக்கப்பட்டதுமாகிய தன் ஆசனத்தை ஸ்திரமாக்கி, அதில் உட்கார்ந்து, மனசை ஏகாக்கிரமாக்கி, சித்த இந்திரியங்களை அடக்கி, ஆன்மசுத்தியின் பொருட்டு யோகஞ் செய்க என உபாசகர்களுக்கு ஆசனநியமாதிகளை ஸ்மிருதி விதித்தலின், ஒருவர் இருந்துகொண்டே பிரமத்தை உபாசிப்பாராகளன்பது சித்திக்கின்றது. (கo)

(எ) யத்திரைகாக்கிராதிகரணம்.

யஜெத்ரகாமுகா கதராவிஸேஷாத் (சு. க. கக)

(சுஅo) எங்கே ஏகாக்கிரம் (இயலுமோ), அங்கே நியமனம் கூடும்; பேதமில்லாமையான்.

உபாசகனுக்கு ஆசனநியமம் கூறப்பட்டது. அதுபோலத் தேசமும் காலமும் நியமமா? அன்றா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அங்ஙனமோர் நியமம் இருத்தல்வேண்டும் என்பது யதார்த்தமே. எங்ஙனமெனின்,

வ்ரவ்யஜ்ஞ யக்ஷ்யாணாம் வ்ராவ்யாஹ்ருதி (தைத். ஆரணி. உ. கக. கடு)

"பிரம யஞ்ஞஞ் செய்யமுயன்றோன் கிழக்கு நோக்கி அங்ஙனஞ் செய்வானாக" எனத் திக்கு நியமமும்,

வ்ராஹீந வ்ரவணை வெவ்ரஹெவெந யஜேத|

"கிழக்குச் சரிந்த இடத்தில் வைசுவதேவரைக்கொண்டு யஞ்ஞஞ் செய்க" எனத்தேசநியமமும்,

கவ்ராஹ்ந விஜ்ஞ வித்வ்யஜ்ஞ வ்ராஜ்ஞி|

"பிண்டப்பிதிர் யஞ்ஞங்கொண்டு பிற்பகலில் யஞ்ஞஞ் செய்கின்றார்" எனக் காலநியமமும் இருத்தல் போல, ஈண்டும் உபாசனகன்மம் சுருதியில் விதிக்கப்பட்டமையின் பேதமில்லையாமெனின், திக்கு முதலிய நியமம் யுக்தமாம் எனின்,

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

(சித்தாந்தம்) உபாசனவிஷயத்திலே திக்குமுதலிய நியமம் இல்லை. ஏகாக்கிர சித்தமே உபாசனைக்கு முக்கியசாதனம். உண்மையில் அங்குத் திக்குமுதலிய அபேக்ஷை யில்லை. எங்கே இராகத்துவேஷ முதலிய குற்றங் களுக்கு ஏதுவில்லையோ, அங்கே மனசு ஏகாக்கிரமாய் இருக்கின்றது. அவ் வளவுதான் வேண்டியது;

விவிக்ஷுஜெ ஈ வஂவாவ நஷ்டீ (கைவ)

"தனியிடத்திலே சுகாசனஸ்தனய்" என்று சுருதி கூறுதலின். சிவசங்நிதி யிற் செய்தால் அனந்தமாம் என்றது ஜபமுதலிய விஷயம் பற்றியன்றித் தியானவிஷயம் பற்றி அன்று. ஏகாக்கிரம் முக்கியமாய் வாய்ப்பின் அங்குஞ் செய்யலாம். ஆகலின், ஏகாக்கிரசித்தத்தைமாத்திரம் சாதகஞ் செய்யும் தியானரூபமாயுள்ள உபாசனைக்குத் திக்குத் தேச கால நியமமில்லை. (கக)

(அ) ஆப்பிராயணதிகரணம்.

கூவ்ராயணாத்தத்ராவிஹிதவ்ஷ்டி (சு. க. கஉ)

(சூத்ரம்) (உபாசனை) மரணந்தம் வரையும் (அப்பியசித்தல் வேண்டும்); யாதினுலெனின், அங்கும் அது காணப்பட்டிருக்கின்றது.

மேலை அதிகரணத்திற் பிரமோபாசனையிலே திக்காதி நியமம் இல்லை என்று கூறப்பட்டது. ஈண்டுப் பின்னர் அதற்கு ஒரு முடிபு உண்டா? இல்லையா? என விசாரிக்குமிடத்து,

(பூருவபக்ஷம்) விருப்பமுள்ளவரையில் உபாசனை அநுஷ்டிக்கலாம், இன்றேல் நிறுத்திவிடலாம் எனின்,

(சித்தாந்தம்) மரணபரியந்தம் தினந்தோறும் உபாசனை செய்யற் பாற்று, ஒர்போதும் நிறுத்தற்பாற்றன்று;

கஹரஹவ-ா வாவ்விகு வ்ரு-ா மொகுதி (சாந். அ. கூ. கூ)

"இங்ஙனம் தினந்தோறும் தியானிப்பவன் சுவர்க்கத்தை அடைகின்றன்" எனவும்,

வவவ்வவ வத்-ய ந்யாவஹாய-ஷ் ஸ்ரவஜொகுஹிவஂவ்டி தெ|

(சாந். அ. கடி. க)

"சிவகால முழுமையும் இங்ஙனம் ஒழுகுகின்றவன் பிரமலோகத்தை அடைகின்றன்" எனவும் மரணந்தம் வரையில் உபாசனை உளதாகச் சுருதியிற் கூறப்படலான்; பிரமநிலைக்குச் செலுத்தும் பிரமபாவனை செய்துவருங்கால் அதனை இடையில் விட்டுவிடுதலாகாது. உபாசகர்கள் பிரமத்தைத் தமது ஆன்மாவாக இடையிடின்றித் தியானித்த பின்னரே பிரமரூபம் உபாசகன்

களிற் பிரகாசிக்கின்றது. ஆகலின், பிரமரூபம் பிரகாசிக்கும்பொருட்டு முற்றறிவும், வரம்பிலின்பமும், சுவயம்பிரகாசமும், தன்வயமும், பேரருளும், முடிவிலாற்றலுமுடைய பரப்பிரமம் இடையீடின்றிப் பாவிக்கற்பாற்று.

யாதெஸ்ரூ ஶிவா தநூரகோரயாவாகாஶீ | தயா நஸ்தநூவா ஶந்தமயா கிரிஶந்தாபிசாகஶீஹி (யசுர். வே. சு. நி. க. க)

"உருத்திரரே! காருண்ணியமும் பலைகரமுமாய்ப் பாவமில்லாதோரிடத்து விளங்குவதாயும் ஆனந்தரூபமாத்திரமாயுமுள்ள எந்தத் தனுவண்டோ, அந்தத் தனுவோடு மங்களரூபமாகக் கிரியிலிருந்து உமது பூரணப் பிரகாசத்தோடு எங்களுக்கு விளங்குவாராக" என்னும் உருத்திரத்தினுலே, பிரமசொரூபம் உபாசகரிடத்துப் பிரகாசிப்பதாகக் கேட்கப்படுகின்றது. அஃதாவது: அநாதிமல கன்மமாசனைகளால் ஏறுண்ட தேவாதி சரீராபிமான பிரவாக சித்தமாயும், ஆத்தியான்மிகாதிபேத பின்னமாயும், சகித்தற்காரியாயுமுள்ள சம்சாரதோஷமுடைய உபாசகர்களிலிருந்து உருக்கிவிடுதலினுல் உருத்திரர் எனப்படுகின்றார். பரப்பிரமசிவனுராகிய பரமேசுவரரே (சண்டு) உருத்திரர் என விளிக்கப்பட்டனர்.

ஹெ ரூத்ர=பரமேசுவரரே!

யாதெ தநூஃ ஶிவா=உமது சரீரம் எதுவோ, அது சிவை(அருள்); அஃதாவது அது நித்தியப்பிரசித்தமாய், பாவமிலாததாய், (அதனுல்) பரம விசுத்தமாய், பரமமங்களமயமாய், பரமமங்களத்தைக் கொடுப்பதென்பது. (அதனுல்) அது கோரமிலாது சிவத்துவத்தோடியைந்தது என்பது.

பாப என்றமையால் உபலக்ஷணிகொண்டு புண்ணியமும் கொள்ளப்பட்டது.| புண்ணியபாவங்களையெல்லாம் ஞானக்கினிகொண்டு தகிக்கும் முக்தான்மாக்கள் அபாபா எனப்படுவர்.

கவாவதாஶீநீ=இவர்களிடத்தில் (சிவபிரான்) விளங்குதலால் அபாபகாசிநீ எனப்படுவர்.

தயா ஶந்தயா=(வாகோ ஜ்யாவுண சூநஸூ) "அது பிரமத்தின் ஓர் ஆனந்தம்" என்றற்றொடக்கத்தசுருதியினுலே சித்தித்தவாறு, ஒப்பிறந்த ஆனந்தரூபமாகிய எந்த உமது தனு உண்டோ, அதனுல் எங்களுடைய சம்சாரகாரணமாகிய புண்ணியபாவத்தொகுதியை அகற்றி, எங்களிடத்திலே சுவப்பிரகாசத்தோடு சாசுவாத்காரமாக மிகுதியும் விளங்குக" என உபாசகர் வேண்டுகின்றனர்.

ஆகலின், உபாசகருடைய ஆன்மாவிற் பிரமசொரூபம் பிரகாசிப்பதால் அந்தப் பிரகாசத்துக்குக் காரணபூதமாகிய பிரமபாவனையானது சிவபரியந்தம் அப்பியசித்தல்வேண்டும், ஓர்காலும் அதனை இடையில் விச்சேதம் செய்தல் கூடாது. (கஉ)

(கூ) தததிகமாதிகரணம்.

தஷயிஸ் உத்தரவ-ஔவயொரபுஷவிநாபௌள தஷ்வபெஷ ஸாஷு (சூ. க. கஉ)

(சூஅஉ) இதன் பேற்றிலே, உத்தரபாவங்களின் பற்றுமையும், பூருவபாவங்களின் அழிவும் (எய்தும்); இது கூறப்பட்டிருத்தலின்.

மேலே அதிகரணத்திலே பாவங்கள் நீங்கிய உபாசகருடைய ஆன்மாவிலே மிகுதியும் பிரமசொரூபம் பிரகாசிப்பதென நியாயங்களோடு கூறப்பட்டது.

இப்போது உபாசகன் விஷயத்திற் பாவக்ஷயம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) உபாசகர்களுக்கும் (பாவ) போகமில்லாது பாபக்ஷயம் இல்லை;

நாஸ்தஸ்தி கூயிதெ கூஜ் கூலுகொழிஸ்திதாவி।

"கற்பகோடி காலஞ் சென்றாலும், துய்க்கப்படாது கன்மம் நசியாது" என்னும் வசன முண்மையான். போகத்தின்பொருட்டே சரீரமெய்துங்காற் பின்னரும் கன்மம் வருகின்றமையின், மோக்ஷத்துக்குக் காலம் வாராது எனின்,

(சித்தாந்தம்) உபாசகர் விஷயத்திற் சகல பாவகன்மமும் ஒழிந்து போம். என்னை! உபாசனை தொடங்கியபோதே அதின் சாமர்த்தியத்தினாலேதான் முன் செய்த பாவங்களின் விநாசமும், பின் செய்யும் பாவங்களிற் றொடக்குண்ணுமையும் எய்துகின்றன; எங்ஙனமெனின்,

தத்யெஷீகா தஸ்மஜ்ஜிளள வெராதம வரஷ்யெயெதெவம ஹாஸ்ய ஸவெஸ் வாவாந்ஸ் வரஷ்யெஷ (சாந். நி. உச. கூ)

*"பஞ்ச அக்கினியிலிடப்பட்டு எரிந்துபோதல் போல, அவன் பாவங்க

யதாவஹ்ரு ஜ்ஸ் ஹாஜ்வ்ஷ்ஸ்ஷ ஜ்ரஸ்ஹிஜ்ஹெஷு।
தயாஸ்ஸாஸ்ஸாஸ்ஹஜ்கூஜ் ஜ்ரா நாஜ்ஹிஜ்ஹெதக்ஷணாஷு।
வஷவதரயயாதொயெஸ் ஸவ்வெஸ்வி நஜ்வ்யெதெ।
ஸ்ஸாதிவிஷயாணஹொஹிஸ்ஸ ஜ்ஜீ ஜ்ரா நீநஜ்வ்யெதெ।

"எங்ஙனம் பேரொளியுடைய அக்கினியானது உலர்ந்த விறகையும் உலராவிறகையும் தன்னிற்கின்றதோ, அங்ஙனம் ஞானாக்கினியானது புண்ணியபாவங்களே கூடிணப் போலே தன்னிலே தகித்துவிடுகின்றது" எனவும், எங்ஙனம் தாமரையிலையானது தனக்கு ஆதாரமாய் நிலைத்த ஜலங்களினுற்றொடக்குண்ணவில்லையோ, அங்ஙனம் ஞானி சப்தாதிவிஷயங்களினுற்றொடக்குண்ணன்" எனவும் சிவதருமோத்தராகமம் சாந்தோக்

ளெல்லாம் எரிந்துபோம்''

யதாவஷுவமாஸ சுவொந ஸ்ரிஷ்யுஹவனவேவ விதிவாவ உஸ்நஸ்ரிஷ்யுதெ (சாந். ச. கச. ங)

'தாமரையிலையில் நீர் ஒட்டாதது போல, அதனை அறிந்தவரிடத்துப் பாவ கர்மம் பற்றாது'' என்று சுருதி கூறுதலின். ஆகலின், முற்பாவங்களின் நாசமும் பிற்பாவங்களின் தொடக்குறுமையும் எய்துகின்றனவே. பாவப்பயன் துய்க்கப்படாது தொலையாதென்பது அஞ்ஞானியின் விஷயமாதலின், சண்டு விரோதமுறாது. (கங)

(கo) இதராச்சிலேஷாதிகரணம்.

உதரஷ்யாவெவுவேவமஸ்லேஷ: வாதெதர (சூ. க. கச)

(சூஅங) மற்றதற்கும் அவ்வாறே பற்றில்லை; ஆனால் மரணத்தில்.

வித்துவானுக்குப் பாவ லேசம் இல்லை என நிரூபிக்கப்பட்டது. சண்டு அதற்கு விரோதமாகிய புண்ணியலேசம் உளதா? இலதா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) ஞானவிரோதமாகிய பாவத்துக்கு கூஷயமிருத்தல் யுக்தம். வித்தைக்கு அங்கமாக உடன் செல்லவேண்டுதலின் புண்ணியத்துக் கன்றும் எனின்,

(சித்தாந்தம்) நிரூபிக்கப்படுகின்றது. வித்துவானுடைய புண்ணியமும் முத்திக்கு விரோதமாய், விரும்பாத பலத்தையுடைமையால் (அவணைப்)பற்றாது நாசமுறும். வித்தைக்கு அநுகுணமாய ஆரோக்கிய முதலிய பயனுகிய புண்ணியம் மரணகாலத்தில் ஒழிந்துபோம். வித்தைக்கு அங்கமாகிய கன்மமோ எனின், காமிய பலாதி சம்பந்தமில்லாமையாற் பற்றாது. ஆகலின், வித்துவான் விஷயத்திற் புண்ணிய லேசமும் இல்லை என நிர்ணயிக்கப்பட்டது. (கச)

(கக) அநாரப்தகார்யாதிகரணம்.

அநாரப்தகார்யஸ்ஏவதது வரிவர் தஉவயோ (சூ. க. கஙி)

(சூஅச) ஆனற் பயன்கள் கொடுக்க ஆரம்பிக்காத முந்

தியசருதிப்பொருட்கையெய்து கூறிற்று.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
ஞமன் கெடக்கெடு நோய்.

(திருக்குறள். கூஉo)

திய புண்ணியபாவங்கள் மாத்திரம்; அது எல்லையாகக் குறிக்கப்பட்டமையின்.

மேலே அதிகரணத்திலே, வித்துவானுக்கு உத்தர பூருவ புண்ணிய பாவகளின் தொடக்குறுமையும் நாசமும் நிரூபிக்கப்பட்டன.

ஈண்டு அந்தப் பிராரப்தகன்ம காரியங்களுக்கும் நாசமுண்டா? இல்லையா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஸவை-வாவூா நஃ வ்ரஹ்மியஜ்ஞ

"பாவமெலாம் ஒழிகின்றன" எனச் சுருதியானது பேதமின்றிச் (சகலபாவங்களையும்) கூறினமையின், வித்தியாமார்க்கத்திற் பிரவேசித்தற்கு முன்னர்ச் செய்யப்பட்ட புண்ணியபாவங்களும் நாசமுறுமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். வித்தையிலே பிரவேசித்தற்கு முன்னர்ச் செய்யப்பட்ட பலத்தைக் கொடுக்கப் பிரவிருத்திக்கும் புண்ணியபாவங்களுக்கு விநாசம் எய்தும்.

தஸ்ய தாவதெவ விளம் யாவன்ன விமோக்ஷ்யே ஸம்பத்ஸ்யே।
(சாந். கூ. கச. உ)

"சரீரத்திருந்து விடுபடாதகாலம்வரையும் அவனுக்குத் தாமசம், பின்னர்ப் பூரணனுவன்" எனச் சுருதியானது சரீரபதனத்தை எல்லையாக வைத்துக் கூறலின், பேற்றைக் கொடுக்க முயன்ற பிராரப்த புண்ணிய பாவத்துக்கு நாசமில்லை. (கடு)

(கஉ) அக்கினிகோத்திராதிகரணம்.

ஈழீஹொத்ராதி து தத்காயுர்-பாவித்வாத் தத்தோ-நாஸ (சூ. க. ககூ)

(சூத்) ஆயின் அக்கினி கோத்திரமுதலியன அது அடைதற்கே காரணமாகின்றன; சுருதியிலே காணப்படுகின்றமையான்.

மேலே அதிகரணத்திலே வித்துவானுக்குப் புண்ணியபாவங்கள் பற்றுமையும் (அவை) நாசமுறுதலும் நிரூபிக்கப்பட்டன. மரணபரியந்தம் உபாசனை நிலைக்கவேண்டும் எனவுங் கூறப்பட்டது.

ஆயின் இப்போது அக்கினிகோத்திரமுதலியவும் மரணபரியந்தம் நிலைத்தல் வேண்டுமா? இன்றேல் மத்தியில் விடப்படல்வேண்டுமா? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) அக்கினிகோத்திரமுதலியன மரணபரியந்தம் அதுட்

டிக்கவேண்டியதில்லை; செய்தானும் அநாசமுறுதலான். அப்பிரயோசனமாகிய விஷயத்தில் எவனுக்கும் மனசு பிரவிருத்திக்காதெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். அக்கினிகோத்திரமுதலியன வித்தைக்கு அநுகூலமாயிருத்தலின், மரணபரியந்தம் அநுட்டிக்கத்தக்கது. அவ்வாறே சுருதியும்

தமேதம் வேதானு வசனேன ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேன தானேன தபஸாநாசகேன (பிரு. சு. ச. உஉ)

"பிராமணர் வேதாநுவசனத்தினாலும், யஞ்ஞத்தினாலும், தானத்தினாலும், தபசினாலும், உபவாசத்தினாலும் பிரமத்தை அறிய நாடுகின்றனர்" என்று கூறுகின்றது. சண்டி வேதாநுவசனம் என்றது வேதாப்பியாசத்தின் மேற்று. (அஃதாவது) சிவபெருமானை அடைதற்குச் சாதனமாகிய பரமஞான ஹேதுவாயுள்ள அத்திபான்ம வாதங்களாகிய வேதமந்திரங்களின் ஜப ஆவிருத்தியேயாம்.

கய ஹைநம் ப்ரஹ்மசாரிண ஊசுஃ। ஹமவந் கிம் ஜைஷ்டாய தக்ஷம் ப்ரயச்ஹதி। ஸ ஹோவாச யாஜ்ஞவல்க்யஃ ஸாதாரணீயமேவைதத்। வாகாதி ஹவா கஷ்டாதவ்ய நாதியேயாதி வாவைதஹ்ஸ்வா கஷ்டாதா ஹவதி (ஜாபாலம்)

"பின்னர்ப் பிரமசாரிகள் அவரை நோக்கி, பகவானே! அமிர்தத்துவத்தை அடைதற்கு எம்மந்திரங்கள் சொல்லற்பாலன என்று கேட்ப, யாஞ்ஞவற்கியர் சதருத்திரியத்தினாலே என்றும், இவை அமிர்தத்தின் பெயர்களாம் என்றும், அவற்றால் ஒருவன் அமிர்த்துவத்தை அடைகின்றான்" என்றும் கூறினராக ஜாபாலோபநிடதத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

யோ ஹ வை ப்ரஹ்மணோ மஹதோ மேதம் ஸ்ரீவஸ்தம் ஹவதி। ஸவாயவ் வஸ்தம் ஹவதி। ஸவஸ்ரவா நாஸ வஸ்தம் ஹவதி। ஸ ப்ரஹ்மஹதாயாஸ் வஸ்தம் ஹவதி। கூரியாஸ்ரீ வஸ்வஸ்தா வஸ்ரா ஆஜவெஹநேந ஜாநாவெந்தி ஸ்வாஸ்ரணவ நாஸநழி (கைவ்)

"நினைந்தோறும் பிராமணன் சதருத்திரியத்தைப் படிக்கின்றனர்; அக்கினியினாலே சுத்தமாகின்றனர்; வாயுவினாலே சுத்தமாகின்றனர்; சுராபானத்தினின்று நீங்கிச் சுத்தனாகின்றனர்; பிரமகத்தியினின்று சுத்தனாகின்றனர்; எவன் அத்தியாசிரமியாய்ப் (பாசுபதவிரதனாய்) எப்போதுமேனும், ஓர் முறையேனும் ஒருவன் (அதனை) செபிக்க; இதனால் ஞானத்தை அடைகின்றன்; சம்சாரசாகரம் ஒழிந்துபோகின்றது" எனக் கைவல்லியோபநிடதத்திற் கூறப்படுகின்றது. (எண்டி) பிரமத்தைப் போதிக்கும் சதருத்திரியமந்திரங்

கனே அப்பியசித்தலாற் சம்சாரத்தை நாச்மாக்கும் பரமஞானம் எய்துகின்றது. ஞானத்துக்கு விரோதமாகிய பாவத்தின் கூடியமும் எய்துகின்றதெனப் புலப்படுகின்றது.

வாகாகிஹவா கூடுகவஷ நாகியையாகி (ஜாபாலம்)

"இவை அமிர்தத்தின் பெயர்கள்" என்றமையால் அமிர்தரும், அநாதிமுத்தருமாகிய சிவனுரது நாமங்களே அடக்கிய சதருத்திரீயசெபத்தினுல், சகலபாவங்களும் கூடியமாகும்என்று பிரதிபாதிக்கப்படுகின்றமையின், பரமசிவனுரதுசிவமுதலிய நாமதேயங்களின் அப்பியாசமும் வித்தியாவிரோதியாகிய சகல பாவகூடிய ஹேதுவெனப் பெறப்படுகின்றது. அங்ஙனம் முண்டகோபநிடதமும்,

கவிவா ய ஜூணாஉஷ்ணிவ உதி வாசய வஎஷ்டி நவஹ வஎவஎஷ்டி நவஹ வஎவஎஷ்டி நவஹ ஊஜ்ஜீத (முண். கூ. உ. கூ)

*"சண்டாளனுயிருப்பினும் சிவனன்று சொல்வானேல், ஒருவர் அவனுடு பேசுக, அவனுடு வசிக்க, அவனுடிருந்துண்க" என்று கூறுகின்றது. ஈண்டுப் பிரமத்தை உணர்த்தும் சிவசப்தத்தை உச்சாரணஞ் செய்தன்மாத்திரத்தினுலே, அத்தியந்த அசுத்தனுகிய பாதகனும் பரமசுத்தனுகின்றன் எனப் பெறப்படுகின்றது. பின்னரும் பிப்பிலாதரிடத்தில்,

யொ zயவஃஶிரஸ ஹ்ராஹுணொநிகூ உபிதெ।

"அதர்வசிரசைப் பிராம்மணன் தினந்தோறும் படிக்கின்றன்" என்றுதொடங்கி, அப்படிப்படிப்பவனுக்குச் சகல பாவமும் கூடியமாகும் என்று கூறி,

வகூஜ்ஜூவா ஸுஹிஃ வஎதஃ கஃஶ்ணொ ஹவதி। த்விதீய ஜூவா தாணவகூரொநாதி। கூதீய ஜூவா தெவலொவாஹுவிரதி।
(அதர்வசிரசு)

"ஒருமுறை செபித்தாற் சுசியுடையனுயும், சுத்தனுயும், கன்மத்துக்கு யோக்கியனுயுமாகின்றன்; இருமுறை செபித்தாற் காணபத்தியத்தை அடைகின்றன்; மும்முறை செபித்தாற் சிவபிராணைப் போய் அடைகின்றன்" என மோக்ஷபலமும் பெறப்படுகின்றது.

கூதாநிரணிஃ கூகுவா வரணவஞ்சாதாராணிழ (கைவ)

"ஆன்மாவை அரணியாகவும், பிரணவத்தைமேல் அரணியாகவுங் கொண்டு" என்று கூறிய சுருதியாற் பிரணவாதியப்பியாசம் பாசத்தைச் சேதிக்கும்எது

---

*இந்தச் சுருதி சங்கராசாரியர் காலத்துக்குப் பிற்பட்டிலதாய், அச்சங்கராசாரியர் காலத்துக்கு முற்பட்டிருந்த நீலகண்டசிவாசாரியர் காலத்துனதாய்ப் போந்ததென்பதற்கு இச்சைவபாடியத்த (உக-ஆம்) பக்கத்து உதகரிக்கப்பட்ட வாசிஷ்டலக்ஷ்மீகரப்பிரக்ணமே போதியசான்றும்.

வாதல் கூறப்படுகின்றது. இங்ஙனம் பிறவிடத்திலும் காணப்படுகின்றது. ஆகலின், சிவசம்பந்தமாகிய வேதமந்திரங்கள் பாவகூடியம் செய்தல்வாயிலாகப் பரமஞானத்துக்கு ஹேதுவாகி மோகூடிசாதனமாயிருத்தலினால், வித்துவானும் அந்த வேதாப்பியாசத்தைச் சிவபரியந்தம் அப்பியசிக்க. இங்ஙனஞ் சிவருமானுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பலங்களையுடையனவாய அக்கினிகோத்திராதி யஞ்ஞங்களும் அவரால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு அவரை ஆராதிக்கும் ரூபமுடைமையான் அவை அப்பியசிக்கப்படல் வேண்டும். இங்ஙனம் தானதிகளும் ஆவசியகம் செயற்பாலன. ஆகலின், வித்துவானும் உபாசனையைப் பூரணமாக்குமாறு அக்கினிகோத்திரமுதலியவற்றை அநுட்டிக்க வேண்டும். ஈசுரோபாசனையானது கன்ம தப செப தியான ஞானவடிவாய் உள்ளது. அவற்றுள்ளே கன்மம் அக்கினிகோத்திரம்; தபசு நியமம், அல்லது சரீரத்தை வாட்டுதல்; செபம் மேலே கூறப்பட்ட பிரணவாதி அப்பியாசம்; இவை பாவத்தை நீக்குதல் வாயிலாக மோகூடிகாரணமாம். ஞான தியானமும் பிரமசொரூபத்தை நேரே அடைதற்கு ஹேதுவாம். ஆகலின், யாவும் அதஷ்டிக்க வேண்டும்.

(ஆகூடேபம்) அக்கினிகோத்திராதி கன்மங்கள் ஞானோற்பத்தியின் பொருட்டே யாமாயின், இவைபொழிந்த முன்செய்யப்பட்ட நற்கருமங்கள் வித்தையிற்றொடங்கும்போது ஒழியும்; அங்ஙனமாயின், (மரணகாலத்திலே) வித்துவானுடைய மித்திரர் எந்த நற்கருமங்களை அடைவர் என, (கசு)

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுவாராயினர்.

சுதாரூபவிஹிதேஷ்டாதிஷ்வபி (சூ. க. கள)

(சூ அசு) இவற்றைப் பார்க்கினும் வேறு (கன்மங்களும் (உண்டு; அவற்றின்) இருவகையைப்பற்றிச் சிலர் (கூறுவர்) அன்றே.

தஸ்ய வஹ்ய ஏவ ஸ்யாத் க்ரியாதிஷ்டஸ்ய வாவக்ரியாத்,

"அவன் சிஷ்டிதர் நற்கன்மங்களையும் அவன் சத்துருக்கள் தீக்கன்மங்களையும்" அடைகின்றார் என்பது சாட்டியாயன சாகையுடையார் வசனம். ஞானத்தை உண்டாக்கும் அக்கினிகோத்திரமுதலியவற்றுக்கு அன்னியமாயும், பிரபல கன்மங்களினாலே தடைப்படுத்தப்படுகின்ற பயன்களையுடையனவாயும், சகாயமாகிய ஆரோக்கியம் சித்தசுத்திமுதலியவற்றைப் பிறப்பித்தற்கு இயைந்து ஞானத்துக்கு வாய்ந்த பயன்களையுடையனவாயும், அதனால் ஞானத்திலுஞ் சிறிது எப்தாதனவாயுமுள்ள பூருவோத்தர இருவகைக் கன்மங்களை ஈண்டுக் கூறப்பட்ட விஷயம். (கள)

யதேவ வித்யயேதி (சூ. க. கஅ)

(சூ அள) வித்தையோடு ஏதுதான் (செய்யப்படுகின்றது)

என்று (சொல்லப்படுகின்ற) தன்றே.

யஷ்வ விதுயா கரோதி (சாந். க. க. கo)

"ஞானத்தோடு செய்யப்படுவதே பலமுடைத்து" என்னுஞ் சுருதியிலே, கன்மபலத்தின் தடையை நீக்குவதே உற்கிதவித்தையின் நோக்கமெனக் கூறப்பட்டமையின், பிரபலமாகிய மற்றோர்கன்மம் குறிக்கப்பட்ட கன்மத் தின்பயனைத் தடுக்கலாம், இன்றேல் அப்பயனுக்குச் சகாயமாகலாம். ஆக லின், வித்தைக்குச் சகாயமாகிய கன்மபலப்பிரதிபந்தத்தை நீக்கும்பொருட் டே அக்கினிகோத்திரமுதலியன அநுட்டிக்கப்படல் வேண்டுமென்பது (சூத் திரத்தின்) கருத்து. (கஅ)

(கக) இதரசூத்பணைதிகரணம்.

ஹொஹுநத்வித்தரே கூஷவயிஷ்யாயஷ்வேஷித (சு. க. ககூ)

(சுஅஅ) போகத்தினாலே பிறவற்றைப் போக்கிய பின் னர் அவன் உய்கின்றான்.

ஈண்டு உபாசனையுடையவர்களால், அதிகாரபதத்தில் உள்ளவர் களுக்கு அவர்கள் பதங்களுக்கு வேறாக மோகூபலம் உண்டா? இல்லையா? என்பது சந்தேகம்.

(பூருவபகூம்) பிராரப்தபோகத்தின் பொருட்டு அநேக சென்மம் உன்னெனக்கொள்ளின், ஓர் சென்மத்திலே அடைந்த வித்தை அடுத்த சென்மத்திலே அழிந்துபோகின்றது. அதனால் யாதொருகன்மஞ் செய்யப் படுகின்றதோ, அதுவும் பலத்தை அநுபவித்தற்கு ஏதுவாகின்றது. ஆக லின், சென்மபரம்பரை இருத்தலால் அவர்களுக்கு முத்தியில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். பிராரப்தகன்மம் தன்பயனை அடையுமாறு செலுத்துகின்றது. அவை முற்சொனனத்தீட்டிய வித்தியாலோபத்துக்கு ஏது வாயிரா. ஆகலின், அவர்க்கு முத்தியே; சென்மபரம்பராகாரணமின்மையின். சுழுப்திகாலத்திலே மறைப்புளதாயினும் போல சுழுப்தி மறைப்பைப்போ லிருக்கும் சனனமரணமறைப்பும் அவர்கள் வித்தியாலோபத்துக்கு ஏதுவா யில்லை. (ககூ)

நான்காம் அத்தியாயத்து

இரண்டாம் பாதம்.

(க) வாக்ரம்பத்தியதிகரணம்.

வாஜ்நஸி ஹார்தாஅஸ்யாஅ (சா. உ. க)
கூத வஸவ்ய வஸ்ரூணாந் (சா. உ. உ)

(சஅக) வாக்குமனசிலே (இலயமாகின்றது); அநுபவமும் சுருதியும் (உண்மையின்).

(சகo) அதினாலேதான் எல்லாம் (மனசைத்) தொடர்கின்றன.

முந்திய பாதத்திலே உபாசகனுடைய உபாசனவியவஸ்தைமுதலாயின கூறப்பட்டன. இந்தப் பாதத்திலே அவன் சரீரத்தை விடுத்து உற்கிராந்தி செய்வதைப் (புறப்படுவதைக்) குறித்து நிரூபிக்கப்படுகின்றது.

கஸ்ய வைஷ்வாநரஸ்ய புரயதோ வாஜ்நஸி வாகப்யேதி மநஃ ப்ராணே ப்ராணஸ்தேஜஸி தேஜஃ பராஸ்யாo தெவதாயாம்। (சாந். சு. அ. சு)

"சௌமிய, இந்த உற்கிராந்தி செய்பவனுடைய வாக்கு மனசிலும், மனசு பிராணனிலும், பிராணன் அக்கினியிலும், அக்கினி பரதேவதையிலும் இலயமாகின்றன" என்னும் சுருதியிலே, உற்கிராந்தி செய்பவனுடைய வாக்காதிகள் மனசில் இலயமாகின்றன எனப் பெறப்படுகின்றது. இது நியாயமா? அன்று? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) காரியம் உபாதானத்தில் இலயமாகின்றதன்றே; கடமுதலாயின மண்ணிலே இலயமாதல் காணப்படலான். வாக்காதிகளுக்குப் பிரமம் உபாதானம்; மனம் அன்று. ஆகலின், பிரமத்திலேதான் அவை இலயமாதல் யுக்தமாம் எனின்,

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

கஸ்ய வைஷ்வாநரஸ்ய புரயதோ வாஜ்நஸிவாகப்யேதி।
(சாந். சு. அ. சு)

"சௌமிய! இந்த உற்கிராந்தி செய்பவனுடைய வாக்கு மனசிலே இலயமாகின்றது"

உஜ்ஜயெ ஸம்நஸி வாகப்யேதாயேதி (பிர. கூ. சு)

'மனசிலே இலயமுறும் இந்திரியங்களோடு'' என்னும் சுருதிபற்றி, உற்கிராந்தியில் மனசுக்கு முன்னே வாக்குமுதலியவைகள் ஒய்ந்துபோதல்காணப்படுகின்றமையானும், முதற்கண்ணே வாக்கு மனசிலே இலயமாகின்றது. பின் எல்லா இந்திரியங்களும் மனசிலே இலயமாகின்றன. (காரியம்) உபாதானத்தில் இலயமாம் என்றதுயுக்தம் அன்று. (காரியத்தின்) சொரூபலயத்துக்குத்தான் உபாதானம் அபேக்ஷிக்கப்படுவது. வாக்காதிகள் மனசில் ஒடுங்குதல் சொரூபலயம் எனப்படாது; பின் அது விருத்திலயம் (என்று கூறப்படும்); ஜலமத்தியிலே எறியப்பட்ட எரிகரியின் பிரகாசமுதலாயின விருத்தி லயமாதல் போல, உபாதானமல்லாதிருப்பினும் மனசில் எய்தும் வாக்காதிகளின் லயத்தை விருத்திலயம் எனக் கூறல் யுக்தமே; விருத்தியுடைய வாக்காதிகள் (மேலே கூறிய) இலய சுருதியினால் இலயமடைதல் விருத்திலயம் எனப்படும்; விருத்திகளுக்கும் அந்த விருத்தியையுடைய பொருள்களுக்கும் பேதமிலாது அங்கே கூறினமை உபசாரத்தினால். (க, உ)

(உ) மநஸ்சம்பத்தியதிகரணம்.

தந்நோ வ்ராண உதயாகு (சா. உ. சூ)

(சகூக) அந்த மனசு பிராணனில், உத்தரவாக்கியத்தினால்.

மநோ வ்ராணெ (சாந். சு. அ. சு)

"மனம் பிராணனிலே (ஒடுங்குகின்றது)" என்றமையான், வாக்குமுதலிய சர்வேந்திரியங்களோடு கூடிய மனசு பிராணனிலே லயமாகின்றது என்று கேட்கப்படுகின்றது. அந்த லயம் எவ்வியல்பினதென்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) வாக்குமுதலியன உபாதானமல்லாத மனசிலே விருத்திலயம் எய்துக. மனசு பிராணனிற் சொரூபலயமே; பிராணன் மனசுக்கு உபாதானமாயிருத்தலின்.

கதமேயம் ஸோம்ய மநோ ஹவையம் வ்ராணம் (சாந். சு. நி. ச)

"சௌமிய! மனம் அன்னமயமே; பிராணன் அப்புமயம்" என்னும் சுருதிபற்றி, அன்னமயமாதலினற் பிருதிவியினலாயது மனசு; அப்புமயமாதலினற் பிராணன் மனசுக்கு உபாதானம்; (அதனற்) சொரூபலயம்பற்றி விரோதமில்லையாம் எனின்,

(சித்தாந்தம்) முன்போல (வாக்இந்திரிய விஷயத்திற்போல); மனசும் பிராணனில் விருத்திலயமே;

மநோ வ்ராணெ (சாந். சு. அ. சு)

"மனசு பிராணனில் (ஒடுங்குகின்றது)" என உத்தரவாக்கியமுண்மையான்,

(மனசு பிராணனிலே) சொரூபலயமன்று; பிராணன் மனசுக்கு முக்கியோபாதானமல்லாமைபற்றி அம்மனசு அங்கிருந்து பிறக்காமையான். ஆகலின், பிராணனிலே மனசு விருத்திலயமாயிருப்பதே நியாயம். (கூ)

(கூ) பிராணசம்பத்தியதிகரணம்.

வொ zஒ்ஷெண தஉ்வறோதிஹ்ஹீ (சூ. உ. சூ)

(சகூஉ) அது (பிராணன்) அதிபனோடு (சேர்ந்திருக்கின்றது), அதனோடு இசைதன் முதலியன (கூறப்படலான்).

மேலே சர்வேந்திரியங்களோடு கூடிய மனசு பிராணனிலே இலயம் அடைகின்றதென்று கூறப்பட்டது. இப்போது பிராணன் எங்கே இலயமாகின்றதென்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

வ்ராணவ்ஹ்ஜவி (சாந். சு. அ. சு)

"பிராணன் தேயுவிலே (ஒடுங்குகின்றது)" என்னுஞ் சுருதியினற் பிராணன் தேயுவிலே ஒடுங்குகின்றதெனின்,

(நிருக) சங்கற்பமாத்திரத்தினாலேதான் (அவன் போகம் அனைத்தையும் துய்க்கின்றான்; சுருதி அங்ஙனம் கூறுகின்றமையின்.

சுவப்பிரகாசனுகிய முக்தனுக்குச் சத்திய சங்கற்பத்துவாதி குணங்கள் கூறப்பட்டன.

அது பொருத்தமா? அன்று என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) முக்தனுக்குப் போக்கியவஸ்துவிஷயத்திலே சங்கற்பமாத்திரம் காரணமன்று; பாகியகாரணத்தை அபேட்சியாது அது சித்தியாதாமெனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சங்கற்பமாத்திரத்தினாலே (முக்தனுக்குச்) சகல போக்கிய வஸ்துக்களும் சித்தியாகின்றன. அங்ஙனம்,

யஸ்ய யாதிருகாகாரோ ஸ்வப்னே ஸங்கல்பா தெவாஸ்ய வாதாஸ்தாத்ருஷ்ஷி (சாந். அ. உ. க)

"பிதிர்லோகத்தை விரும்பினால் அவனது சங்கற்பமாத்திரத்தினாலே பிதிர்கள் (அவனை) எதிர்கொள்ளுமாறு எழுந்திருக்கின்றனர்" என்றற்றொடக்கத்த சுருதிகளும் கூறுகின்றன. ஆகலின், சகல போக்கியவஸ்துவைச் சம்பாதித்தற்குச் சங்கற்பமாத்திரமே ஏதுவாயிருக்கின்றது. அதுபற்றிப் புறக்கரணம் யாதும் வேண்டியதில்லை. (அ)

ஆத ஏவ சாநந்யாதிபதிஃ (சா. சா. க)

(நிருஉ) ஆதலினாலும் அவனுக்கு அதிபதியாகமற்றொருவன் இல்லை.

எந்த நியாயத்தினும் பிரமசொரூபத்தை அடைந்து இவன் அபகதபாப்மத்துவாதி குணங்களையுடையனாயிருக்கின்றானே, அந்த நியாயத்தினால் மற்றோர் அதிபதி தனக்கின்றிச் சுவதந்திரனுய் இருக்கின்றன். ஓர்காலும் கன்மவசப்பட்டவனல்லன்; கன்மங்கள் கட்டமைடைதலின். அவனுக்குமே பெருமான் நியாமகரல்லர்; பிரவாகநித்தமாயுள்ள அவருடைய ஆஜ்ஞாரூப

விநிவேஷதங்கள் கூறும் சாஸ்திரவழியைக் கடந்திருத்தலின். எங்ஙனமெனின், அவன் பசத்துவம் நீங்கினமைபற்றி, மலம் நீங்கினமையாலன்றே அவனுக்குச் சிவத்துவமே எய்தல் சித்தமாயிற்று. சிவத்துவம் என்பது சமஸ்த மலத்தொடர்ச்சியின்றி நிரதிசய மங்கலாஸ்பதரூபமெய்தலேயாம். சிவபெருமானுக்கு ஒப்பாகிய சுவதந்திரத்துவ சர்வஜ்ஞதாதி குணங்களையுடைமையே ண்டுச் சிவசாமிய இயற்கை (எனப்பட்டது). ஆகலின், சிவசாமியமுடைய அந்த முத்தனுக்குச் சர்வஜ்ஞதை, இயல்பாகவே பாசஞ்களிலீங்கிநிற்றல், நித்தியானந்தம், தன்வயமுடைமை, சமஸ்த ஆற்றலுடைமை, பேரருளுடைமை, அனந்தசத்தியுடைமை உளவாம் என்க. ஆன்மஞான சங்கோசரூபமே சம்சாரம். ஆகலின், சங்கோசகாரணமாகிய மலம் நீங்கியபோது அவனுக்குச் சர்வஜ்ஞதை எய்துகின்றது. அதுபற்றிச் சம்சாரத்துக்குக் காரணமாகிய அஜ்ஞானம் சமூலம்ப் நிவிர்த்திபொக்கல், பெரியோ நிரோபோகை தேகாதியபிமானரூபப்பிரமமானது நீங்கிவிடுகின்றது. எதுபற்றி அவனுக்கு ஜரை, மரணம், சோகமுதலிய இல்லையோ, அதுபற்றிக் கன்மவசப்படாமையின் சுவதந்திரத்துவம் எய்துகின்றது. நிரதிசய சொரூபானந்தானுபவத்தில் அமிழ்ந்தினமை பற்றி எய்தும் சுவாத்துமாராமத்தினாலும் அவனுக்கு வரம்பிலின்பமுடைமை (எய்துகின்றது); அதனால் அவனுக்குப் பசிதாகம் இன்று. பேரருளுடைமையாற் சத்தியகாமம் சத்தியசங்கற்பமுதலியன எய்துகின்றன. அங்ஙனமாதலின் முத்தனும் சிவபெருமானும் அந்த அபகதபாப்மத்துவாதி எண்குணங்களையுடையராகக் கூறப்படுகின்றார். அதுபற்றிச் சிவசாமியமுடைய முத்தனுக்குச் சுவாதந்திரியம் கூறல் யுக்தமே. (க)

(நி) அபாவாதிகரணம்.

ஸஹாவo வாஜிநாஹமஹிவது (சூ. சூ. கo)

(நிகூ.கூ) (சரீர) மின்மையைப் பாதரி கொள்கின்றார்; இங்ஙனம் (சுருதி) கூறுகின்றமையின்.

மேலே அதிகரணத்தில் முத்தனுக்குச் சுவம்பிரகாசத்தன்மையும் சத்தியுடங்கற்பத்துவாதி விசிட்டகுணமும் உண்டெனக் கூறப்பட்டது.

சண்டே அவன் சரீரமுடையனாகவா? சரீரமிலனாகவா? இன்றேல் இரண்டு முடையனாகவா? இருக்கின்றான் என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) பாதரியோவெனின் முத்தனுக்குத் தேகேந்திரியாதி உபகரணங்கள் இல்லை என்று கொள்கின்றனர்; "நிஷ்கலம் நிஷ்கிரியம்" என்றற்றொடக்கத்த சுருதிகள் பிரமத்துக்கு அவை இல என்று கூறுகின்றனவன்றே. (ஆகலின்), அந்தச் சொரூபமுடைய முத்தனும் அவ்வியல்பினனாகின்றான். (க)

ஹவ ஜெஜிதி வி-கேயூஷ்டநாஸ (சு. சூ. ஏஎ).

(நிகூசு) (சரீர) வுண்மையைச் சைமினி கொள்கின்றனர்; சுருதியில் விகற்பங்களைப் பற்றிக் கூறப்படுகின்றமையின்.

ஸ வாகயா ஹவதி திரயா ஹவதி (சாந். ஏ. உசு. உ)

"அவன் ஒருபிரகாரமாகின்றான், மூன்று பிரகாரமாகின்றான்" என்றற்கு உக்கத்த சுருதிகளிலே தேகேந்திரியாதிகளோடு கூட முக்தன் அநேக பிரகாரமாதலைப்பற்றிச் சுருதி கூறுதலின், அவனுக்குச் சரீரமுளதெனச் சைமினி கொள்கின்றனர். இங்ஙனம் முக்தனுக்கு உளதெனவும் இலதெனவும் சுருதி கூறலின், அவனுக்கு உண்மையானது யாது? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்) சரீரமில்லாமை உண்மை.

உநவைதாதீ காரோதீ வாயுருக்தெ (சாந். அ. கஉ. இ)

"ஞானத்தினல் வேட்ட பொருள்களையெல்லாம் கண்டு களிக்கின்றான்" எனப் பாகியேந்திரியாதிகள் முக்தனுக்கு இல்லை என்று கூறப்படுகின்றது. பிரமத்துக்கும் பாகியேந்திரியம் இல்லை என்று கேட்கப்படுகின்றது.

ஸதயாதீ ஞாணாராமோ உந ஸுநரூபி (தைத். க. ஈ)

"சத்தியாதீன பிராணாராமம்; மன ஆனந்தம்" எனச் சுருதி கூறுதலின் ஆன்மாவிலே (தம்மிலே) தான் ஆராமம் புறப்பொருளின்று என்பதும் ஞான சத்தியிலேதான் ஆனந்தம் புறக்காரணத்தினன்று என்பதுமே (இச் சுருதியின்) பொருள். அதகொண்டு முக்தனுக்குத் தேகமில்லையே. தேகத்தோடு கூடினவனென்றதுவெவ்வேறு அவஸ்தை அடையும் ஆன்மாக்களைப் பற்றியேயாமெனின், (கக)

(சித்தாந்தம்) கூறப்படுகின்றது.

ஜாடயாஜவஜ-ஜயலிய்ம வாடராயணோ zதீ: (சு. சூ. ஏஉ)

(நிகூநு) பன்னிருதினத்து யாகம் போல, இரண்டும் கூடும் என்ற நியாயப் பிரகாரம் பாதராயணர் கொள்கின்றனர்.

சரீரம் உளதாதலையும் சரீரம் இலதாதலையும் சுருதி கூறலின், சுவேச்சையினலே முக்தன் இருபிரகாரமாயும் உனனென்று பகவான் பாதராயணர் கொள்கின்றார். பன்னிரு தினஞ் செய்யப்படும் யாகமானது (அநேக முக்கிய ஜமான்கள் சங்கற்பத்தினலாம்) சத்திரயாகமாகவேனும், (ஒருமுக்கிய ஜமான் சங்கற்பத்தினலாகும்) அஹீனயாகமாகவேனும் செய்யப்படும் எனச் சுருதி இருபிரகாரம் கூறுகின்றது; அதுபோல, முக்தனும் ஆன்மனமே,

வஹ்ஹ்ரூவ்வ்ரூவ்ரூவ்ஹ்ரூவ்ஹ்ரூவ்ஹ் வரிவ்ஹிணாவ்வ்ஹாவதஹ்|
ஹிஹ்ஹ்ரூவ்ஹொவ்வெதஹ்ஹ் வாவ்ஹெஹ்ரூவ்ய்-வ்ஹாவ்ஹ்ரூதாஹ்|
வஹ்ஹெஹாஹ்ரூ விஹ்ஹெஹாஹ்ரூ ஹவஹ்ஹ்ரூர்ஹ்ஹெஹ்ரூயாவ்ஹ்ரூநஹ்|

'இவ்பாகவே சர்வஜ்ஞர்களாயும், சர்வவியாபகர்களாயும், சுத்தர்களாயும், பரிபூரணர்களாயும், சிவனை ஒத்த பலமுடையர்களாயும், பரம்மசுவரியத்தோடியைந்தவர்களாயுமுள்ள (ஞானயோகியர்) தாம் விரும்பியவாறு சதேகர்களாயேனும் விதேகர்களாயேனும் மீண்டும் உளராயினர்" என்றற் றொடக்கத்தனவாகச் சிவபதத்தை அடைந்தவர்களின் நிலைமைபற்றிப் பௌராணிகரும் கூறுகின்றனர். ஆகலின், முக்தர்க்கு இருபிரகாரமும் பொருந்துகின்றன. (கஉ)

ஒருவனுக்கே வெவ்வேறு காலத்தில் இரு வியவஸ்தை உண்டென்று சூத்திரகார் கூறுகின்றனர்.

தஹ்ஹாவெ வ்ஹாஹ்ய்வஹ்ரூவ்வவ்ஹெஹ்தஹ் (ச. ச. கஉ)

(நிஉ.சூ) சரீரமில்லாவிடத்துப் (போகந் துய்த்தல்) கூடுமாதலின்; கனவிற்போல.

முக்தன் சுவேச்சையினால் ஒர்கால் அநேகசரீரங்களைச் சிருட்டித்து அவற்றுட் பிரவேசித்து விளையாடுகின்றனன். சிலபோது சரீரங்களைத் தவிர்த்து விட்டும் இருக்கின்றான். சரீரமுதலிய கொள்ளாவிடத்து முக்தனவன்—சொப்பனத்திற் சிவபெருமானாற் சிருட்டிக்கப்பட்ட இரதமுதலியவற்றை மலத்தினாற் கட்டுண்ட புருஷன் மனசினாலே (அநுபவித்தல்) போல—சிவபெருமானால் ஆக்கப்பட்ட ஆனந்தத்தைத் துய்க்கின்றான். இதனால் என் சொல்லியவாறே எனின்? எங்ஙனம் புருஷன் சிவபெருமானால் உண்டாக்கப்பட்ட பொருள்களைச் சரீரேந்திரியங்கள் வேண்டாதுகேவலம் மனசினாலே சொப்பனத்திற் புசிக்கின்றானோ, அங்ஙனமே முத்தனும் தனது இயற்கை ஞானத்தினாலே பிரமசொரூபானந்தத்தை அநுபவிக்கின்றான். (கக)

ஹாவெஜாஹ்ரூஉக (ச. ச. கச)

(நிஉஎ) (சரீர)மிருக்கும்போது கனவிற்போல.

சுவேச்சையினாலே சிருட்டிக்கப்பட்ட சரீரமுதலிய உபகரணமுள்ள விடத்து கனவிற்புருஷன் போலச் சகல வேட்ட பொருள்களையும் புசிக்கின்றான்.

(ஆக்ஷேபம்) முக்தனுக்குப் பிரபஞ்சத்தைக் காண்டலாகிய இவ்விரண்டினுள் அபுருஷார்த்தமாகிய பிரபஞ்சத்தைக் காணும் அம்முத்தனுக்குச் சம்சார துக்கத்தொடர்ச்சி நீங்கமாட்டாதே யெனின்,

(உத்தரம்) அன்று. முக்தன் பிரபஞ்சத்தை அபுருஷார்த்தரூபமாகப் பாராமையான், முக்தனுக்கு இத்தப்பிரபஞ்சம் பிரமாகாரமாகவே காணப் படுகின்றது.

வாகாதஎதா ஊவதி (தைத். க. சு)

"பின் இது (பிரமம்) ஆகின்றது"

சூகாஸஸரீரம் ப்ரஹ்ம (தைத். க. சு)

"ஆகாசசரீரம் பிரமம்"

வதயாதவ்யாணாராஸ்ம நந சூநஅடிழி (தைத். க. சு)

"சத்தியான்ம பிராணாராமம்; மன ஆனந்தம்"

ஸாஷிவஸ்ரஜஸ்ரஜதழி (தைத். க. சு)

"சாந்தியினல் நிறைந்த அமிர்தம்" என்று சுருதியிலே கூறப்படுகின்றது. மேலே,

சூவைராதி வ்யாராஜ்ய சாவைராதி சநவஷ்டிழி (தைத். க. சு)

"அவன் சுவர்க்க ராச்சியத்தை அடைகின்றான்; அவன் ஞானத்துக்குப் பதி யாயுள்ளதை அடைகின்றான்" என்னும் சுருதிகளில் ஸ்வாராஜ்யம் என்பது இன்பமே இரசமாயுள்ள பரப்பிரமசிவனுடைய பதத்தையும், மனசஸ்பதிம் என்றமையான் ஞானசத்திக்கு அதிபதியாயிருக்கும் இயல்பையும் (ஞான) யோகி அடைகின்றான் எனக் கூறப்பட்டது. அங்ஙனமிருப்பின், யாது விசே டம் என ஆக்ஷேபிக்கின்,

வாகூதிஷ்டாஷ்டிம் ரைராதவதிவி-ஜ்ஞாநவதிம் (தைத். க. சு)

"வாக்குக்குப் பதி, கண்ணுக்குப் பதி, காதுக்குப் பதி, ஞானத்துக்குப் பதி" என்றற்றொடக்கத்த சுருதிகளான் வாக்கு முதலிய அனைத்தும் அவன் இஷ் டப்பிரகாரம் வசப்பட்டமையின், அவற்றுக்கு அதிபதியாகக் கூறப்பட்டான். இவ்விபல்பினனிய முக்தன் பரமாகாசரூப சிவபதத்தை அடைந்தவனுய்ச் சுவேச்சையினல் வசப்பட்ட தூயவாக்காதி கரணமுடையனுய், அந்தப் பதத்தை அடைந்தபிற்பாடு (அவனுக்கு) இந்தப் பிரபஞ்ச முழுமையும் ஆகாசசரீரமாய், அஃதாவது பரமானந்தலக்ஷண பரமாகாசசரீரமுடைய பிரம மாகவே ஆகின்றதென்பது; பரப்பிரகிருதி ரூபையாய், பரமசத்தையாய், பிர காசானந்த சமரசமாயுள்ள பரமசத்தியே பிரமத்துக்குச் சொரூபத்திலும் பர மாகாசம் என்று கூறப்படுகின்றது; எந்தச் சத்தி முக்தர்களுக்கும் சிவபெரு மானுக்கும் சாகூரத் அர்த்தத்தையும் கிரியையையும் அடைதற்கு ஏதுவா யுள்ளதோ, அதுவே மற்றையோர்கட்கும் பரம்பரையாயுண்டாம். எங்ஙன மெனின்,

ஸொஹெவுவா நூ ஹ்ஃ வ்ராணூ ஸு। யதெஷ ஹ்யேஷ ஸாதநெ ஹ்ருதயம் நவ்யாஸ (தைத். உ. எ)

"இந்த ஆகாயம் ஆனந்தமாகாவிடின், எவன் சுவாசிப்பான்; எவன் உயிர்ப்பான்"

வாஷ ஹெவுவா நஅடியாதி (தைத். உ. எ)

"இவர் ஆனந்தத்தை விளைவிக்கின்றனர்"

ரஹோ வெ வஃ (தைத். உ. எ)

"அவரே இரசம்"

ரஸ்ம் ஹெவுவாயம் லப்வா நஅதீஅவதி (தைத். உ. எ)

"இவன் ஆனந்தத்தை அடைந்து ஆனந்திக்கின்றான்" என அவனுக்குப் பராசத்தி சர்வாநுபவவிஷயமாக உளதென்று கேட்கப்படுகின்றது. அங்ஙனமே,

ஸ வாஹெம் சாந்ஷ ஸூநஅஃ (தைத். உ. அ)

"அது ஏகமாகிய மாணுஷ ஆனந்தம்" என்று தொடங்கி,

ஸ வாஹெம் வ்ரஹ்மண ஸூநஅஃ (தைத். உ. அ)

"அது பிரமத்தின் ஓர் ஆனந்தம்" எனப் பிரமபரியந்தம் உபாதியின் மறைப்பினால் ஆனந்தத்தின் உற்பத்தி தாரதம்மியமாகக் கேட்கப்படுகின்றது. பிரமத்தினும் முக்தனிலும் நிருபாதிகத்தினால் அந்த ஆனந்தம் பரிபூரணமாய் இருக்கின்றது;

ஸ வாஹெம் வ்ரஹ்மண ஸூநஅ ஏஷ்யாதீயஸ்ய வாகாரஹ்ஹதஸ்ய। (தைத். உ. அ)

"அது பிரமத்தினதும் ஆசையறுத்த வேதவித்துவானதும் ஓர் ஆனந்தம்" என்று கேட்கப்படுதலின். பிரமத்துக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்ட புத்தியோடு நிஷ்காமமாய் அநுஷ்டிக்கப்பட்ட அக்கினிகோத்திராதி கன்மத்தையுடைய பரமவித்துவானே "ஆசையறுத்த வேதவித்துவான்" என்று கூறப்பட்டான். உயிரோடிருக்குங்கால் முக்ததசை அடைந்தவனுக்கும் பிரமத்துக்கும் ஆனந்தம் தல்லியமே. யோகமிகுதியினால் அந்தந்த உலகத்தை அடைந்த யோகிக்கு முன்முன் உள்ள பூமிகளை நோக்கிச் செய்த யோகாப்பியாசம் அற்பமாம். அந்தந்த (யோக) அநுசாரமாக அந்தந்தப் பூமியிலே அதற்குரியதாய் எய்தும் ஆனந்தத்தை மனுஷ்யாதி ஆனந்தத்தோடு சாமியமாகக் கூறல் விரோதமின்று. ஆகலின், இதுவே பாமானந்த பரப்பிரகிருதிப் பாமாகாரதம்; இது பாத்தினின்று வேறுமுமையின்.

ஸூநஅஸ்ய வ்ரஹ்மதி வ்ய ஜாநாஸ (தைத். உ. ஈ)

"ஆனந்தம் பிரமம் என அறிந்தான்" என்னுஞ் சுருதியினால், ஜகத்காரண மாகிய பிரமமாகவே (அது) கேட்கப்படுகின்றது.

ஸைஷா ஸாமவாருணீவித்யா வாருணீ வைஷ்ணவீ ரௌத்ரீ (தைத். கூ. சு)

"அந்தப் பார்க்கவி வாருணி வித்தையானது பரமவியோமத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டது" என்னுஞ் சுருதியினால் இந்த ஆனந்தத்தின் அபிவியக்தி கேட்கப்படுகின்றது. ஆகலின், முக்தர்களுக்குப் பரமானந்தரூப பரமாகாச சரீரத்தையுடைய பிரமமாகவே பிரபஞ்சம் ஆகின்றது. அவர்கள் இந்தப் பரமானந்தத்திலே பிரவேசித்த முக்தர்களுக்குப் பிரமத்துக்குப் போலத் தக்கத் தொடர்ச்சி இல்லை. (கச)

(சு) பிரதீபவதாவேசாதிகரணம்.

ஸ்ரீவைஷ்ணவா ஹ்யூ ஹி ஏஷ்யதி (சா. சா. கடு)

(நுங அ) தீபம் போல வியாபிக்கின்றான்; அங்ஙனஞ் சுருதி கூறுகின்றதன்றே.

மேலே அதிகரணத்திலே முக்தான்மாக்களும் சுவேச்சையினாலே அனந்த சரீரங்களை எடுக்கும் சாமர்த்தியத்தினால் வியாபகமுடையனவென்று சூசிப்பிக்கப்பட்டது.

அந்தச் சர்வவியாபகம் நண்டுப் பொருந்துமா? அன்றே? என்பது சந்தேகம்.

(பூருவபக்ஷம்)

ஸவை ஷ்ட ஔகேஷ்ட கர்ஷாவரோ ஹவதி (சாந். எ. உடு. உ)

"எல்லா உலகங்களினும் விரும்பியவாறு சஞ்சரிக்கின்றான்"

ஔர்த்வ ஔகாம்ஸ்யாம் நீகாரோ நீகாரோ ஹ்யேவைனாவஔரயதி (தைத். கூ. கo. டு)

"வேண்டிய வடிவங்களை எடுத்து இவ்வுலகங்களிற் சஞ்சரித்து வேண்டிய போகங்களைத் துய்க்கின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே, முக்தனுக்குப் பரிச்சின்னமாகச் சஞ்சாரம் பெறப்படுதலின், அவன் வியாபகமாதல் உசிதமில்லை. அதுபற்றி அநேக சரீரத்தை எடுத்தல் கிரமமாகவேயன்றி ஒரே காலத்தில் அன்று எனின்,

(சித்தாந்தம்) கடத்துள் இடப்பட்ட தீபமானது தடைநீங்கியபோது தன் பிரகாசத்தினாற் கிரகத்தை வியாபித்தல் போல, முக்தனும் சத்தியை மறைத்த மலம் நீங்கியவிடத்துத் தன் சத்தியினாலே பிரபஞ்சத்தைப் பிரவேசிக்க வியாபிக்கின்றான்.

ஸதோஷ்யு ஜந்திதா ஸ வியாதா யாசோநி வெத ஊவநாதி லிஷ்வா। யதர தெவா கூஹ்யே சாநயாநா வ்யதீயெ யாசோந்யஹெயுர யதே। வாஸிதூவா வ்யயிவீயதி வதயோ வாரிவொகாநீ வாஸிஷுஸ் வாஸ ஊவஸ்। ஐதவ்ய தஷ்ட்ய விதத்ர விவ்யக்ய தடவர்ய-தூடவகஷ்ய ஜாஸ்ய (தைத். ஆரணி. க0. க. ச)

"அந்தப் பரமாண்மா நமக்குப் பந்து; பிதாவுமாகின்றனர்; அவர் பயன்களை விளைவிக்கின்றனர்; எல்லாப் புவனஸ்தானங்களையும் அறிகின்றனர்; எந்தப் பரமாண்மாவிடத்திற் சிவானந்தத்தைப் பெரியோர்கள் அநுபவிக்கின்றார்களோ, அவர்கள் மூன்றுவதாகிய சிவலோகத்தை அடைகின்றார்கள்; அவர்கள் ஆகாயம் பூமிக்கு மேலும், எல்லா உலகங்களுக்கு மேலும், எல்லாத்திக்குகளுக்கு மேலும், சுவர்க்கலோகத்துக்கு மேலும் ஓர்கால் வியாபிக்கின்றார்கள்; கன்மத்தின் தந்துவை அறுத்துச் சென்றுக்கள் அனைத்தினும் ஏகராயினரைக் கண்டு, அந்த ஏகராகின்றார்" என்று சுருதியும் கூறுகின்றது. இச்சுருதிகள் ஜகத்கர்த்தாவும் விசுவரூபருமாகிய மகாதேவருடைய பிரகரணத்திலே நோக்கின்றன. அச்சுருதிப் பொருள் வருமாறு:—

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

ஸஃ=அந்த மகாதேவர்

நஃ=எங்களுக்கு

வந்ய-ஜந்திதா=பந்துவாகிய பிதாவுமாயினர்;

ஸ வியாதா=சகல நன்மைகளுக்கும் கர்த்தா;

யாசோநி வெத=ஒளிமயமாகிய அப்பிராகிருத உலகங்களை அறிகின்றனர்;

அவர் நமக்குப் பந்துவாகி எல்லா உலகங்களையும் அறிதலினும் போதரும் பிரயோஜனம் (முன்னார்க்) கூறப்படுகின்றது.

யதர=எந்த மகாதேவரிடத்தில்

கூஹ்யகஃ=கைவல்லிய இலட்சுமியை

சாநயாநாஃ=அடைந்து அநுபவிப்பவர்களாய்

தெவாஃ=அநுபவத்தால் விளங்குகின்றவராயுள்ள பெரியோர்

த்ரிதீயே=மூன்றுவதாகிய (திய எனப் பெயரிய மாயாதீதமாகிய அந்தப் பதத்திலுள்ள),

யாசோநி=ஒளியைப் பிரதானமாகக் கொண்டு தங்களால் அபிமானிக்கப்பட்ட ஸ்தானங்களை,

கவெந்ரயதே=சுவீகரிக்கின்றனர்.

இதனால் என் சொல்லியவாறே எனின், உறவினர் போலப் பிதாப் போல, சமஸ்த உலகத்திற்கும் நன்மை செய்பவராயும், சர்வஜ்ஞராயும்

பரப்பிரம்மமாயும், பிரசன்னராயுமுள்ள மகாதேவரால், நீங்கப்பட்ட பாச பந்தத்தையுடையராய், சிவத்துவத்தை அடைந்தவர்களாய், மகாப்பிரகாச முடையராயுள்ள முக்தர்கள் மூன்றுவதாகிய பரமாகாச இலக்ஷணமுடைய சுவ பதத்திலே கற்பிக்கப்பட்ட தாமங்களாகிய பிரகாசம் பொருந்திய பதங் களை அடைந்து இருக்கின்றனர் என்பதாம்.

அதன் பின் இவர்களுக்கு வியாபகம் கூறப்படுகின்றது.

வரிதியூவா வ்யாபிவீவரியஞ்சி=முக்தான்மாக்கள் சுவதந்திர ஞானீக ளினுலே ஆகாயத்தையும் பூமியை யும் வியாபிக்கின்றனர்;

வரி லொகாநீ=இரண்டியகருப்ப லோகங்களையும் வியாபிக்கின்ற னர்;

திஸாஞ்ச=திக்குகளையும்

லுவஞ்ச=சுவர்க்கத்தையும்

(வரியஞ்சி)=வியாபிக்கின்றனர்.

இவனவர் முதல ஞானத் வியாபிகளாய் இருக்கின்றனர்; எவ்வனமெனின்,

[illegible]

ஈதஸ்ய=கர்மத்தின்

விததோ=விஸ்தீர்ணமாயுள்ள போகங்களை

விவ்ரதஸ்ய=ஒழித்து (அஃதாவது, புண்ணியபாவங்களினின்று) நீங்கி னவர்களாய்,

ப்ரஜாஸு=சர்வப்பிராணிகளிலும்,

தஸ்ய=அந்த (மகாதேவர் என்று பெயர் கொண்ட பொருளின்)

சுவரூபம்=கண்டு, சர்வான்மகமாய் அவரேயாகி அவ்வியல்பினரா கின்றனர்.

ஆகலின், சிவானந்தத்தை அடைந்த முக்தான்மாக்களுக்கு வியாபகத் துவம் உளதே. அம் முக்தான்மாக்கள் சிவபெருமானுடைய குணங்களையு டையராய், ஆகாயமுதலியவற்றை வியாபிக்கும் தேவர்களாகக் கூறப்படுகின் றனர்.

யெ தெவா திவிஷதி।

"சுவர்க்கத்திலிருக்கும் இந்தத் தேவர்கள்" என்று தொடங்கும் தேவலிர தம் எனப்படும் சாமவேதத்தினுலே துதிக்கப்படுபவராகின்றனர்.

தெ ஹி லாகஸ்ய திவிஷதி வ்ருதஸ்ய ரஸ்மிகவடவ்ருயா।

வ்யாபிவிஷதி உதெயுதெ தெவவ்ரதெ ஸூர்தாः।

"அவர்கள் சுவர்க்கத்துள்ள தேவர்களாயும், அந்தரிக்ஷத்துள்ள தேவர்களாயும், பிருதிவியிலுள்ள தேவர்களாயும் இருக்கின்றார்கள்; இந்தத் தேவர்கள் தேவரதத்திலே துதிக்கப்படுபவராயினர்" என்று புராணத்தினும் கூறப்படுகின்றது. (ஈண்டுப்) பிருதிவி என்றது பிரமாண்டத்தையும், அந்தரிக்ஷம் என்றது இரண்டாவதாகிய மாயாபதத்தையும், தியௌ என்றது மூன்றாவதாகிய பரமாகாச பரியாயமாகிய சுத்த சத்திரூப சிவரூபபதத்தையும் குறித்தன. ஆகலின், முக்தான்மாக்களுக்கு வியாபகமுண்டே. (கரு)

வூவூராயஸ்வதெரூநூதராவெகூசோவிஷ்ணுகo ஹி (சு. சு. கசு)

(நூகக) நித்திரை மரணம் என்னும் இரண்டவஸ்தையின் ஒன்றை அது குறிக்கின்றது; அங்ஙனம் சுருதியில் விளக்கப்பட்டிருக்கின்றதன்றே.

வூராஜ்ஞநாத்மநா ஸ்வரிஷ்வக்ஷோ நவாஹ்யo கிoஅநவெடி நாகாரூ (பிரு. சு. கூ. உக)

(பூருவபக்ஷம்) "பிராஞ்ஞனகிய (பரம) ஆன்மாவினற் றழுவப்பட்டு அகம்புறம் அறிந்திலன்" எனப் பிரமத்தை அடைந்தவன் உள்ளும் வெளியும் அறிந்திலன் எனச் சுருதி கூறுகின்றது. அவனுக்குச் சத்திரூபமாகிய ஞானவியாபகம் எங்ஙனம் என ஆக்ஷேபிக்கின்,

(உத்தரம்) இது ஆக்ஷேபிக்கப்படுவதன்று. ஆன்மாவிடத்துள்ள அறிதலின்மையை உணர்த்தும் வசனம் சுழுப்தி மரணம் என்பவற்றில் ஒன்றைக் குறிக்கின்றது.

நாஹ வலுயதேவo ஸ்வரூதாத்தாநo ஜாநாதீத்யயஹவைஷ்டீதி நோ வஹவைநிஹ்வேதாநி (சாந். அ. கக. க)

"உண்மையாய் அவன் நான் என்று ஆன்மாவை அறிந்திலன்; இருக்கின்ற மற்றெண்ணையும் அறிந்திலன்" எனச் சுழுப்தியையும்,

வாதெஹ்வா ஹ்வேதெஹ வஸ்ஷாத்ய காதெநுவாந்ய விநஸ்யதி நத்வேவைது ஸ்வஜ்ஞ zஷ்டி (பிரு. சு. நி. கஉ)

"இந்தப் பூதங்களிலிருந்து எழுந்து பின் அவற்றுள்ளே அழிகின்றான்; அவன் புறப்பட்ட போது பிரஞ்ஞை இல்லை" என்று மரணத்தையும் குறிக்கும் சுருதியினல் வெளிப்படுத்தப்பட்டதன்றே; இவ்விரு அவஸ்தைக்கும் வேறுகிய மோக்ஷதசையில் அங்ஙனம் அறியாமை முதலிய இல்லை; பின் மலமறைப்பு நீங்கியபோது (முக்தன்) சர்வஞ்ஞத்துவமும் சர்வகர்த்திருத்துவமும் எய்துகின்றன். (ஆகவே), முக்தனிடத்தில் ஞானமுதலாயின விசேஷிக்கப்படுதல் இல்லை. (கக)

(எ) ஜகத்வியாபாராதிகரணம்.

ஜகவ்யாபாரவர்ஜம் ப்ரகரணாத்அஸன்னிஹிதத்வாச்ச (ச. சூ. கஎ)

(நிசூ0) உலகத்தோடு சம்பந்தமுற்ற வியாபாரம் இல்லை; பிரகரணத்தினாலும் சமீபத்தின்மையாலும்.

முக்தான்மாக்களுக்குச் சுவப்பிரசாசத்துவம், வியாபகத்துவம், சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களினாற் சிவபெருமானோடு சாமியம் என்று கூறப்பட்டது. அங்ஙனமாகுங்கால் உலகசிருட்டிமுதலியவற்றினும் சாமியத்தைத் தவிர்த்தல் கூடாது;

வாசூ0 வாஜ்யேவைதி (முண். கூ. க. கூ)

"பரமசாமியத்தை அடைகின்றான்" எனப்பேதமின்றிக் கேட்கப்படுதலின். உலகசிருஷ்டி முதலியவற்றிற் சாமியத்தை அங்கீகரிப்பின், அதுகேசுவரத்தினாற் சிவபெருமானுக்கு அத்துவிதீயத்துவ பங்கப்பிரசங்கமாய்தும்; ஆகலின், சிவபெருமானோடு முக்தான்மாக்களுக்குச் சாமியம் எவ்வியல்பினதெனக் கூறப்பட்டது.

ஜகத் சிருட்டியாதியோடு சேர்த்தா? தவிர்த்தா? சாமியம் என்பதில் சந்தேகம்.

(பூருவபக்ஷம்) என் சொல்லியலாறே எனின்,

ஸ யதி விதுஷொக காமோ ஊவதி (சாந். அ. உ. க)

"அவன் பிதிர்லோக காமனுகின்றான்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே சங்கற்பமாத்திரத்தினாற் பிதிர்லோகமுதலியவற்றைச் சிருட்டிக்கும் சாமர்த்தியம் கேட்கப்படுதலானும்,

ஸோ(ஒ)காகாமாந்நீகாமரூப்யநுஸஞ்சரன் (தைத். கூ. க0. இ)

"இந்த உலகங்களை அடைந்து தான் வேண்டிய ரூபங்களையுடையவனாய் வேண்டியபோகங்களை அடைகின்றான்" என்றியாண்டும் வியாபாரம் கேட்கப்படுதலானும், சிவசாமிபத்திற் சங்கோசமின்மையானும் முக்தனுக்கு உலகசிருட்டியாதி வியாபாரமும் உளதாம் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். முக்தனுக்குச் சிவசாமியம் உளதாயினும் ஜகத்சிருட்டியாதி வியாபாரமின்றே; தனது போக்கிய வஸ்துக்களிலே சுவாதந்திரியம் உண்டு.

யதொவா இமானி பூதானி ஜாயந்தே (தைத். கூ. க)

"எவ்விடத்திலிருந்து இந்தச் செந்துக்கள் பிறக்கின்றனவோ"

வாவா வ்யாப்தாஜநயதி தெவ வஸு (தைத். ஆரணி. [illegible])

"ஆகாயத்தையும் பூமியையும் சிருட்டித்தத் தேவர் ஒருவர்" என்றற்றொடக்கத்தவற்றிலே கேட்கப்படும் ஜகத் சிருட்டி முதலியன சிவபெருமானுக்கே பிரகரணத்தினுற் பெறப்படுகின்றது; சிருட்டியாதி பிரகரணங்களிலே ஆன்மாவுக்கு (அங்ஙனம் கூறச்) சிறிதும் இடமின்றே. ஆகலின், முக்தனுக்கு ஜகத் சிருட்டியாதி வியாபாரம் இன்று. (கஎ)

ஶாகூகூஷவதொஷாதிதி ஔஜாயிகாரிகூண்ணுஷவ்ஷாகூதூ।

(ச. ச. கஅ)

(நிசக) வெளிப்படையாகக் கூறப்பட்டமையால் எனின், அன்று; அதிகாரமுடையாரது மண்டலத்தில் இருப்பதையே அது குறிக்கின்றமையின்.

(பூருவபக்ஷம்)

உசாஸ்ஸாகா ஸாசா ஸ்ஸாசாஸ்ஸ-ஸவ்ஸ ஸ்ஸ-ஸஸஸ்ஸ ஸ்ஸ் (தைத். கூ. க0. கூ)

"இந்த உலகங்களை அடைந்து, வேண்டிய ரூபங்களை எடுத்து வேண்டிய போகங்களைத்துய்க்கின்றான்" என்றற்றொடக்கத்தவற்றிலே, முக்தனிடத்தில் ஜகத்வியாபாரம் பிரத்தியக்ஷமாகக் கூறப்படுதலின் அந்தச் சம்பந்தம் உளதாமே எனின்,

(சித்தாந்தம்) அன்று; இந்தச் சுருதியானது வேண்டிய போகங்களைப் புசித்தலைக் குறித்தலாற் பிரமாதி சதாசிவாந்த அதிகாரிகள் மண்டலங்களிலேயுள்ள போகங்களை அடைதலே கூறப்படுகின்றது. ஆகலின், அவனுக்கு ஜகத்சிருட்டியாதி வியாபாரம் இல்லை. (கஅ)

(ஆக்ஷேபம்) அங்ஙனமாயின் போகசம்பந்தத்தினால் விகாரத்துவம் உளதாமோ என,

(உத்தரம்) சூத்திரகாரர் கூறுகின்றனர்.

விகாரஷத்-ஷதயாஹி வ்ஷிதிஷாஹ (சு. சு. ககூ)

(நிசஉ) அது விகாரத்துக்கு அமைந்ததன்று; இங்ஙனம் சுருதி (ஆன்மாவின்) நிலையைக் கூறுகின்றது.

அவன் அநுபவிக்க வேண்டிய ஆனந்தம் விகாரத்தொடக்குண்ணுது தூய்தாய்ப் பரிபூரணமாயுள்ள பிரம சொரூபமே.

ரஷொ வெ ஸஃ। ரஸ0 ஹ்யேவாய0 லப்ஷ்வா நo0ஷீ ஶவதி।

(தைத். உ. எ)

"அவர் இரசம்;" "இவன் ஆனந்தத்தை அடைந்து ஆனந்தமாகின்றான்" என இவனுடைய ஸ்திதியைச் சுருதி கூறுகின்றது.

ஸத்ய ஜ்ஞாநாநந்த ஸ்ரஷ்டு (தைத். உ. க)

"சத்தியம் ஞானம் அனந்தம் பிரமம்"

ஆநந்தோ ஸ்ரஷ்டு (தைத். கூ. சு)

"ஆனந்தம் பிரமம்" என்றற்றொடக்கத்தவற்றிற் பிரமசொரூபம் விகார மில்லாததென்றே கேட்கப்படுகின்றது. ஆகலின், மோக்ஷவின்பம் பாச வின்பம் போல விகாரமிலாதது. சதாசிவர் முதற் பிரமாவீறுள்ள அதி காரிகளுடைய மண்டலங்களிலே இஷ்டப்பிரகாரம் சஞ்சரிப்பவனும், வேண் டிய ரூபங்களே யுடையனும், மனுஷ்யாதி தேகாபிமான மில்லாதவனும், விரிந்த முச்சத்தி வியாபாரமுடையனும், பரமானந்த பிரகாச விபூதிமயமா கிய சத்தி சிவங்களின் சமரசமாகிய பரப் பிரமசொரூபைகரசமாகிய பிரபஞ் சத்தில் மூழ்கிய பரிபூரண அகம்பாவப் பிரகாசத்தை அநுபவிக்கின்றான்.

ஸஹநாவவது ஸஹநௌ புநக்து ஸஹவீர்யம் கரவாவஹை தேஜஸ்வி நாவதீதமஸ்து மாவித்விஷாவஹை (தைத். கூ. கo. சு)

"நான் அன்னம்; நான் அன்னம்; நான் அன்னம்; அன்னம் புசிப்பவன் யான்; அன்னம் புசிப்பவன் யான்; அன்னம் புசிப்பவன் யான்" என்றற் றொடக்கத்தவற்றிற் போக்கிய போக்தா முதலிய சகலப் பிரபஞ்சான்மபாவ பரிபூரண அஹம்பாவனையானது அவனுக்கு எய்துகின்றது. சுண்டு அகங் காரமானது சம்சாரத்துக்குரியதன்று; சமஸ்தப் பிரபஞ்சத்தினும் மூழ்கிப் பரிபூரணமாயிருத்தலின். பின் அந்த அகங்காரத்தினல் முக்தனுடைய இயற் கையே கூறப்பட்டமையால், "நான் தேவன்," "நான் மனிதன்" எனத் தேக மாத்திரமாய் அடக்கிக் கற்பிக்கப்படும் பரிச்சின்ன சாம்சாரிகமாகிய அகங் காரத்துக்கு இது வேறேயாம். ஆகலின், அதற்கு சுண்டுப் பிராதிருத அகங்கார சம்பந்தமில்லை. அஃதொழிந்து அகம் (கூஹம்) என்பது சத்தி சிவாத்துவயமாகிய பிரமத்தின் மேற்று. அந்த அன்னமுதலியவற்றை அடக் கிய பிரபஞ்சஜாலம் (நானன்றி வேறில்லை) என்பதே முக்தனுடைய பாவனை.

கநத்ரவிலமுக்ரஹஸ்வாதிஷ்யாத்மநோ
வாராஹைக்ர மிஷ்ணகூடஹரிதூபயுதை விஹோ
ஹ்ரீஷ்யகாரொ ஹாடஹாஜெ ஹகாரஸ்துதிஷ விந்துமி
கஹோதகூகைஷ்ட கo யதீகாரஸ்தவிஸர்கமி

"நிர்நிசயமாய், முடிவிலதாய், சிவசத்தித்துவயமாய், வியாபகமாயுள்ள பூ மான்மாவானது பரிச்சேதமாக ஹேயகுணமிலதாயிருத்தல்பற்றி அகம் (கூஹம்) என்று கூறப்படும்; இதயத்தில் அகாரமாய், துவாதசாந்தத்திலே ஹகாரமாய் இருக்கின்றது, ஆகலின், பெரியோர் பிரகாசமாகிய ஆன்மா வினிலே முற்றும் அத்துவைத அகமாக இதனைப் (பிரபஞ்சத்தை) அறிகின்ற னர்" என்பது அப்தவசனம். சுண்டி நிர்நிசய பிரமாவாந்த பரத்தைப் பிர

வேசித்த முக்தனுடைய சகலப் பிரபஞ்சாகார சிவன் எனப் பெயரிய பிரசாத அக்ஷரத்தை அநுசந்தானஞ் செய்தல் பூருவமாக உள்ள கானம் செய்யப் படல்வேண்டும் என விதிக்கப்படவில்லை. பின் ஆனந்தத்தைத் துய்த்தலாற் பரம உல்லாசத்தை வெளிப்படுத்தும் பொருட்டுள்ளதே அந்த ஸ்தோத்திரம். ஆகலின், முக்தர்களுக்குப் பிரமானந்த அநுபவவியாபாரமன்றிச் சிருட்டியாதி வியாபாரம் சுவேச்சையினல் இல்லை. (சுசு)

ஷஸ்ய தஸ்ரைவ0 வ்ரதகூஷாநுரோதெந (சு. சு. உ0)

(ருசாசு) இங்ஙனம் பிரத்தியக்ஷமும் அநுமானமும் காட்டுகின்றன.

இங்ஙனம் மேலே கூறப்பட்ட பொருளை (முறையே) பிரத்தியக்ஷ அநுமானங்களாகிய சுருதியும் ஸ்மிருதியும் காட்டுகின்றன.

தஸ்மாத்வா ஏதஸ்மாத்ஆத்மந ஆகாஸ்ஸ்ஸம்பூதஃ (தைத். உ. க)

"ஆகலின் இந்த (பரம) ஆன்மாவினிருந்து ஆகாசம் பிறந்தது" என்றற் றொடக்கத்த சுருதிகளும்,

ஸவ்ஷவவஸவஜ்ரொள (மனுஸ்மிருதி. க. அ)

"அப்புக்களையே முதற்கட் சிருட்டித்தனர்" என்றற்றொடக்கத்த ஸ்மிருதியும் கூறுகின்றன). ஆகலின் பிரமமே ஜகத்துக்குக் காரணமுதலியவாக உள்ளது.

(பூருவபக்ஷம்) அங்ஙனமாகுங்கால்,

ஸிரஃஜநஃ வாஸ0 ஸாஶ்வதீ (முண். கூ. க. கூ)

"துகளற்றவனைப் பரமசாமியத்தை அடைகின்றன்"

ஸாக்ஷாஶ்ஸிவஸமோஹவெசு (வாயு. பூ. உஅ: உஉ)

"முக்தன் சிவசமமாகின்றன்" என்றற்றொடக்கத்தவற்றில் முக்தனுக்கும் பிரமமாகிய சிவத்தோடு பரமசாதிருசியம் உண்டெனப் பிரதிபாதித்தலின், சிவபிரானுக்கு ஜகத் சிருட்டிமுதலியன இயற்றற்கு எவ்வதிகாரம்உண்டோ, அஃதெல்லாம் முக்தனுக்கும் வரையறுப்பின்றி உளவாம்; இன்றேற் பரம சாதிருசியம் என்றதற்கு ஹானி எய்தும் எனின், (உ0)

(சித்தாந்தம்) இதற்கு மாறுகச் சூத்திரகாரர் கூறுவாராயினர்.

ஜகத்வ்யாபாரவர்ஜ0 ப்ரகரணாத் அஸந்நிஹித்வாத் தி0 (சு. சு. உக)

(ருசுச) போகமாத்திரத்திலே சாமியம் என இலிங்க முண்மையானும்.

முக்தனுக்குப் பிரமத்தோடு சாமியம் சகல காமியபோகமாத்திரத்தி னலேயன்றி ஜகத்சிருட்டி முதலியவைகளால் அன்று. அங்ஙனம் இருக்கு

மேல், அநேகேசுவரப்பிரசங்கத்திலும் அநவஸ்தை (என்னும் தோஷம்) உளதாகும். அங்ஙனமே சுருதியும்,

ஸொzஸ்ஸுதெ ஸவ-ர்ஜ்ஞாகூஸுஹவ்யவூணா விவஸ்ஸ்ரிதா।

(தைத். உ. க)

"சர்வஜ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு கூட அவன் சமஸ்த காமங்களையும் அநுபவிக்கின்றன்" என்று சுருதி கூறுகின்றது. பலவற்றையும் பார்க்கின்ற சித்ரூபமாகிய ஞானசத்தியோடியைந்தமையாற் பிரமமானது விபச்சித் எனப்படுகின்றது. தேசகால விசேஷ சூன்யமாயுள்ள பிரமமாகிய சிவபெருமானுக்குச் சர்வஜ்ஞத்துவம், சர்வகாரணத்துவம், சர்வான்மகத்துவம், சர்வசக்திமத்துவம், அலுப்தசக்தித்துவம், சுவதந்திரத்துவம், நித்திய திருப்தத்துவம், நிரதிசய ஐசுவரியத்துவம், சர்வாநுக்கிராககத்துவம், சமஸ்த முக்தான்மாக்கள் அடையற்பாலதாம் ஆனந்தரூபத்துவம் என்பன இயற்கையாய் இதயமாய்ப் பரம சத்தாகஸ்புரிக்கும் ரூபமாயுள்ள எந்த ஞானசத்தியினால் உண்டாகின்றனவோ, அவ்வியல்பினதாகிய ஞான சத்தியோடியைந்த பரப்பிரமசிவனுர் விபச்சித் எனப்படுகின்றார். அவ்வியல்பினராகிய பரப்பிரமசிவனுரோடு முக்தனனவன் பரமசாமியத்தை அடைந்து சகல போகங்களையும் அந்தக்கரண இயற்கையாகிய மனசு எனப்படும் ஞானத்தினால் அநுபவித்துக் கண்டு களிக்கின்றனன். அங்ஙனமே,

8நஒஹெதாதீ காகூஸுஹவ்யஸ்ஸெ। 8ஸெநா zஸ்யுஸ்ஸெவஹிகூஷ்ஷ்।

(சாந். அ. கஉ. டு)

"ஞானத்தினாலே இப்போகங்களைக் கண்டு களிக்கின்றனன்; ஞானமே அவனுடைய திவ்யகண்" எனச் சுருதி கூறுகின்றது.

ஸத்யாத்ஜ்ஞானாராமம்। 8நகூஆநஒஷ்டி (தைத். க. சு)

"சத்தியான்ம பிராணாராமம்; மன்ஆனந்தம்" என்றவிடத்துப் பிரமத்துக்கும் புறக்கரணம் வேண்டாத ஞானத்திலேதான் ஆனந்தபோகம்; பிரமத்துக்கும் முக்தனுக்கும் சரீரேந்திரியாதியைக்கோடல் இஷ்டப்படி போகத்தின் பொருட்டேயாம். இதுபற்றிப் தோஷமில்லை. ஆகலின், எங்ஙனம் பிரமம் சமஸ்த போகங்களையும் புசிக்கின்றதோ, அங்ஙனமேமுக்தனும் போகமாத்திரத்திலே சாமியம்; (இதுதான்) முக்தன் பிரமத்தோடி (சாமியம் என்றதின்) உணமைப்பொருள். உலகத்திலே சிலகுணங்கள் பொருத்தமாயிருத்தலினால் "தேவதத்தன் சிங்கம்" என்று கூறுமிடங்களிலே சாமியவியவகாரம் காணப்படலான், பிரமத்தோடி முக்தான்மா சாமியமுறுகின்றன் என்னும்வசனத்துக்குஹானி இல்லை. (உக)

கூநாவ்ருத்திர்ஸ்ஸாத்நாவ்ருத்திர்ஸ்ஸாத் (ச. ச. உஉ)

(நிசரு) திரும்பிவருதல் இன்றெனச் சுருதி கூறலின், திரும்பிவருதல் இன்றெனச் சுருதி கூறலின்.

23172

முக்தான்மாக்களுக்குப் பிரமத்தோடு சாமியமாதலே சாயுச்சியம் என்று கூறப்பட்டது; போகமுதலியவற்றிற் சாதிருசியமுண்மையின்.

ஈண்டு அவர்களுக்குப் பின்னும் ஓர்காற் சம்சாரம் உளதா? அன்று? என்பது சந்தேகம்.

கன்மவிசேஷத்தினால் இந்திராதிபதங்களை அடைந்தவர்க்கு மீளத்திரும்பிவருதல் காணப்படலின், அது சந்தேகத்துக்குக் காரணமாயிருக்கின்றது.

(பூருவபக்ஷம்) இதனால் என் சொல்லியவாறே எனின்,

காரோ நீகாரமேவ நாஸஹாரமீ (தைத். கூ. கo. நி)

"தான் வேண்டிய வடிவங்களை எடுத்து வேண்டிய போகங்களைத் துய்த்துச் சஞ்சரிக்கின்றான்" என்றற்றொடக்கத்தவற்றினால் ஆன்மாக்களுக்கு அநேக சரீரம் உளதாதல் பெறப்படுகின்றது. முக்தான்மாக்களுக்கு அந்தச் சரீர சம்பந்தம் உளதாங்கால், பின்னும் அவர்க்குப் புண்ணியபாவச் செய்கை உண்டாகின்றது. முன் செய்த உபாசனையின் மிருதிப்பாடு அநேகமாகப் போகத்தினால் க்ஷயமாகுங்கால், அக்காலத்திற் பாகமாகும் கன்ம வசத்தினால் மீளவும் ஹீன இன்பமாகிய சம்சாரம் எய்துகின்றது. அங்ஙனமே, * இந்திராதிபதங்களை அடைந்தவர்களும் புண்ணிய மிருதிப்பாடு குறையுங்கால் அங்கிருந்து மீண்டுவந்து பிராமணர் முதலியோராய்ப் பிறக்கின்றனர். ஆகலின், பிரமபதத்தை அடைந்தவர்களும் போக்கியம் போக்தா முதலிய சம்பந்தம் காரணமாகப் போகத்துக்குரிய புண்ணிய மிருதிப்பாடு க்ஷயமாகுங்காற் சம்சாரத்துக்கு மீளத்திரும்புவார் எனின்,

(சித்தாந்தம்) கூறுதும். சாக்ஷாத்கரிக்கப்பட்ட பரப்பிரம ஜ்யோதியினராய், அந்தப் பரப்பிரம பதத்தைப் பிரவேசித்தவர்களாயுள்ள முக்தான்மாக்களுக்குச் சம்சாரத்திலே புநராவர்த்தி இல்லை. எதனால்,

ஸ வைஷ்வா வத்ஸ்ய நூாவதாயஷ்o ஹ்ரஷ்வொக்ஷிவஷ்வஷ்டி தி நஷ்வா நாரூவ தத்ஸ்தி (சாந். அ. கடு. க)

"அவன் இந்தப் பிரகாரம் ஆயுள்வரையுமிருந்து * பிரமலோகத்தை அடைகின்றான், மீளத் திரும்புவானல்லன், மீளத்திரும்புவானல்லன்" என்றற்றொடக்கத்த சுருதியுண்மையின். பிரம விஷ்ணு முதலாயினோருடைய பதங்

---

* இந்திராதிபதங்களையடைந்தவர்க்குத் புநராவர்த்தியினும் பிறப்புண்டாமாதலின், அப்பதங்களைச் சிவனடியார் பொருட்படுத்தார்;

மங்குலேய்மணிமாடமிதவழுகெடுவீதிச்
சங்கெலாங்கரைபொருதுதிரைபுலம்புந்புஞ்சாய்க்காட்டான்
கொங்குலாவரிவண்டினிசைபாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச்சுவர்க்கங்கள்பொருளலவே.

(திருச்சாய்க்காடு. ஞான, எ)

களைக் கூறி விடுத்து, அவற்றுக்குவிலக்ஷணமாயுள்ள சிவமாகிய பரப்பிரமத் தின் விசேஷத்தைப் புராணம் கூறுகின்றது. எங்ஙனமெனின்,

தி₃நகரீ₃தா₂ழிலோகாஸ்₂ வ்ரா₂ந ரோ₂ரு₂ ரு₃ரோவதே₃ஶ்;
லவ₂ர்காலேரோய₂ஸ்₂தா₂ விஸ்₂வ₂ம் நித்₂ய₂ மக்ஷயம்₂;
லாவ்ரூவ₂ு தத்₂ரு₂ம் தி₃வ்₃யா லலேஷ்வ்ரைலவஸ்₂தி₂தா₂ஶ்;
லவ₂ர்ஜா லவ₂ர் மாஸ்₂ரு₂ஸ்₂தா₂ வரிவ₂ஸ்₂யை₂ர் லவ₂ஸ்₂தி₂தா₂ஶ்;
விஸ்₂வ₂காரய₂ரூணாஶ் வரலேஶ்வ₂ர்ய₂ லயஸ்₂தா₂ஶ்;
லவ₂தி₃ஹாஸ்₂ர விதி₃ஹாஸ்₂ர லவஜ்ஞாதி₃ஹ்ரு₂யா வ₂நே;
யெ லம்₂ரூவ₂ந்₂தா₂ஶ் வரம் வ்ரா₂நம் ஜ்ரா₂நயோ₃ரு₂ரா₂நரா₂ஶ்;
₂நதி₃ஷ்டா₂ வ₂நராவ₂ர்தி₃லெ₂ரே லம்₂லாரு ஶ்ரூலெ;

*உமாபதியாருடைய முதலாவதாய ஸ்தானம் கோடி சூரியப்பிரகாசமுடை யதாய், சர்வபோகங்களோடு கூடியதாய், விசுத்தமாய், நித்தியமாய், அக்ஷ யமாயுள்ளது; அந்தத் திவ்யபதத்தை அடைந்து சமஸ்த கிலேசமிலராய், சர்வஜ்ஞராய், சர்வவியாபகராய், சுத்தர்களாய், பரிபூரணராயிருக்கின்றார் கள்; அவர்கள் தாம் விரும்பியவாறு விசுத்தகாரியகரணங்களையுடையவர்க ளாய், பரமைசுவரியங்களோடியைந்தவர்களாய், விரும்பியவாறு சதேதகர்க ளாயேனும் விதேதகர்களாயேனுமாகின்றார்கள்; ஞானயோகத்திலே விருப்ப முடையர்களாய் எந்த மனிதர்கள் அந்தப் பரமஸ்தானத்தை அடைகின்றார் களோ அவர்களுக்குக் கோரமாகிய சம்சாரமண்டலத்திலே மீளத்திரும்புதல் இல்லை" என்பதாம்.

இதன் தாற்பரியம் கூறப்படுமாறு:—

வரம்ஜ்யோ திரூ₂வலம்₂வ₂ர்யெ₂ந ரூ₂பெணாதி₃ஷ்டே₃ந தே₃வே₃ந ஸாத்₂யேந ப்ரஜாபதிநா வா ஏஷ ஏதத்₂ ரூபம் ப்ரதி₃ஸ்₂யதே ஸத்₂யம் ஜ்ஞாநமநந்தம் ப்₃ரஹ்மேதி தத்₂

(க) பரஞ்சோதிரூபத்தை அடைந்து தன் குணங்களினால் ஆவிர்ப்பவிக்கின்றான்" எனப் பரஞ்சோதி ரூபமே முக்தனால் அடையப்படுகின்ற உமாஸஹிதமாகிய பரப்பிரமம் என்று கேட்கப்படுகின்றது. அளவிலா ஆதித்தியப் பிரகாசத்தையெல்லாம் மழுக்கும் அவரது பிரகாசத்தினால் இவையெல்லாம் பிரகாசிக்கும்.

ந தத்ர ஸூர்யோ பா⁻தி ந சந்த்ரதாரகம் நேமா வித்³யுதோ பா⁻ந்தி குதோ(அ)யமக்³நி:। தமேவ பா⁻ந்தம் அநுபா⁻தி ஸர்வம் தஸ்ய பா⁻ஸா ஸர்வமித³ம் விபா⁻தி (கட. உ. கடு)

"அங்கே சூரியன் பிரகாசிப்பதில்லை; சந்திரதாரகைகளேனும், இந்த மின்னல்களேனும், இந்த அக்கினியேனும் பிரகாசிப்பதில்லை; அவர் பிரகாசிக்கும்போது அவரைத் தொடர்ந்து எல்லாம் பிரகாசிக்கின்றன; அவருடைய ஒளியால் இஃதெல்லாம் பிரகாசிக்கின்றன" என்று சுருதி கூறுகின்றது.

யஶ்சி²ரோ(அ)ம் யஶ்ச²ரோ(அ)ம் யஶ்சி²ரஸ்தோ(அ)ம் ஸ்ருʼதா³ஸ்ச² ஸர்வே ஸர்வோ(அ)ஸ்மி யோ வேத³ ஸ ஸர்வ-ஞ்ச² வேத³ (அதர்வசிரசு)

"பரமேசுவரன் நான், புஷ்கரம் நான், பவித்திரம் நான், நுனியும் நடுவும், வெளியும் முன்னும் ஜ்யோதியுமாகிய நானே ஏகன்; எல்லாம் நான் என்று என்னை எவன் அறிகின்றானோ, அவன் எல்லாத் தேவர்களையும் அறிகின்றான்" எனச் சிவபெருமானால் அதர்வசிரசில் நிரூபிக்கப்பட்டது.

ஸர்வ-தஃ பாணிபாத³ம் தத் ஸர்வதோ(அ)க்ஷிஶிரோ(அ)முக²ம்।
ஸர்வ-தோஶ்ருதி மல்லோகே ஸர்வமாவ்ருʼத்ய திஷ்ட²தி (ஸ்வே. உ. ஙூ)

"எங்கும் கையும் பாதகமலமுமாய், எங்கும் கண்ணும் சிரசும் முகமுமாய் எல்லாவற்றையும் சூழ்ந்துநிற்கும் ஒளி சமூகத்தினதுமாயுள்ள சிவத்தைத் தியானிக்க" என்று ஸ்மிருதியும் கூறுகின்றது.

ஆகனின், பரஞ்சோதி ரூபமாய் உமாசஹித சிவன் எனப் பெயரிய பரப்பிரமம் அதிஷ்டித்த பதத்தைக் கோடியசூரியப்பிரகாசம் என்று கூறுவதிற்றடை என்னை? நிரதிசய தேஜோமாத்திர இரத்தினமயமாயுள்ளதுவே நிரதிசய ஆனந்தத்துக்கு உறைவிடமாயிருத்தலிற் * சுவர்க்கம் எனப்படும்.

---

*அதர்வசிர முதலிய உபநிடதங்களிலே சிவலோகமானது சுவர்க்கலோகம் என்று கூறப்பட்டாற் போல, தேவார திருவாசகங்களிலும் அச்சிவலோகம் வானுலகம் அண்டர்நாடு என்றற்றொடக்கத்தனவாகக் கூறப்படுகின்றது;

உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையீரடைவோர்க்குக்
கருவார்ந்தவானுலகங்காட்டிக்கொடுத்தல்கருத்தானீர்
பொருவார்ந்ததெண்கடலொண்சங்கர்நீளக்கும்பூம்புகலித்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே.

(திருப்புகலி, ஞான, க)

வுமெ-ா மொகொ ஜ்யோகிஷாவ்யகீ।
(தைத். ஆரணி. க. உ. ககசு)

தெவாஹவெ வுமு-ஃமஃகீ தெ தெவா ாஊசூவ்யஹுகீ।
(அதர்வசிரசு)

"சுவர்க்கலோகம் ஜ்யோதியினும் சூழப்பட்டது;" "தேவர்கள் சுவர்க்க லோகத்தை அடைந்தார்கள்; அந்தத் தேவர்கள் உருத்திரரைக் கேட்டார் கள்" என்றற்றொடக்கத்த சுருதிகளிற் கூறப்பட்ட ஸ்தானம் துரியமும் துரியாதீதமுமாம்; அங்ஙனமே உத்தரகீதையும்,

தூய-ஃ0 அதூவை-ா தீதஞ் ஸிவஸ்யாந 8நாயெழ।
(உத்தரகீதை)

"துரியமும் துரியாதீதமுமாயுள்ளது அநாமயமாகிய சிவபிரானுடைய ஸ்தா னம்" என்று (கூறுகின்றது).

(உ) சமஸ்த உலகங்களையும் கடந்திருத்தலானும், (அனைத்துக்கும்) காரணமாயிருத்தலானும் அந்த ஸ்தானம் ஆத்யம் (முதலாயது) எனக் கூறப் பட்டது.

ஸிவலொகாஉ ஹிஜ்ஜ-ஃயா நுஞ்ஞஸ்யாவரணாநிச।

"சிவலோகத்துக்குப் புறத்தே அறியற்பாலன அண்டத்தின் ஆவரணங்களு மாம்" என்றற்றொடக்கத்தவற்றால், சிவலோகத்துக்குப் புறத்தே கீழ்ப்பாகத் திற் பிரமாண்டத்தின் சப்தாவரணங்கள் உள்ளன என்பதாம்.

வாாதூரதஸொ வ்யஹா கதூவாதூரெதாஹஸ்மீ। கதூவாதூரத ஸ்ரீவஃ (சிவசங்கற்பம், சரபம்)*

"பரத்துக்குமேற் பரமாயுள்ளார் பிரமா; அவருக்குமேற் பரமாயினர் விஷ்ணு; அவருக்குமேற் பரமாயுள்ளார் சிவன்" என்னுஞ் சுருதியினும் பிரமாதி விசுவாதிகமாகிய பரப்பிரமத்தின் பதம் விசுவங்களுக்கெல்லாம் அப்பாலுள்ளது.

(ஊ) அது ஆதியாம் உமாபதி எனப்படும் பரப்பிரம சிவனுடைய ஸ்தா னம்.

உசாஸஹாய0 வுமெஷ்வர0 விஹ்வா தீரொஅந0 நீலகண்ட0 வ்யா

தொண்டகாசெசெல்லீர்பத்தர்காள்சூழப்போகீ
சொண்டிறல்யோகினேபேரணியுந்தீர்க
டிண்டிறற்சித்தர்களேகடைக்கூழைசென்மின்க
ளண்டர்நாடாளவோராமல்லற்படவாராமெ.

திருப்படையெழுச்சி, உ)

ஜ்ஞ | ஜ்ஞாஜ்ஞ ஈஜ்ஞிஜ்ஞ்ஜ்ஞ ஜ்ஞ்ஜ்ஞயொஜ்ஞ வஷ்ஷ்வாகூழிஜ்ஞஷ்ஹஃ வாஷ்ஷாஜ்ஞ (கைவ)

"உமாசகாயராய், பரமேசுவரராய், விபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசாந்தராயுள்ளாரைத் தியானித்து, பூதகாரணரும், சமஸ்த சாட்சியாயுமாயிருப்பரைத் தூறவியானவன் இருளுக்குமேற் போயடைகின்றான்" என்னும் சுருதியினுல் உமாசகிதரும், நீலகண்டரும், முக்கண்ணருமாகிய சிவபெருமானே தியேயப் பொருளாம் என்றும், தமசாகிய பிரகிருதிக்குமேலேதான் அச்சிவபொருள் அடையற்பாலதாம் என்றும் அறியப்படுகின்றது.

வவெ-ஹ வெவ ஸ்ஷ்ஜ்ஃ (தைத். ஆரணி. க0. உச. ஜஉ)

"எல்லாம் உருத்திரரே" என்று தொடங்கி, எல்லாவற்றுக்கும் முதன்மை சிவனுக்காமெனக் கூறி, உபசங்காரத்திலே

ஹிரண்யபாஹுவே ஹிரண்யபதயெ z0விகோபதய உமாபதயெ|

(தைத். ஆரணி. க0. உஉ. ச0)

"இரண்ணியபாகுவினர்க்கு, இரண்ணியபதிக்கு, அம்பிகாபதிக்கு, உமாபதிக்கு (நமஸ்காரம்) என்று முடித்தது. பிரணவபரியாயமாகிய உமாசபதத்தினுலே பரப்பிரகிருதிரூப பராசத்தியார் கூறப்பட்டனர்.

க்ருஷ்ணபிழ0ஹஉ0 வ்யவஹ (தைத். ஆரணி. க0. உக. சக)

"கிருஷ்ணபிங்களம் பிரமம்" என்றவிடத்து அவ்வுமையம்மையார் பிரமத்துக்குச் சாமரசியமாகச் சாதிக்கப்பட்டனர். ஆகலின், அந்த ஸ்தானம் உமாபதியாகிய பரப்பிரமத்துக்குரியதேயாம்.

(ச) அதுபின் எவ்வியல்பிற்று? அது சர்வகாமசமாயுக்தமாயது; (அஃதாவது) அது எஞ்ஞான்றும் போகங்களோடியைந்ததென்பதாம். அது பற்றியன்றே,

வொzஸ்ரஜ்ஞெத வவ-ஹ ஹ்ரூஹ ஸ்ஹ வ்யவஹரணாவிவக்ஷ்யா |

(தைத். உ. க)

"சர்வஜ்ஞதையுடைய பிரமத்தின் ஆனந்தத்தோடு கூடச் சமஸ்த போகங்களையும் அவன் துய்க்கின்றான்" என முக்தான்மாவுக்குப் பிரமானந்தத்தோடு கூடச் சமஸ்த போகங்களும் எய்துவனவாக நிரூபிக்கப்பட்டது.

(டு) விசுத்தம் என்றது விகாரத்தினற்றொடக்குண்ணுது என்னும் பொருட்டு;

வஷ்ஷ வாகூழிஜ்ஞஷ்ஹஃ வாஷ்ஷாஜ்ஞ (கைவ)

சூழி தூவணஷ்ஜ்ஞஷ்ஹஃ வாஷ்ஷாஜ்ஞ (தைத். ஆரணி. ங. கங. ச0)

"தமசுக்குமேலே சமஸ்தசாட்சியாய்" "தமசுக்குமேல் ஆதித்தியவர்ணர்" என்றற்றொடக்கத்த சுருதிகளிலே பிரகிருதி விகாரங்களைக் கடந்திருத்தல் பெறப்படுகின்றமையின்.

பிரகிருதி விகாரத்துக்குரிய இராகத் துவேஷ லோப முதலியவற்றைப் பிறப்பிக்காமையின் அது சிவமயமாகிய பதம் என்பது போதர விசுத்தம் எனப்பட்டது. இதனால் அது பரதத்துவப்பிரகாசமயமாய், மகானந்தத்தினைத் தேங்கிய பரமாகாசரூபமாய் (இருப்பதெனக்) கூறப்பட்டவாறுயிற்று.

(சு) விகாரமுடைய பிராகிருதப் பொருள்கட்கே சிருட்டியாதி கேட்கப்படலானும், அது அவற்றைக் கடந்திருத்தலானும் நித்தியம் எனப்பட்டது. பூதாகாயமுதலிய தேகப் பிரபஞ்சத்துக்கே சிருட்டி முதலியன எய்தும். பரமாகாச ரூபமாயுள்ள அப்பதத்துக்கு அவை இல்லை.

(ஆக்ஷேபம்)

யடா தர்ஹி ஏவ நாஸீந்நோ ஸதாஸீத்தர்ஹி கிமவோசத்கதரந்நாஸீத்கிமாஸீத்கஹமாயன்கிமாஸரம்பணம்கிமாதீந்தம்பீரம்பஜலம்கிமாஸீத்

(சுவே. உ. கஅ)

"எப்போது இருள் உளதாய், பகலும் இரவும் இலவாய், சத்தும் அசத்தும் இலவாய் இருந்தவோ, அப்போதே கேவலப்பொருளாகிய சிவன் ஒருவரே இருந்தார்" என்று கேட்கப்படலாற் சிவபெருமானெழிந்த பிற அனைத்துக்கும் பிரளயம் எய்துகின்றது. அங்ஙனமாயின், முக்தான்மாக்களுடைய அந்தப்பதம் நித்தியமாதல் எங்ஙனமாமெனின்,

(உத்தரம்) அன்று; முக்தான்மாக்களுடைய அப்பதமும் சிவதத்துவத்துள் அர்தர்ப்பாவமாதலின். தூய்மையுடைமைபாற் சிவதத்துவமானது இவர்கட்கும் சமானமாயுண்டே. சிருட்டிமுதலிய சக்கரத்துட்பட்ட பசுபாசங்களுக்கு விலக்ஷணமாயுள்ளது சிவதத்துவம். ஆதலின், பசுபாச விலக்ஷணயுள்ள சிவபிரானுர் பதத்துக்கு அநித்தியதத்துவப் பிரசங்கம் இல்லை.

(எ) அக்ஷியம் என்றது குறைதலும் கூடுதலும் இல்லை என்னும் பொருட்டு. குறைதல் மிகுதியாய்க்கொண்டு கன்மபலத்தையுடைய சுவர்க்க முதலியவற்றுக்கு விலக்ஷணமாதல்பற்றி அவ்வியல்பினதாயிற்று.

யொ வை நாராயணம் தேவம் ப்ரஹ்மாணம் வாஸுமஹம்வடிம் (கட. உ. கு)

"அவன் அத்துவாவின் கரைக்கண்ணதாகிய அந்தச் சிவபிரானுருடைய பரமபதத்தை அடைகின்றன்" என்று சுருதி கூறுகின்றது. "விஷ்ணுவின் பரமசொரூபம்" என்றது அறுவித அத்துவாவையும் கடந்த பரமாகாசம் எனப்படும் சிவனுருடைய ஸ்தானம் என்றன்றே கூறப்படுகின்றது.

ஸ்வஸ்வரூபாவிர்பாவஸ்திதி ரூபா வை நாராயணசக்தி

(சாந். அ. கடு. ச)

"பிரமலோகத்தை அடைந்து, அவன் மீளத் திரும்புவானல்லன்" என்ற விடத்தி அநாவிருத்திலக்ஷணத்தையுடைய பிரமலோகம் என்று கூறப்படுவது இந்த ஸ்தானமே.

வாவ்ராவ்ருகஷவடிம திவ்யம் வரிவஸ்தெஷுவஜி-ருதாரி

(அ) "அந்தத் திவ்யபதத்தை அடைந்து சமஸ்த கிலேசங்கள் ஒழிந்தவர்களாய்" என்றமையால், அப்பதத்தை அடைந்த பிரமசாதிருசிய முற்ற முக்தர்களின் இலக்ஷணம் கூறப்படுகின்றது. வாக்கு மனசுக்கு அகோசரமாய்த் திவ்ய சுவபாவமாயுள்ள மகாதேவரது பதத்தை எய்தி, அதற்கு வாய்ந்த ஞானயோகத்தினால் அடைந்த முக்தான்மாக்களே சமஸ்த கிலேசம் ஒழிந்தவர்களாய் இருப்பார்கள்.

அஸ்தும் எனப்படும் விநாசமும் கிலேசம் எனப்படும் அவித்தை முதலியவும் முற்றும் ஒழிந்தவர்களாய் இருக்கின்றனர். இதனால் முக்தான்மாக்கள் ஹேயகுணம் இல்லாதிருப்பார்கள் என்று கூறப்பட்டது. ஆகலின், அவர்கள் கல்யாணகுணமுடையர் என்று கூறப்பட்டதாயிற்று.

(கூ) சிவத்துவத்தை அடைந்த அவர்கள் சர்வஞ்ஞர் என்றமையால் அவர்கள் ஞானத்தை மூடியமலம் நாசமுற, யாண்டும் ஊடுருவிய ஞானசத்தியுடையவர்களாயும், சர்வஞ்ஞர்களாயும், எங்கும் நிறைந்தவர்களாயுமிருக்கின்றனர். அவர்கள் எங்கும் நிறைந்தவர் என்றது அனந்தசத்தியுடைமையின். இது (ச. ச. கநி-ஆம்) சூத்திரத்தினாற் கூறப்பட்டது.

(கo) அவர்கள் சுத்தர்கள் என்றது அவர்க்கு மலம் நீங்கியபோது உண்டாகிய சிவனரியல்புகள் தூயனவாய்ப் பிரகாசரூபமாய் ஞானகனமாய் இலந்தமையினாலாம். (ச. ச. எ-ஆம்) சூத்திரத்தில் ஆன்மாவானது சுவயம் பிரகாசமுடையதென்றும் சத்தியசங்கற்பத்துவாதி விசேஷகுணமுடையதென்றும் கூறப்பட்டது.

(கக) பரிபூரணர்களாய் இருக்கின்றார்கள் என்றது நித்தியதிருப்தர்களாய் இருப்பவர்களின் மேற்று; நிரதிசயானந்த சொரூப முண்மையாலும், விரும்பிய சகல போகங்களையுடைமையினாலுமாம். நிர்விகாரநிரதிசயானந்தத்தை அநுபவித்தலே அவர்கள் சுபாவம். இது (ச. ச. ககூ-ஆம்) சூத்திரத்திற் கூறப்பட்டது. ஆதலின், அவர்கள் பரிபூரணர்களும், தூயகாரியகரணங்களையுடையவர்களுமாம் என்பது;

வாகயாதியா ஹவதி (சாந். எ. உசூ. உ)

"ஒரு பிரகாரமாகின்றனர்; மூன்று பிரகாரமாகின்றனர்" என முக்தன் சுவேச்சையினாலே அநேக சரீரமெடுப்பதாகச் சுருதியினாற் பெறப்பட்டது. ஆகலின், முக்தர்கள் விரும்பி எடுத்த சரீரமுதலியன தூயனவே; தூய்தாயெ மகாமாயையினின்றுண்டானமையின்.

விகத்தம் என்றது ஆசிரயவிகாரத்திற்கு (முக்தான்மை) ஹேதுவாகா மையினாலாம்.

உஷ்ட்ரா சாயாஹிம் வஸ்ரூபாமயதெ (பிரு. சு. இ. கஉ)

"இறைவர் (மகா) மாயையாயிலாக அநேக வடிவங்கொண்டாராகத் தோற் றுகின்றது" என்ற மந்திரத்தினும் சிவபெருமானும் மகாமாயாசத்திகள் வாயிலாக கீலகண்டத்துவாதி இலக்ஷணமுடைய அநேக சரீரங் கொள்வா ராகக் கேட்கப்படுகின்றது.

வ்ருஷா ரூபெஹி வஸ்ரூபாமவ உரும் |

(இரு. வே. உ. கூகூ. க)

"உக்கிரர் (சிவபெருமான்) ஸ்திரமாகிய அங்கங்களோடு பலரூபமுடையர்" என்னும் மந்திரபாகம் சிவபெருமான் எடுக்கும் அப்பிராகிருதமாய் விசுத்த ஞான மயமாயுள்ள சரீரங்கள் உறுதியாயுள்ளன என்று கூறுகின்றது. எங் னனம் சிவபெருமான் விசுத்தமாகிய அநேக சரீரங்களை எடுக்கின்றாரோ, அங்னனம் முக்தர்களுமாம்.

(கஉ) பரமைசுவரியத்தோடு இசைந்தவர் என்பது சுவாதீனப் பிர விருத்தியுடையவராய்ப் பிறராற் செலுத்தப்படுகின்ற கார்ப்பண்ணியம் இல் லாத பரம விபூதியோடிசைந்தவர் எனப் பொருள்படும். (சு. சூ. கூ-ஆம்) சூத்திரத்தில் முக்தன் கன்மமுதலியவற்றால் வசியப்படாது பரமசுவாதந் திரியமாயிருப்பன் என்று கூறப்பட்டது. ஆகலின், முக்தான்மாக்கள் சுவ தந்திரர்களாதலிற் பரமைசுவரியத்தோடிசைந்தார்கள் என்பதாம்.

ஸதெஹாஸ்ய விதெஹாஸ்ய ஹவிர்பூரதெஹவாவ நஃ |

(கஙு) "பின்னரும் சுவேச்சையினாலே சதேகர்களாயேனும் விதேகர் களாயேனும் இருக்கின்றார்கள்" என்றமையால் சிவபதத்தை அடைந்த அவர்கள் சிவ சங்கற்பமின்றி ஓர் கால் தூய சரீரேந்திரியங்களையுடையர்க ளாகப் போகந் துய்ப்பவராகின்றார்கள் என்பதாம். ஓர்கால் தேகேந்திரியங் களில்லாது கேவலம் இயல்பாகிய வியாபக ஞானத்தினும் சகல போகத்தை யும் அநுபவிப்பவர்களாகின்றார்கள். அதுமேலே (சு. சூ. கஉ-கஅம்) சூத்தி ரத்தில் அதற்கு வாய்ந்த சுருதியை அதிசரித்துக் கூறப்பட்டது. ஆகலின், அவர்கள் இஷ்டப்பிரகாரம் சதேகர்களாயேனும் விதேகர்களாயேனும் நிற் றார்கள்.

விரூபிவெஹ்யோ விஶ்வரூபிவெஹ்யஶ் சொ நஃ |

(பசுர். வே. சு. இ. சு. க)

"விரூபர்க்கும் விசுவரூபர்க்கும் நமஸ்காரம்" என்று சுருதி கூறுகின்றது. சிவபெருமானுடைய சாமியருணங்களுடையர்களாய் நித்திய சித்தர்களா புள்ளார்க்கு ரூபமிலதாதலும் அநேகரூபங்கொள்ளுதலும் உளவாம். அதே

சகரமூளவாய் விசுவரூபசரீரமெடுத்தலாற் சிவபெருமானுடைய சரீரங்கள் எவ்வாறே, அவ்வாறே நீலகண்டத்துவாதி இலக்ஷணங்கள் அவர் சாமீப குணமுண்டாயினுக்கு உளவாம்; சிலர்

நீலமீவா ஸ்ரிதிகண்டா: (யசுர். வே. சு. டி. கக. க)

"நீலக்கிரீவர் சிதிகண்டர்" என்றற்றொடக்கத்தனவாகச் சுருதிகள் கூறலான்.

(கச) இவ்வனம் எனக்கள் இயமாதியுடையராய் வேதாந்த இன்னிய மாகிய ஞானயோகத்திலே தாற்பரியமுடையவர்களாயிருக்கின்றார்களோ, மேலே கூறிய குணங்களையுடைய சிவ சாதிருச்சியமுற்ற அந்த முக்தர்கள் அந்தச் சிவனுருடைய பரமபதத்தை அடைந்து நிரதிசய தாபரூபமாய்ச் சகிக்கவியலாத கோரமாயுள்ள சம்சாரமண்டலத்திலே மீளத்திரும்புவாரல்லர். அவரைச் சம்சார தருமம் மீளப்பற்றாது. ஆகலின், *"பிரமலோகத்தை அடைந்து மீளாத்திரும்புவானல்லன்" என்று கூறப்பட்டது. சர்வஜ்ஞரும், சர்வசத்தியினரும், சர்வையசுவரிய சம்பன்னரும், சர்வாதிக்கரும், சர்வகர்ம சமாராத்தியரும், நிரஸ்த சமஸ்த தோஷகளங்கரும், நிரதிசய மங்கலகுண இரத்நாகரரும், விரூபாக்ஷருமாகிய பரப்பிரம உமாபதிவாருடைய எல்லையிறந்த ஆனந்த பிரகாசமாய், நித்தியமாய், அக்ஷயமாயுள்ள உலக பதத்தை அடைந்தவர்கள் சர்வஜ்ஞத்துவாதி குணங்களையுடையவர்களாய் மீளத்திரும்புதலின்றி அங்கே வசிக்கின்றனர்.

யதா தெவா கூர்ஜதிநாநா வ்யாபீயை யாகோசூஜெ்யாயணா

(தைத். ஆரணி. கo. க. ச)

---

*வேதாந்த சூத்திரத்து முதற் சூத்திரத்திற் கண்ட பிரமம் சத்திபேரடியைந்த சிவபெருமான் என்று சிவபுராண கைலாசசங்கிதை (கக: சo-ஆஞ்) களாலே கொண்டு நிருபிக்கப்பட்டிருக்கின்றது. ஆகலின் இத்தப் பிரமம் (உஉ-ஆம், உசு-ஆம்) உபக்கிரமணிகா இலக்கங்களிற் கண்ட (திருக்குறள், கூ) ஏகினனிய ஆதிபகவன் மேற்று. (உகூ-ஆம்) இலக்கத் தொடுத்து (உஅ-ஆம்) இலக்கம் வரையிலும், தகராதிகரணத்திலும் (க. கூ. ககூ), அலோபாதிகரணத்திலும் (கூ. கூ ஙசு), மற்றைய அதிகரணங்களிலும் ஒரே முடிவுற மிகுத்துத் தெளிக்கப்பட்ட நிருச்சிற்றம்பலத்தினராகிய சிஷ்களை பரப்பிரம வெபிராளை ஆப்பிராயணாதிகரணத்திலும் (சு. க. கஉ), ஆத்துமாதிகரணத்திலும் (சு. க. ங-லும், க. கூ. உசு-லும்) கண்டவாறு, இடையீடின்றி மரணாந்தம் வரையும் நேர்தலாகிய உபாசனையினுற் பரமசாமீபமுற்ற வெயோகிகள் (சு. சு. உஉ-ஆஞ்) சூத்திரத்துக்கு மூலமாய்நின்ற இந்த (சாள். அ. ஙஅ. கூஆஞ்) சுருதியிற் கண்ட பிரமலோகம் எனப்படும் சிவலோகமாகிய நிலத்தில், ஆத்தியாதிகரணத்திற் (கூ. கூ. சச) கண்டவாறு சிவசாரூப்பியமடைந்து, (தைத். உ. க. னும், சாள். அ. கஉ. கூ) னும் கண்டவாறு பிரமானந்தத்தோடெமஸ்தபோகங்களையும் துய்த்து சமித்துக் கிரீடித்து நீடுவாழ்வர் என்று இந்த இறுதி அதிகரணத்தினுல் நிரூபிக்கப்பட்டது.

சிவாகமங்களேயும் வெலயங்களேயும் ஆதிசைவர்களாகிய வெத்துவிஜர்களேயும் நிந்தனை செய்யும் இயற்கை பூண்ட மாயாவாதிகளுடைய வாயை அடக்குதற்கும், வேதோபப்பிருங்ஙண தெரியானே சைவசமயத்தை ஸ்தாபனஞ் செய்தற்கும் வாய்ந்த மகாபாசுபதாஸ்திரமாகிப் பெருமை படைத்தது இந்த நீலகண்டசொசரியுரகுவிய வைதிகசைவபாஷ்யமேயாம்.

(கடி) "எங்கே வித்துவான்கள் சிவானந்தந் துய்த்து மூன்றுவஸ்துள்ள தானங்களுட் பிரவேசிக்கின்றார்களோ" என்று சுருதி கூறுவதால் நிரதிசயானந்த பிரகாசகனமாகிய பரப்பிரம சிவத்திலே சமரசத்தை அடைந்த முக்தர்கள் பிரகாச சரீரங்களையுடையவர்களாய், சர்வஜ்ஞர்களாய், சர்வகர்தர்களாய், சாந்தர்களாய், பரிபூரணர்களாய் நித்திய பரமசுவரியங்களுக்கு ஆதாரர்களாய், முற்றும் நீங்கிய மலாவரணங்களையுடையவர்களாய், பாண்டும் சிவத்தைப் பார்ப்பவர்களாய், அந்தச் சிவபிரானுரை ஆன்மாவாகக் கொண்டவர்களாய், அவர்க்குரிய பரமாகாசத்திலேயுள்ளனவாம் விரும்பிய ஸ்தானங்களை அடைந்து இஷ்டப்பிரகாரம் வாய்த்த சகல போகங்களைத் துய்ப்பவர்களாய், அவரோடு கூட எப்போதும் யாண்டும் பிரகாசிக்கின்றார்கள் என்பதாம். சர்வம் சமஞ்சசமே.

ஸ்வதாவாயு-ஸ்வடஉ0உஸு-ஸ்ரு-ஸிஷாஷ்ரெயாதிதாஷ்டநா |
க்ருதஸேதுநயா ஸாஷ்ய0 கெவல0 ஜதி ஸாதரஃ॥

சுவேதாசாரியருடைய இரு பதங்களுக்குந் தொண்டு செய்தலாற் பிரகாசிக்கப்பட்ட மார்க்கத்தினைற் கேவலம் பக்தி மார்க்கமாய் இந்தப் பாஷ்யம் எம்மால் இயற்றப்பட்டது.

ஸ்ரீ நீலகண்டசிவாசாரியர்

அருளிய

பிரமசூத்திர சிவாத்துவித சைவபாஷ்யம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ நீலகண்டசிவாசாரியசுவாமிகள்
விம்பப் பிரதிஷ்டை.

☞ மத்துவர்களுக்கு ஆனந்ததீர்த்தரும், வைணவர்களுக்கு இராமா நுஜாசாரியரும், ஏகான்மவாதிகளுக்குச் சங்கராசாரியரும் ஆசாரியர்க ளாய் அமர்ந்தாற் போல, சிவபெருமானே ஆண்டவர் என்றும் ஆன்மாக் களே அடிமை என்றுங் கொண்டு சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டொ ழுகும் சிவத்துவிஜர்களுக்கும் மற்றைச் சைவசமயிகளுக்கும் ஆசாரியராய், (ஒரே முக்கியப் பொருள் பொதிந்த) பிரமசூத்திரங்களுக்குச் சத்தியார்த் தஞ் செய்து வைதிகசைவசமயஸ்தாபனஞ் செய்த பரமாசாரியராகிய ஸ்ரீநீல கண்டசிவாசாரியரது திருவுருவவிம்பத்தைத் தொண்டைமண்டலத்துவடதிரு முல்லைவாயிலிற் போல மற்றைய சிவாலயங்களேறும் பிரதிட்டை செய்து ஆவணி மாசத்துப் பூசநக்ஷத்திரத்திற் குருபூசை செய்து, இராப்போதிலே உற்சவம் நடாத்தி வைதிக சைவசமயப் பிரபுதிலகர்கள்யாவரும் பெரும் புக ழையும் சிவபுண்ணியத்தையும் பெற்று நீடு வாழ்வாராக.

இங்ஙனம்,
ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
இ	ச	பதினெட்மோகிய	எட்டுமோகிய
எ	சக	இல்லியாயல்கொண்டே	அலூர்ஆழி (பா. வி. உ. உ. சு)

என்னுஞ் சூத்திரத்தைப் பொருட்படுத்தாது.

உச	சo	கலுவநா	கலுநா
ஙெ	ஙெ	கலுவவ	கலுவ
ஙெ	ஙெ	கலுவநஃ	கலுநஃ
கச	க	பட்டது	பாலது
அஅ	கஉ	ஆயு-ர்ய-ா	ஆயு-ாய-ா
அக	க	உ)ற்	க)ற்
உ00	கஅ	சூக்திர	சூத்திர
உஎக	உக	ழீதாஃ	வீதாஃ
உஅ0	சஉ	தாமடிமை	தாடிமடிமை
உஅக	சக	தய்த்தபுத்	தய்த்தப்பு
உகச	ச	வ்யஸ	வ்யக்
உகஉ	கஇ	வ-ையு-ா	வ-ையு-ா
ஙெ	சக	வ-ாயிவீ	வ்யயிவீ
சo0	உச	ஊ-ிஉ-ர	ஊ-ிஉ-ர
சoஉ	சக	வித்தலா	வித்தாலா
சoக	க	ர-ிவ	ர-ிவ
சசo	உக	என்ற	என்றன்றே
சசச	சo	எதனற்	எதனல்
சசக	உச	பவெனவாய்	பவெதாய்
சஇஅ	க	இல்வனம்	(ஆகேஷபம்) இல்வனம்
சஎஉ	சஉ	(எ)	(அ)
சஎஅ	எ	உக. சக	கo. உக. சக
சஎக	சஎ	ஜஜர0	தஜர0
சகஉ	உக	யாரிணி	யாரிணீ
ச00	சo	ஜ்வஜ்ஃ	ஜ்வஜ்ஃ
ச0க	உக	கழ‖	கழ (வாயு. உத். ச: உஅ)
சகக	உக	போலிகளே	போலிகளே
சஉக	சஉ	களவ்ஜி	கீளவ்ஜி
சஉச	உஎ	னின்ற	னின்றமுதற்கண்
இஉக	எ	என்பதவித்தி	வித்தி
இசo	இ	ரகயிம்	ரகியம்
கoஎ	உo	வானன்	வானவன்

சுக-ஆம் பக்கத்து ச-ஆம் வரியில் "தேவனென்றே" என்றற்றொடக்கத்த ஏழு வரிகளையும் நீக்கி வாசிக்க.

பிருகதாரணியம் (ச. ச. இ-இற்) காணப்படும்

ஸூத்ர வாகரொ த்ருஷ்டவ்ய ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யஶ்ச।

"(பரம) ஆன்மாவானவர் காணற்பாலர், சிரவணஞ்செய்யற்பாலர், மனனஞ் செய்யற்பாலர், தியானஞ் செய்யற்பாலர்" என்னும் மந்திரத்துக்கு உபப் பிருங்கணமாக உள்ளது

ஸ்ரோதவ்ய ஶ்ருதிஶ0 ஸாஸ்த்ரஜ்ஞைர்ஸ்ரோவ்யஸ்ரீஶ்ச।
ஜ்ஞாதா அவ்ருதிஶ0 ஸ்ருயெர் வெஷாஷெஷ ஸிதி ஸ0க்ரஹஃ॥

"சம்புவானவர் எஞ்ஞான்றும் கேட்கற்பாலர், பொருந்துமாற்றுற் சிந்திக் கற்பாலர், வேதாந்தங்களால் எஞ்ஞான்றும் அறிந்து சங்கரர் தியானிக்கற் பாலர்" என்னும் உபதேசகாண்டத்து (சஅ: அ, கூ-ஆம்) சுலோகமேயாம். உபதேசகாண்டத்துள்ள சுலோகத்திற் சம்பு சங்கரர் என்னும் திருநாமங் களோடு சைவபாஷ்யத்தில் இந்தச் சுலோகம் காணப்பட்டதேயாக, பிற் காலத்து மாயாவாத பண்டிதரால் அத்திருநாமங்கள் தொலைத்துச் சுலோ கம் சரிப்படுத்தப்பட்டிருந்தமையின், மேலே குறித்த உபதேசகாண்ட சுலோகத்தையும் அதன் அர்த்தத்தையும் (கஅக-ஆம்) பக்கத்து (கூ-ஆம்) வரியில் ஸ்ரோதவ்ய என்று தொடங்கி கஙூ-ஆம் வரியில் ஏதக்கள் என்று முடியும் வரையுமுள்ள வரிகளுக்குப் பதிலாகக் கொண்டு வாசிக்க.

23172